ஆபரண மாளிகை
நகைசேமிப்புத் திட்டத்தில் இணைந்து அதிஷ்டசாலிகள் ஆகுங்கள். அதிஷ்டசாலி தொடர்ந்து பணம் கட்டத் தேவையில்லை.
நியூ ரூபி
7, rue Cail 75010 Paris Tel: 01 42 05 18 05

NORD OPTICAL
லாச்சப்பலில் முதல் முறையாக கண் பார்வைக்குரிய கண்ணாடி, லென்ஸ், என்பன இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
18, rue Demarquay, 75010 Paris
Gare du Nord (La Chapelle)
Horraires d'ouverture Lundi au Samedi 10h à 19h30
TEL: 01.75.42.92.30



ஐரோப்பியப் பதிப்பு

# ஈழமுரசு®

முரசு 03 | 17 - 30 ஒக்டோபர் 2017 | முழக்கம் 058



பிரான்ஸ் வாழ் வர்த்தகர்களே
உங்கள் வர்த்தக விளம்பரங்களை எமது தளத்தில் விளம்பரம் செய்து அதிக பயன் பெறுங்கள்
பரிஸ்தமிழ்.கொம்
www.ParisTamil.Com
பரிஸ்தமிழ்.கொம்மில் விளம்பரம் செய்ய தொடர்பு:
செல்பேசி: 06 64 96 80 79
தொலைபேசி: 09 70 40 50 71
www.paristamil.com




## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு மைத்திரிபால வழங்கியுள்ள பொறுப்பற்ற பதில்

காணாமல் போன உறவைத்தேடிய ஐந்தாவது உறவும் உயிரிழந்தது

## ஓநாய்களிடம் ஆடுகளை விலைபேசும் மேய்ப்பர்

## தலைவர் போராட்டத்தை கைகளில் தந்தது வெல்வதற்காகத்தான் வீழ்வதற்காக அல்ல..

## குர்தி சுதந்திரத் தளபதியுடன் இரண்டரை மணிநேரப் பயணம்

## தமிழ் மக்களின் குறைகளைக் கண்டுகொள்ளாத தமிழ் அரசியல் தலைமைகள்

## திணிக்கப்படும் கடன் சுமை!

## இந்தியாவில் ஐரோப்பிய ஒன்றிய மாநாடு


BHARATH
51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20
Spécialitées Indienne et Srilankaise
www.restaurantbharath.com
www.cafe-bharath.com

V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92
E-mail: vtsuperstore@organge.fr

Gopal and co Supermarche
72 rue Louis Blanc, 75010 Paris
M°: La chapelle ou Gare du Nord
Tél.: 01 46 07 11 10 | Fax: 01 46 07 13 03

Boulangerie - Pâtisserie
208 Rue du Faubourg Saint Denis - 75010 Paris
Tél: 01 42 05 00 00 / e-mail : hotbreads@hotmail.fr
Hot Breads
திருமணம், பிறந்தநாள் மற்றும் அனைத்து சுபகாரியங்களுக்கும் தேவையான கேக்குகள், சிற்றுண்டி வகைகள், பாண், பிஸ்கட்டுகள் சிறந்த முறையில் செய்து தரப்படும்
Eggless கேக்குகள் எமது சிறப்புத் தயாரிப்புகள்

எங்கேயும்... எப்போதும்...
Kingstravels
A Better way to fly!
நியாயமான கட்டணம்....
நம்பிக்கையான பயணத்திற்கான உத்தரவாதம்...
30, rue Philippe de Girard - 75010 Paris
Tél: 01 42 09 19 09 - 01 40 38 18 27
M°: La Chapelle / Gare du Nord
email: kingstravels@orange.fr

IMPORT EXPORT
லாச்சப்பல்
நிஷான் சுப்பர் மார்சே
பல்பொருள் வாணிபம்
64, rue louis blanc, 75010 Paris
Tél./Fax: 01 44 72 06 03
M°: La Chapelle Gare du nord

Express station service
• எரிபொருள் நிரப்பு நிலையம்
• பணம் அனுப்பும் சேவை
• புத்தம் புதிய கைத்தொலைபேசிகள்
• தொலைபேசி உதிரிப்பாகங்கள்
நம்பிக்கை,
நாணயம்,
உத்தரவாதம்...
MoneyGram. Ria Money Transfer WU Western Union Sigue Money Transfer
25 boulevard de la Chapelle 75010 Paris M°: La chapelle
Tél.: 01 40 18 07 44
E-mail: express-station@hotmail.com

விரைவில்... TKTV.TV TAMILKATHIR.COM
இணையத் தொலைக்காட்சி!
தொடர்புகளுக்கு
tktv.info@gmail.com

VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04




Aubervilliers Quatre chemins ல் ஒரு தமிழ்க்கடை
Anna Marché
அனைத்து மளிகைப்பொருட்களுக்கும்...
மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு

விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்
V.I.P Sarl 4 rue Emest Prévost,
93300 Aubervillers. Tél. : 07 52 94 50 65

பாரீஸ் அறிவாலயம்
Paris Arivalayam

7, rue Perdonnet, 75010 Paris
Metro : La chapelle Tel: 01 44 72 03 34
இலங்கை இந்திய புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கள், மேலும் நவீன தேடலுக்கான அனைத்து வெளியீடுகள் பாடசாலை அலுவலகத் தேவைக்கான உபகரணங்கள், சுயமுன்னேற்ற நூல்கள் அனைத்தும் ஒரே இடத்தில் வாங்கிட இன்றே செல்ல வேண்டிய இடம்.

AACHI BOUCHERIE
பொண்டியில் ஆச்சி இறைச்சிக்கடை
உங்களிற்காக மிகவும் மலிவு விலையில்
தரமான இறைச்சி வகைகள்

ஆட்டிறைச்சி,
மாட்டிறைச்சி,
உயிர்க்கோழி,
கோழிக்கால்,
பாங்கிறைச்சிகள்
120 Rue Roger Salengro
93140 Bondy
HALAL
Tél : 07 51 08 14 83
07 51 27 72 38

Ragawa Tailor
அனைத்து விதமான ஆடைகளும்
உங்கள் வசதிக்கேற்ப
வடிவமைத்துக்
கொடுக்கப்படும்.
01 40 35 14 77

190 Rue Fbg St. Denis
75010 Paris
M°: Gare du Nord

Baby Baloon
பேபி பலூன் டெக்கரேஷன்

Port : 06 13 06 20 29
Tél : 01 39 80 85 23

# ASCES
## 26 ஆண்டுகளாக நடைபெறும் பதிவு செய்யப்பட்ட பாடசாலை

BAC, BREVET பரீட்சைகளில் 100 வீத சித்தி எமது மாணவர்களுக்கு வாழ்த்துக்கள்

விபரங்கள் அறிய எமது இணையத்தளம் www.asces.fr Tél : 07 82 88 59 16 E-mail : asces@free.fr

சிறந்த முறையில் பெண்களுக்கான சிகை, ஆடை- புடவை, முக அலங்கார மற்றும் கேக் அலங்கார வகுப்பு ஆரம்பம். வகுப்பு முடிவில் வேலை உடனே!

Grande Section, CP, CE,CM, Collège, Lycée வகுப்புகள்
Maths, Français, Physique, Chimie, SVT, Histoire

பெரியவர்களுக்கான புதிய பிரஞ்சு வகுப்புகள்

17-10--2017 செவ்வாய் வியாழன் மாலை 4.30 மணி
14-10-2017 சனி ஞாயிறு மாலை 4 மணி
05-11-2017 ஞாயிறு காலை 10 மணி (1 நாள்வகுப்பு)
16-10-2017 திங்கள் செவ்வாய் காலை 9 மணி
15-10-2017 ஞாயிறு காலை 10 மணி (Nationality வகுப்பு)
1-10-2017 திங்கள் செவ்வாய் காலை 10.30 மணி

திறமையான ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன
BAC , BREVET பரீட்சைகளில் 100வீத சித்தி
Cambridge University ஆல் நடாத்தப்படும்
Starters, Movers, Flyers, Ket, Pet பரீட்சைக்கான வகுப்புகள்

எமது வெளியீடுகள்
நடைமுறை பிரஞ்சு – பிரஞ்சு இலக்கணம் பயில சிறந்தநூல்
பிரஞ்சு – தமிழ், தமிழ் – பிரஞ்சு அகராதி
பிரஞ்சு பேசுவோம் பகுதி 1 & 2 CD உடன்

LA COURNEUVE இல்
35, rue Maurice Lachâtre - 93120 La Courneuve

BOBIGNY
38, rue Gaston Crépin 93000 Bobigny

PARIS
3, place de Joinville 75019 Paris M° Crimée

Epinay sur seine 42, rue Félix Merlin 93800 Epinay sur Seine

## Bridal makeup & cake icing
மணப்பெண் அலங்காரம்,
கேக் அலங்காரம் சனி காலை 9.30 மணி ஆரம்பம்
பதிவுகள் இப்போதே செய்யுங்கள்

புதன், சனி, ஞாயிறுகளில்
தமிழ், நடனம், சங்கீதம், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், ஓர்கன், கிட்டார் வகுப்புகள்
தையல் வகுப்புகள் ஆரம்பம்

ஈழமுரசு®
mediacentre ஊடகமையம்
முரசு 03 17 – 30 ஒக்டோபர் 2017 முழக்கம் 058

“தமிழீழத் தனியரசே தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு இறுதியான, உறுதியான தீர்வு என்பதில் எமக்கு அசையாத நம்பிக்கையும் தெளிவும் உண்டு. எமது நிலைப்பாட்டை எமது எதிரி மட்டுமன்றி, முழு உலகமும் நன்கறியும்.”

– தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்



# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு மைத்திரிபால வழங்கியுள்ள பொறுப்பற்ற பதில்

## காணாமல்போன உறவைத்தேடிய ஐந்தாவது உறவும் உயிரிழந்தது!

*(17.10.2017, செவ்வாய்க்கிழமை)*

தங்காலைச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தனது மகன் நாமல் ராஜபக்சவைப் பார்க்கச் சென்ற சிறீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, தனது மகன் இருந்த நிலையைப் பார்த்து கண்கலங்கியதாக கொழும்பு ஊடகங்கள் நிழற்படங்களுடன் செய்திகளை வெளியிட்டுள்ளன. தனிப்பட்ட பயணமாக ஜப்பான் சென்றிருந்த மகிந்த, நீதிமன்றத் தடை உத்தரவை மீறி மத்தல விமான நிலையத்தை இந்தியாவிற்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஹம்பாந்தோட்டையில் ஆர்ப்பாட்டம் நடத்திய குற்றச்சாட்டில் தனது மகன் நாமல் மற்றும் அவரது ஆதரவாளர்கள் ஆறு பேர் கைது செய்யப்பட்டதை யறிந்து, தனது பயணத்தை இடைநடுவில் நிறுத்திவிட்டு நாடுதிரும்பியிருந்தார்.

இந்நிலையில், நாட்டை வந்தடைந்த மகிந்த உடனடியான தனது மகனைப் பார்ப்பதற்காக தனது மனைவி மற்றும் குழுவினருடன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (15) சிறைக்குச் சென்றார். அப்போதே சிறையில் இருந்த மகனைப் பார்த்து மகிந்த கண் கலங்கியுள்ளார். தந்தையாக மகனின் நிலைகண்டு தடுமாறிய மகிந்த பெரும் கவலை அடைந்ததாக அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்தனர். அத்துடன், நாமலை பார்வையிட்ட பின்னர் மகிந்த பெரும் சோகத்துடன் வெளியேறும் நிழற்படங்கள் வெளியாகியுள்ளன. சிறைச்சாலையை விட்டு வெளியே வந்த மகிந்த ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டார். ‘இந்த நாட்டு சொத்துக் களை விற்பதற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப் படுகின்றனர். விற்பனை செய்ய முயற்சிக்கும் துறைமுகம் மற்றும் விமான நிலையங்கள் மீது நாட்டு மக்களுக்கும் உரிமை உண்டு’ என மகிந்த ராஜ பக்ச தெரிவித்தார்.

ஆனால், அதேவேளை மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது குடும்ப ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டவர்களும் அதற்கு முன்பாக கைது செய்யப்பட்டவர்களும் என 160 வரையான தமிழ் அரசியல் கைதிகள் இலங்கையின் பல்வேறு சிறைச்சாலைகளில் விசாரணைகளின்றியும், விடுதலையின்றியும் பல ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களை விடுவிக்குமாறு கோரி அவர்களது உறவுகளும் தமிழ் மக்க ளும் கண்ணீருடன் தொடர்ச்சியாக போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். ஆனால் அவர்களைப் பற்றிச் சிந்திக்காத மகிந்த ராஜபக்ச, தனது மகன் ஒருசில நாள் விளக்கமறியலில் வைக்கப்பட்டதற்கே கண்ணீர் வடித்ததுடன், பெரும் சோகத்துடன் இருக்கின்றார்.

இதேவேளை, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான போராட் டம் வடக்கில் முனைப்புடன் இடம்பெற்று வரும் நிலையில், தமிழ் அரசியல் கைதிகளுடைய விடுதலையை வலியுறுத்தி, தேசிய தமிழ்மொழி தினவிழா வில் கலந்து கொள்ள யாழ்ப்பாணம் சென்றிருந்த சிறீலங்கா ஜனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவித்து கறுப்புக்கொடி போராட்டம் ஒன்று கடந்த 14ம் திகதி சனிக்கிழமை யாழ்நகரில் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தினை பொது அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் ஒழுங்கு செய்திருந்தன.



உயிரிழந்த ஜெசிந்தா பீரிஸ மற்றும் காணாமல்போன அவரது கணவனும் மகனும்

போராட்டத்தின்போது பெருமளவில் இராணுவம், விசேட அதிரடிப்படை மற்றும் காவல்துறை குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. தமிழ் அரசியல்கைதிகள் ஆபத்தான நிலையில் அநுராதபுரம் சிறைச்சாலை யில் உண்ணாவிரதம் இருந்து வரும் நிலையில், அவர்களுடைய கோரிக்கை களை நிறைவேற்றாது மைத்திரிபால யாழ்ப்பாணம் சென்றிருந்தார்.

குறித்த போராட்டத்திற்கு காவல்துறையினர் யாழ். நீதிமன்றிடமிருந்து தடையுத்தரவு பெற்றிருந்த நிலையில் யாழ்.பல்கலைக்கழகம் முன்பாக ஒன்று கூடிய போராட்டக்காரர்கள், பின்னர் யாழ்.இந்து கல்லூரிக்கு அருகாமையில் காங்கேசன்துறை வீதியில் போராட்டத்தில் ஈடுபட்டிருந் தனர். இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள், அரசியல் கைதி களை விடுதலை செய், தமிழ் மக்களை ஏமாற்றாதே, இனியும் உங்களை நம்ப தயாரில்லை, மைத்திரியே வெளியேறு என கோசம் எழுப்பினார்கள். போராட்டம் நடைபெற்ற இடத்தை கடந்து செல்லும்போது திடீரென காரை நிறுத்திய மைத்திரிபால, காரில் இருந்து இறங்கி போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு வந்தார். இதன்போது பாதுகாப்பு பிரிவு ஜனாதிபதியை சுற்றி நின்றனர். அவர்களை சுற்றி போராட்டக்காரர்கள் நின்றார்கள். இதன்போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் மைத்திரிபாலவுடன் பேசினார்கள். பிரச்சினைகள் தொடர்பில் பேசி தீர்க்கலாம் என மைத்திரிபால கூறினார். எனினும் அதனை மறுத்து பல தடவைகள் பேசப்பட்டது. இப்பொழுது முடிவு வேண்டும் என போராட்டக்காரர்கள் உறுதியாக நின்றனர். தொடர்ந் தும் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். இதன்போது மைத்திரிபாலவுடன் வந்திருந்த உத்தியோகஸ்தர் ஒருவர் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை முன்னுக்கு வருமாறு அழைத்திருந்தார். எனினும் அதற்கு அவர் மறுப்பு தெரிவித்து தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுடன் நின்றிருந்தார். இதனை அடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வி யில் முடிந்த நிலையில் மைத்திரிபால அங்கிருந்து வெளியேறினார்.

தொடர்ந்தும் போராட்டத்தில் அங்கிருந்தவர்கள் ஈடுபட்டார்கள். மைத்திரிபால சென்ற வாகனத்தின் மீதும் கறுப்பு துணிகளால் எறிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். ஜனாதிபதி உள்ளே சென்றதும் போராட்டமும் சற்று நேரத்தின் பின்னர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு அனைவரும் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இதேவேளை, கிளிநொச்சிக்கு சனிக்கிழமை பயணம் மேற்கொண்ட மைத்திரிபால சிறிசேன காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட பால் உற்பத்தி நிலையத்தை திறந்துவைத்துவிட்டு, திரும்பும் வழியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் காத்திருந்தனர். அவர்களைக் கண்ட மைத்திரிபால சிறிசேன காரை விட்டு இறங்கிச் சென்று சந்தித்தார். காணா மல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தாம் மைத்திரிபாலவை பிரத்தி யேகமாகச் சந்திக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். அதை ஏற்றுக்கொண்ட அவர், கிளிநொச்சியில் இருந்து கொழும்பு வருவதற்கான வாகன ஒழுங்குகள் ஏற்படுத்தித் தரப்படும் என்று தெரிவித்தார். தமது கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கையளித்தனர்.

தொடர்ச்சி 04ம் பக்கம்

Neuilly sur marne, Meaux, Torcy, Lagny
வாழ் மக்களின் வசதிக்கேற்ப Chelles மாநகரிலே
EURO SAGEN
மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள்
மற்றும் கடலுணவு வகைகள்
Ria MoneyGram WESTERN UNION
Import & Export
62 av du Maréchal Foch, 77500 Chelles
Tél: 0160202947 | Port: 0667204000

தரமான கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
Ocean Indien
30 ஈரோவுக்கு மேல் பொருட்கள் வாங்கினால் 5% சிறப்புக்கழிவு
195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE
Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60

பாலன்ஸ் சலூான்
தமிழர்களால் நடத்தப்படும் ஆண்கள் அழகு நிலையம்

29 rue Philippe de Girard, 75010 Paris. M° La Chapelle
Tél: 06 63 01 75 80

வீடு வாங்குவதற்கும் அனைத்து விதமான கடன் தேவைகளிற்கும்
நம்பிக்கையுடன் நாடுங்கள்
Crédits - Solutions
திரு.சிவா
2-4 rue de l'Orillon - 75011 Paris
0973255923 - 0665660305
email: creditssolutions@gmail.com

மக்கள் கடை
NEW CASTEL

உங்கள் தேவைகளே
எங்கள் சேவை
61, rue Louis Blanc,75010 Paris.
Tel: 01 42 05 13 67 Fax: 01 42 05 99 02

ஈழமுரசு®

"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

"MEDIACENTRE"
JOURNAL TAMOUL
bimensuel **Gratuit**

MEDIACENTRE
BP 40
93141 BONDY PDC,
France
Port: 00 33 781 808 116

இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீடத் தொடர்புகட்கு:
@: eelamurazu@gmail.com
விளம்பர விநியோகத் தொடர்புகட்கு:
@: eelamurazuadm@gmail.com

**Le Président:** S.Pulenthiran
**தலைவர்:** சு.புலேந்திரன்

**Redacteur:** K.Jeisanthar
**பொறுப்பாசிரியர்:** கி.ஜெய்சந்தர்

**ஆசிரியர் பீடம்**
எழுவான் (தென்தமிழீழம்)
வீரமணி (வடதமிழீழம்)
மதிமாறன் (தமிழகம்)
சுந்தரதன் (பிரான்ஸ்)
சோழகரிகாலன் (பிரான்ஸ்)
விவேகன் (பிரான்ஸ்)
சுமந்திரன் (பிரான்ஸ்)
அருணன் (பிரான்ஸ்)
ச.ச.முத்து (பிரித்தானியா)
சேயோன் (பிரித்தானியா)
சேரமான் (ஐரோப்பா)
ஈசன் (கனடா)

**விளம்பரம் / விநியோகம்**
சுஜி (பிரான்ஸ்)
அருளப்பு (பிரான்ஸ்)
கஜி (பிரான்ஸ்)
கஜன் (பிரான்ஸ்)
மோகன் (பிரித்தானியா)

**Impression:**
IPS,
ZI de Iscles, 30 av. des Alpines,
13160 Châteaurenard

**பிரித்தானியா**
Mohan: 00 44 790 4631 883
@: eelamurazu.uk@gmail.com

**சந்தா விபரம்**
**வருட சந்தா**
பிரான்ஸ் 75€
ஐரோப்பா 85€
ஏனைய நாடுகள் 99€

**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.
ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

**லாச்சப்பலில்**
**ஈழமுரசுடனான விளம்பரத் தொடர்புகளுக்கு**
**பாலன்:**
**29, rue Philippe de Girard, 75010 Paris**
**Port: 06 63 01 75 80**

# காணாமல் ஆக்கப்பட்டோரின்...

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மைத்திரிபால சிறிசேனவிடம் தங்களின் பிள்ளைகள் இரகசிய முகாம்களில் இன்னும் இருப்பதாக குறிப்பிட்டனர். அதற்கு பதிலளித்த மைத்திரிபால சிறிசேன, சிறப்பு வாகன ஏற்பாடும் காவல்துறையின் பாதுகாப்பும் வழங்குகிறேன் நீங்கள் (காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள்) எங்கு இரகசிய முகாம் இருக்கின்றது என்று நம்புகிறீர்களோ அங்கு சென்று பார்வையிடுங்கள் எனக் கேலியாகப் பொறுப்பற்ற விதத்தில் பதலளித்துள்ளார். இரகசிய முகாம்கள் எங்கிருக்கின்றது என்பதைக் கண்டுபிடித்து அவர்களின் உறவுகளை மீட்டுக் கொடுக்கவேண்டிய நாட்டை ஆளும் பொறுப்பிலுள்ள மைத்திரிபால சிறீசேன, இவ்வாறு பொறுப்பற்ற விதத்தில் பதிலளித்தது அம்மக்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

இதுஇவ்வாறிருக்க, காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டுபிடித்துத் தருமாறு வலியுறுத்தி போராட்டம் நடத்திவரும் அவர்களது உறவினர்களில் 5வது நபரும் உயிரிழந்தார். இவ்வாறு ஏற்கனவே நான்கு பேர் உயிரிழந்த நிலையில், தனது கணவன் மற்றும் மகனைத் தேடி வந்தவரான ஜெசிந்தா பீரிஸ் கடந்த 14ம் திகதி மாரடைப்பால் காலமானார். காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைக் கண்டுபிடித்துத் தருமாறு கோரி உறவினர்கள் வடக்கில் முன்னெடுத்து வரும் போராட்டங்கள் 230 நாள்களைக் (7 மாதங்களை) கடந்துள்ளன. இந்தக் காலப் பகுதிக்குள் தமது உறவுகளைத் தேடும் 5 பேர் உயிரிழந்துள்ளனர். கொழும்பில் 2007ம் ஆண்டு வெள்ளைவானில் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட ரொஷான் லியோன் (மகன்) மற்றும் அமலன் லியோன் (கணவர்) ஆகியோரைத் தொடர்ந்து தேடிவந்த ஜெசிந்தா பீரீஸ் இவர்களில் இறுதியாக உயிரிழந்தவர். தனது கணவனும், மகனும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட நிலையில், நீதி கோரி பல வருடங்களாகப் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தவர் ஜெசிந்தா பீரிஸ். கொழும்பில் கடற்படையின் இரகசிய முகாமில் கண்டெடுக்கப்பட்ட 12 அடையாள அட்டைகள் தொடர்பான வழக்கு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று வருகிறது. கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற வழக்கு விசாரணையிலும் அவர் பங்கேற்றிருந்தார்.

8 வருடங்களுக்கு முன்னர் முள்ளிவாய்க்காலில் இராணுவத்திடம் சரணடைந்து காணாமல்போன போராளி வீமனைத் தேடி வந்த அவரது தாயார் ஈஸ்வரன் ருத்ராதேவி மாரடைப்பால் கடந்த 31ம் திகதி உயிரிழந்தார்.

இதபோல், கணவனைத்தேடி துரைசிங்கம் ஈஸ்வரியும், பிள்ளையைத் தேடி மகேந்திரராஜாவும், மற்றொரு பிள்ளையைத் தேடி தாய் கீர்த்தனாவும் ஏற்கனவே உயிரிழந்துள்ளனர். காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்ததோ, ஏது நடந்ததோ என்ற ஏக்கமும், மன அழுத்தமுமே இவர்களின் உயிரிழப்புக்கும் முக்கிய காரணமாக அமைந்துள்ளது என்று மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் கண்டனம் தெரிவிக்கின்றனர். இவர்களின் துயரம் குறித்துக் கவலை கொள்ளாது இந்த அரசு பாராமுகமாக இருக்கின்றது என்றும் அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# சிறீலங்காவின் புதிய....

அத்துடன், சிறீலங்கா அரசாங்கத்தின் அரசமைப்புக்கான பொதுமக்கள் கருத்தறியும் குழுவிடமும் எம்மால் நேரடியாகக் கையளிக்கப்பட்டது. மேலும் இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே, பிரான்ஸ், ஜேர்மனி, கனடா மற்றும் அவுஸ்திரேலியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடமும் அந்தத் தீர்வுத்திட்டம் நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட்டது.

தமிழ் மக்கள் பேரவை ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய இனத்தின் பிரதிநிதியாகவே இந்த அசியல் தீர்வுத் திட்டத்தை வெளியிட்டது என்பதனை வடக்கிலும் கிழக்கிலும் நடத்தப்பட்ட 'எழுக தமிழ்!' பேரணிகள் நிரூபித்தன. இந்தத் தீர்வுத் திட்டத்தை தமிழ் மக்கள், பல்லாயிரக் கணக்கில் திரண்டு அங்கீகரித்திருந்தனர்.

அந்த வகையில் தமிழ்த் தேசிய இறையாண்மைப் பிரச்சினைக்கான தீர்வு இன்னதுதான் என்பது மீளவும் வலியுறுத்தப்பட்டது. இந்த நிலையில் தமிழ்த் தேசிய இறையாண்மைப் பிரச்சினைக்கான தீர்வாக தமிழ் மக்கள் பேரவையினால் முன்வைக்கப்பட்டுள்ள கூட்டாட்சித் தீர்வுத்திட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள தமிழ்த் தேசத்தின் அடிப்படை அரசியற் பிறப்புரிமைகளான பிரிபடாத தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை, தமிழ்த் தேசத்திற்கான அங்கீகாரம் என்பவற்றை சிறீலங்காவுக்கான அரசமைப்பு உருவாக்க சபையின் வழிகாட்டல் குழுவால் வெளியிடப்பட்டுள்ள இடைக்கால அறிக்கை முற்றாக நிராகரித்துள்ளது.

அரசமைப்பு உருவாக்க சபையில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூட, தமிழ் மக்களின் அடிப்படை அரசியற் பிறப்புரிமைகளை வழிப்படுத்தல் குழுக் கூட்டங்களில் வலியுறுத்தவில்லை என்பது மட்டுமன்றி, இந்த அடிப்படைப் பிறப்புரிமைகளை மறுதலிக்கும் நிலைப்பாட்டுக்கு ஒப்புதலும் அளித்துள்ளனர். வழிப்படுத்தல் குழுவின் இடைக்கால அறிக்கைக்கு தாம் வழங்கியுள்ள பின்னிணைப்பில், தமிழ் மக்களின் அடிப்படைப் பிறப்புரிமைகள் மறுதலிக்கப்படுகின்ற இந்த இடைக்கால அறிக்கையை பிரதான இரண்டு கட்சிகளும் ஏற்றுக் கொள்ளுமாக இருந்தால் தாமும் அதனை ஏற்றுக் கொள்ளத் தாயாராக இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எழுத்துமூலம் வாக்குறுதி அளித்துள்ளமை மிகுந்த ஏமாற்றமளிக்கின்றது. இலங்கைப் பிரஜைகள் என்ற அடிப்படையில் அல்லாமல் தமிழ்த் தேசத்திற்கான அங்கீகாரத்தின் அடிப்படையிலேயே புதிய அரசியல் யாப்பு அமையவேண்டும் என்பதுவே எமது நிலைப்பாடாகும். எனவே, அரசமைப்பு உருவாக்க முயற்சிகளுக்கு முன்னதாக தமிழர்கள் ஒரு தனித் தரப்பாகவும் சிறீலங்காக அரசாங்கம் ஒரு தனித் தரப்பாகவும் கொள்ளப்பட்டு, ஒரு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் ஊடாக, சமூக ஒப்பந்தம் ஒன்று எட்டப்படுவதன் மூலமாக மட்டுமே தமிழ்த் தேசியத்தின் அடிப்படைப் பிறப்புரிமைகளை உறுதிப்படுத்திக்கொள்ளமுடியும் என்றே தமிழ் மக்கள் பேரவை நம்புகின்றது. அதன் காரணமாகவே தமிழ் மக்கள் பேரவையினால் வெளியிடப்பட்ட தீர்வு திட்டத்தில் ஒரு சமூக உடன்பாட்டின் ஊடாக தமிழ்த் தேசத்தின் அங்கீகாரம் உறுதி செய்யப்படவேண்டும் என்றும், அதன் பின்பே அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கைத் தீவில் தாம் கொண்டுள்ள நலன்களைப் பாதுகாக்க முனைகின்ற உலக சக்திகள், இங்கு ஐக்கியத்தையும் அமைதியையும் பேண விரும்புகின்றன. தமிழ் தேசிய இறையாண்மைப் பிரச்சனைக்குத் தீர்வு காணவல்ல ஒரு சமூக ஒப்பந்தத்தின் ஊடாக மட்டுமே நிரந்தரமான ஐக்கியமும் அமைதியும் இந்த தீவில் பேணப்பட முடியும் என்பதை சர்வதேச சமூகம் உணர்ந்துகொள்ள வேண்டும். அதனால், அத்தகைய ஒரு சமூக ஒப்பந்தத்தைச் சாத்தியமாக்குவதற்கு சர்வதேச சமூகம் தலையீடு செய்ய வேண்டும் என்று தமிழ் மக்கள் பேரவை வேண்டி நிற்கின்றது என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## திலீபனின் நினைவுத்தூபி அமைந்துள்ள பூங்காவில் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்ற 30வது ஆண்டு நிகழ்வு

தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் 30ம் ஆண்டு வணக்க நிகழ்வும், கேணல் சங்கரின் 16ம் ஆண்டு வணக்க நிகழ்வும் கடந்த முதலாம் திகதி பரிசின் புறநகரான ஆர்ஜொந்தையில் அமைந்துள்ள தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் நினைவுத்தூபி அமைந்துள்ள பூங்காவில் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பொதுச்சுடரினை ஆர்ஜொந்தை இளையோர் அமைப்பின் இணைப்பாளர் திரு.நிதர்சன் அவர்கள் ஏற்றிவைத்தார். பிரெஞ்சுக்கொடியை ஆர்ஜொந்தை முன்னாள் நகரபிதா பிலிப் ஜோசே ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை பிரான்சு தமிழர்





ஒருங்கிணைப்புக்குழு மாவீரர் பணிமனை துணைப்பொறுப்பாளர் வல்லிபுரம் பாக்கியநாதன் அவர்கள் ஏற்றிவைத்தார். தொடர்ந்து தியாக தீபம் லெப்.கேணல் திலீபன் அவர்களின் திருஉருவப்படத்திற்கான ஈகைச்சுடரினை மன்னார் மாவட்ட முன்னாள் தளபதி லெப்.கேணல் சுபன் அவர்களின் சகோதரர் ஏற்றிவைக்க தொடர்ந்து கேணல் சங்கர் அவர்களின் திருஉருவப்படத்திற்கான ஈகைச்சுடரினை ராதா வான்காப்புப் படையணிச் சேர்ந்த லெப்.கேணல் உருத்திரன் மற்றும் லெப். மாவேந்தன் ஆகியோரின் சகோதரர் ஏற்றிவைத்தார்.



மலர்வணக்கத்தை, நாட்டுப்பற்றாளர் திரு.ஜெயசோதி அவர்களின் துணைவியார் திருமதி கலா, ஆர்ஜொந்தை தமிழ்ச்சோலை நிர்வாகி திருமதி பவளராணி மாணிக்கராஜா ஆகியோர் செய்துவைக்க அகவணக்கம் இடம்பெற்றது. நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் அணிவகுத்து சுடர்ஏற்றி மலர்வணக்கம் செய்ததைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

கலைநிகழ்வுகள், உரைகள் எனத் தொடர்ந்த இந்நிகழ்வில், தமிழகத்தில் இருந்து வருகைதந்திருந்த இயக்குநர் திரு.வ.கௌதமன் அவர்களின் சிறப்புரையும் இடம்பெற்றது. தொடர்ந்து சிறப்பு நிகழ்வாக தியாக தீபம் லெப்.கேணல் திலீபன் அவர்களின் 30ம் ஆண்டு நினைவையொட்டிய தியாக வேள்வியில் திலீப ஒளி என்னும் இறுவெட்டு வெளியிட்டுவைக்கப்பட்டது. இனமான இயக்குநர் திரு. வ.கௌதமன் அவர்கள் முதல் இறுவெட்டை வெளியிட்டுவைக்க பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு துணைப்பொறுப்பாளர் திரு. பொன்மலை அவர்கள் பெற்றுக்கொண்டார்.

## பிரான்சில் 2ம் லெப்டினன் மாலதியின் 30ம் ஆண்டு நினைவு

பிரான்சில் 2ம் லெப்டினன் மாலதியின் 30ம் ஆண்டு நினைவு நிகழ்வும் தமிழீழப் பெண்கள் எழுச்சி நிகழ்வும் பரிசின் புறநகர்பகுதியில் ஒன்றான நந்தியார் பகுதியில் அமைந்துள்ள மண்டபத்தில் கடந்த 14ம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றன. பொதுச்சுடரினை நந்தியார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திரு. சாந்திக்குமார் ஏற்றிவைத்தார். தொடர்ந்து 14.06.2003 அன்று சர்வதேசக் கடற்பரப்பில் நடந்த நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக்



கொண்ட லெப்.கேணல் அன்புக்குமரின் சகோதரர் ஈகைச்சுடரினை ஏற்றி மலர்மாலையினை அணிவித்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து சுடர்வணக்கமும், மலர்வணக்கமும் இடம்பெற்றது. கலைநிகழ்வுகள் மற்றும் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு பரப்புறைப் பொறுப்பாளர் திரு. சத்தியதாசன் அவர்களின் சிறப்புப் பேச்சு என்பன இடம்பெற்றன.

ஈழமுரசு

# கூரை ஏறிக் கோழி பிடிக்காதவன் வானம் ஏறி வைகுண்டம் போவானா?

சிறீலங்கா இராணுவத்துடன் கடும் போரில் ஈடுபட்டு, தம்மால் கைது செய்யப்பட்ட 12 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்து பொதுவாழ்வில் இணைத்துள்ளதாக உலகெங்கும் பெருமையுடன் பறைசாற்றும் சிங்களப் பேரினவாத அரசு, 160 தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு மட்டும் ஏன் பின்னடித்து வருகின்றது?

நல்லிணக்க அரசு என்று கூறிக்கொள்ளும் மைத்திரிபால சிறீசேன தலைமையிலான அரசு, அதுவும் தமிழர் ஒருவரையே எதிர்க்கட்சித் தலைவராக நியமித்துவிட்டதாக தம்பட்டம் அடிக்கும் அரசு, தமிழ் அரசியல் கைதிகளை மட்டும் விடுவிப்பதற்கு மறுத்து வருவதன் மர்மம் என்ன?

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவர்கள் அல்லது புலிகள் அமைப்பில் இருந்து தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டுடன் கைது செய்த 12 ஆயிரம் பேரை ஒரு சில ஆண்டுகளில் புனர்வாழ்வளித்து விடுவிக்க முடிந்த சிங்களப் பேரினவாத அரசால், அதே விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவர்கள் அல்லது புலிகள் அமைப்பில் இருந்து தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டுடன் கைது செய்யப்பட்ட 160 தமிழ் அரசியல் கைதிகளை மட்டும் பல ஆண்டுகள் சிறையில் அடைத்து வைத்திருந்தும் புனர்வாழ்வளிக்க முடியவில்லையா? அல்லது அவர்களை விடுவிக்கக்கூடாது என்பதில் உறுதியான முடிவில் இருக்கின்றதா?

ஆண்டுதோறும் வெசாக் தினத்திலும், புத்தாண்டு தினத்திலும் என கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி அவர்களை விடுவிக்கும் மைத்திரிபால சிறீசேனவினால் தமிழ் அரசியல் கைதிகளுக்கு மட்டும் ஏன் பொது மன்னிப்பு வழங்கமுடியவில்லை? அவர்கள் மட்டும் எந்தப் பொது மன்னிப்பும் இன்றி தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருப்பது ஏன்?

தமிழ் மக்களுடனான தமது நல்லெண்ணத்தை சிங்கள தேசம் காட்ட முனைந்திருந்தால் தமிழ் அரசியல் கைதிகளை எப்போதோ அது விடுவித்திருக்கும். ஆனால் அது அவ்வாறு விடுவிக்கமாட்டாது. காரணம் அவர்களை வைத்துத்தான் சிங்களப் பேரினவாத அரசு, தனது இனப்படுகொலை இராணுவத்தைக் காப்பாற்ற நினைக்கின்றது. தனது கைவசம் இருக்கும் அவர்களையும் விடுவித்துவிட்டால் சிங்களப் பேரினவாத அரசினால் விடுதலைப் புலிகளை நோக்கிச் சுட்டுவிரல் நீட்டுவதற்கு ஒருவரும் இல்லாமல் போய்விடுவார்கள் என்பதால்தான் விசாரணையின்றியும், தண்டனைக் காலம் முடிவடைந்தும், அவர்கள் மீதான வழக்குகளுக்கு தீர்ப்பை வழங்காதும் சிறைக் கம்பிகளுக்குள் இன்னமும் அடைத்துவைத்திருக்கின்றது.

சிங்கள இராணுவத்தை போர்க்குற்ற நீதிமன்றுக்கு இழுத்துவந்து நிறுத்தும் நிலை ஏற்பட்டால், அப்போது விடுதலைப் புலிகளும் போர்க் குற்றங்களில் ஈடுபட்டார்கள் என அவர்களையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி தமது குற்றங்களை சமப்படுத்தும் அல்லது குறைத்துக்கொள்ளும் நோக்கத்துடனேயே இந்தத் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்காமல் பல ஆண்டுகளாக இழுத்தடித்து வருகின்றது.

இந்த உண்மையை ஒரு நீதிபதியாக இருந்து தற்போது வடமாகாணசபையின் முதலமைச்சராகவிருக்கும் விக்னேஸ்வரன் அவர்கள் உணர்ந்துகொண்டதனாலேயே, 'இறுதிக்கட்ட யுத்தத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மிடமுள்ள கைதிகளை படுகொலை செய்தார்கள் என நிரூபித்து அதன்மூலம் அவர்களும் போர்க்குற்றத்தில் ஈடுபட்டனர் என்பதை நிரூபிக்கவே வவுனியாவில் உள்ள அரசியல் கைதிகளை அநுராதபுரத்திற்கு மாற்றும் சதிவேலையை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக' குற்றம்சுமத்தியுள்ளார்.

ஆனால், தமிழ் அரசியல் கைதிகள் விரைவாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு என்று கூறும் சிறீலங்காவின் சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன, சட்டமா அதிபர் திணைக்களத்தின் பணிகளில் நிலவும் தாமதம் காரணமாகவே தமிழ் கைதிகளின் விடுதலையிலும் தாமதம் நிலவுவதாக கூறுகின்றார். 'அதற்காக ஏன் இத்தனை பல ஆண்டுகள்?' என்று திருப்பி அவரிடம் பதில் கேள்வி எழுப்பும் திறமை தமிழ் அரசியல் தலைமைகளிடம் இல்லை.

'அரசியல் கைதிகள் என்றொரு பிரிவினர் நாட்டில் இல்லை' என்று சிறீலங்காவின் நீதியமைச்சர் தலதா அத்துகோரள தெரிவிக்கின்றார் என்றால் அதனை எதிர்த்து கருத்துவெளியிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமோ, அல்லது எதிர்க்கட்சித் தலைவர் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் சம்பந்தருக்கோ நேரமில்லை.

தமிழ் அரசியல் கைதிகளை எவ்வாறு ஏமாற்றலாம் என்பதில்தான் அவர்களின் கவனம் இருக்கின்றது. ஒவ்வொரு தடவையும் தங்களின் விடுதலைக்காக அவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கும்போது, அதனை காத்திரமான ஒரு நடவடிக்கையாக மாற்றாமல், அந்த உண்ணாவிரதப் போராட்டத்தை எவ்வாறு நிறுத்தலாம் என்பதுதான் தமிழர் தலைமை என்று சொல்லிக்கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கவலையாக இருக்கின்றது. தற்போதும் தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்தை எவ்வாறு நிறுத்தலாம் என்றுதான் அது சிந்திக்கின்றது.

தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமையே இவ்வாறென்றால், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலைமை என்னவாக இருக்கும்? கண்முன்னே இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்து, தமிழ் மக்களுக்கு ஒரு சிறியளவிலான நிம்மதியைக்கூட ஏற்படுத்திக் கொடுக்க முடியாத அல்லது விரும்பாத மைத்திரிபால அரசு, கண்ணுக்குத் தெரியாமல் இருக்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் கரிசனை எடுத்து அவர்களைத் தேடிக் கண்டபிடித்துத் தரும் என்று எதிர்பார்ப்பது எத்தனை மடத்தனமானது. கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போவானாம் என்று நம்புவது இதனைத்தான்.

எப்போதும் போல தமிழர்களின் நேற்றைய, இன்றைய, நாளைய நிலைமைகளை தீர்க்கமாகச் சொன்ன தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் வார்த்தைகள் இப்போது நினைவுக்கு வருகின்றது.

'சிங்களப் பேரினவாதத்தின் தீவிரவாதப் போக்கில் மாற்றம் ஏற்படும் என நான் என்றுமே நம்பியதில்லை. அந்த மாற்றம் ஏற்படாதவரை தமிழருக்கு நீதி கிடைக்கப்போவதில்லை.

இனத்துவேச அரசியல் சேற்றில் சிங்கள தேசம் மூழ்கிக் கிடக்கும்வரை, தமிழரின் தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒரு நீதியான – நியாயபூர்வமான – அரசியல் தீர்வை, நாம் சிங்கள ஆளும் வர்க்கத்திடமிருந்து எதிர்பார்க்க முடியாது.'

என்பதுதான் அது.

## தமிழரின் பிரச்சினைகளைத் தீர்க்க சிங்களவர்களுக்கு துணிவு இல்லை

- கிளிநொச்சியில் மதத் தலைவர்கள் குற்றச்சாட்டு -

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சிங்கள மக்களுக்கு துணிவு இல்லை என கிளிநொச்சியில் ஒன்றுகூடிய மதத் தலைவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

ஒற்றையாட்சி என்பது ஆபத்தானதொரு பதம். வடக்கு கிழக்கு இணைந்த தீர்வே தேவையானது. பௌத்த மதத்துக்கு முன்னுரிமை என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.



சிங்களவர்களே தமிழ் மக்கள் மீது ஒடுக்குமுறைகளைப் பிரயோகிப்பவர்கள் என்பதால், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான துணிவு சிங்கள மக்களுக்கு வரவேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். அரசமைப்பு சபையின் வழிப்படுத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பான கருத்தறிதல் நிகழ்வு கடந்த 11 ஆம் திகதி கிளிநொச்சி – கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்விலேயே அவர்கள் மேற்படிக் கருத்தை தெரிவித்தனர்.

அந்தச் சந்திப்பில் இந்து மற்றும் கிறிஸ்தவ மதத்தலைவர்கள் பங்கேற்றனர். புதிய அரசமைப்பு தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையில் தெளிவற்ற தன்மைகள் காணப்படுகின்றன எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

## சிறீலங்காவின் புதிய அரசியல் அமைப்புக்கான இடைக்கால அறிக்கை

## - தமிழ் மக்கள் பேரவை நிராகரிப்பு -

புதிய அரசியல் அமைப்புக்கான இடைக்கால அறிக்கையை முற்றுமுழுதாக நிராகரிப்பதாக தமிழ் மக்கள் பேரவை அறிவித்துள்ளது. இடைக்கால அறிக்கை தொடர்பாக தமிழ் மக்கள் பேரவையால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மக்கள் பேரவையினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, தற்போது வெளியிடப்பட்டுள்ள புதிய அரசியல் யாப்பிற்கான இடைக்கால அறிக்கையின் உள்ளடக்கமானது இலங்கைத் தீவில் வாழுகின்ற மக்கள் குழுமங்கள் ஒவ்வொன்றையும் இனரீதியான தனித்துவத்தின் அடிப்படையில் அங்கீகரிக்காமல், இலங்கை மக்கள் அனைவரையும் 'சிறீலங்கர்கள்' என்கின்ற ஒரே அடையாளத்தின் கீழேயே கொண்டுவருகின்றது. ஒட்டுமொத்தமான இலங்கை மக்களையும் 'சிறீலங்கர்கள்' என்று அடையாளப்படுத்துவதானது சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை மேலும் பலப்படுத்துவதாக மட்டுமே அமையும் என்பதனையே வரலாறு எமக்கு உணர்த்தி நிற்கின்றது. அறுதிப் பெரும்பான்மையாக சிங்கள பௌத்தர்களே வாழும் ஒரு நாட்டில் – வரலாற்று ரீதியான இன முரண்பாடும் இருக்கின்ற ஒரு பின்னணியில் ஜனநாயக விழுமியங்கள் இங்கு பாதுகாக்கப்படமாட்டாது என்பதனால், இந்த இடைக்கால அறிக்கையைத் தமிழ் மக்கள் பேரவை முற்றாக நிராகரிக்கின்றது.

தமிழ்த் தேசிய இறையாண்மை பிரச்சினைக்கான தீர்வு என்னவென்பது தமிழர் தரப்பால் தெளிவாக முன்வைக்கப்பட்டிருக்கவில்லை என்ற ஒரு பொதுவான சர்வதேசக் குற்றச்சாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு தமிழ்த் தேசிய இறையாண்மைப் பிரச்சினைக்கான தீர்வினை தீர்க்கமாக வெளிப்படுத்தும் ஒரு வரைபை உருவாக்குவதற்காகத் தமிழ் மக்கள் பேரவை ஓர் அரசியல் உபகுழுவை கடந்த 2016 ஆம் ஆண்டு தை மாதம் நிறுவியது. நாளாந்தம் பல மணித்தியாலங்கள் நடைபெற்ற நீண்ட அமர்வுகளின் பின்னர் 2016 தை– 31 அன்று ஓர் அரசியல் தீர்வு முன்வரைபினை மக்கள் கருத்தறிவதற்காக எமது அரசியல் உபகுழு வெளியிட்டது.

தமிழர் தாயகம், இலங்கைத் தீவு மற்றும் அனைத்துலக நாடுகளில் வாழும் பல்வேறு தமிழ் தரப்புக்களிடமிருந்து எழுத்து வடிவிலும், வாய்மொழி மூலமாகவும் பெறப்பட்ட பெருமளவான அறிவுரைகளை உள்வாங்கி, குறித்த தீர்வுத் திட்டம் இறுதி வடிவம் செய்யப்பட்டது. 2016 ஏப்ரல் 10 ஆம் திகதி அந்த இறுதி வரைபு எம்மால் வெளியிடப்பட்டது. இவ்வாறாக, தமிழ் மக்களின் ஏகோபித்த பங்கேற்புடன் உருவாக்கப்பட்ட இந்த தீர்வுத்திட்ட வரைபானது, இலங்கை அரசமைப்பு சபையில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் எம்மால் வழங்கப்பட்டது.

தொடர்ச்சி 04ம் பக்கம்

## மாலதிக்கு அஞ்சலி

தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் கடந்த 10ம் திகதி உணர்வுபூர்வமாக கடைப்பிடிக் கப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் புதுக்குடியிருப்பு அலுவ



லக வளாகத்தில் இந்த நிகழ்வு இடம் பெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதலாவது பெண் பேராளி யான மாலதி 10.10.1987 அன்று வீரச் சாவைத் தழுவிக்கொண்டார். அவரது 30வது ஆண்டு நினைவாகும்.

## சிவனொளி பாதமலை புத்தரின் மலையாகியது!

சிவனொளிபாதமலைக்கு சிங்கள மொழியில் புதிய பெயர் சூட்டப்பட்டுள் ளது. இதன்படி இதுவரைகாலம் 'சிறீபாத' என சிங்களமொழியில் அழைக்கப்பட்டு வந்த சிவனொளிபாதமலைக்கு தற் போது கௌதம புத்தரைக் குறிக்கும் வகையில் 'கௌதம சிறீபாத' என சிங் கள மொழியில் பெயர்சூட்டப்பட்டுள்ளது.

## போர்க்குற்றவாளிகளுக்கு அமெரிக்கா, அவுஸ்திரேலியா அனுமதி மறுப்பு

சிறீலங்காப் போர்க் குற்றவாளி களுக்கு அமெரிக்கா அனுமதி மறுத்துள் ளதை அண்மையில் சரத் பொன்சே காவே தனது வாயால் ஒத்துக்கொண் டிருந்தார். இந்நிலையில், அவுஸ்திரேலி யாவும் போர்க் குற்றவாளிகளுக்கு அனுமதி வழங்க மறுத்துள்ளதாக சிறீ லங்கா இனப்படுகொலை இராணுவத் தின் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், போர்க்குற்றங்கள் தொடர்பாக வன்னிக் களமுனையில் நிலைகொண்டிருந்த இராணுவ அதிகாரிகள் மற்றும் படை யினரைப் பொறுப்புக்கூற வைக்க முயற் சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. வன் னிப் போர் நடவடிக்கையில் ஈடுபட்டி ருந்தார்கள் என்ற அடிப்படையில், சண்டையிடும் படைப்பிரிவுகள் தண்டிக் கப்பட்டுள்ளன. படைப்பிரிவுகளுக்குத் தலைமை தாங்கிய இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்குத் திரும்பத் திரும்ப அமெரிக்க நுழைவிசைவு மறுக்கப்பட்டுள்ளது. 59வது டிவிசனுக் குத் தலைமை தாங்கிய மேஜர் ஜெனரல் சாஜி கல்லகேக்கு அவுஸ்திரேலியா நுழைவிசைவு வழங்க மறுத்துள்ளது என்று கூறியுள்ளார்.

## விமான சீரமைப்பில் ரணில் குழு

சிறீலங்கன் விமான நிறுவனத்தின் மறுசீரமைப்பு பணிகளுக்கான புதிய அமைச்சரவைக் குழுவொன்றும் அரச உத்தியோகத்தர் குழுவொன்றும் சிறீ லங்காவில் நியமிக்கப்பட்டுள்ளன. புதிய அமைச்சரவை உப குழுவில் தலைவராக ரணில் விக்கிரமசிங்க செயற்படுவதுடன், அமைச்சர்களான கபீர் ஹாசிம், மங்கல சமரவீர, கலாநிதி சரத் அமுனுகம, நிமல் சிறிபாலடி சில்வா மற்றும் மலிக் சமர விக்ரம ஆகியோர் அடங்குகின்றனர்.

## முல்லைக் கடலில் சிங்களவர் ஆதிக்கம் 6 ஆயிரம் தமிழ்க் குடும்பங்கள் பாதிப்பு

முல்லைத்தீவுக் கடலில் சிங்கள மீனவர்கள் றோலர் உள்ளிட்ட சட்டவிரோத மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி தொழில் செய்வதால் அக்கடலில் மீன்பிடி வீழ்ச்சியடைந்துள்ளதாக தமிழ் மீனவர்கள் தெரிவித்துள்ளனர். இதனால், முல்லைத் தீவுக் கடலை நம்பியுள்ள சுமார் 6,000 தமிழ்க் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கடற்றொழிலாளர்கள் கவலை வெளியிட்டுள்னர். தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆட்சிக் காலத்தில் முல்லைத்தீவுக் கடலில் மீன்பிடி குறைகின்றபோது மீனவர்கள் நந்திக் கடலில் மீன்பிடியில் ஈடுபட்டு வாழ்வாதாரத்தை கொண்டு செலுத்தினர்.

ஆனால், தற்போது படையினர் கடற்கரையோரமாக முட்கம்பி வேலி, மின்சார வேலி போன்றவற்றை அமைத்துள்ளதால் கேப்பாப்புலவு, இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு, வற்றாப்பளை, நீராவிப்பிட்டி ஆகிய கிராமங்களின் கடற்றொழிலா ளர்கள் நந்திக் கடலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடற்கரையோரமாக அமைக்கப்பட்டுள்ள வேலிகளை அகற்றுமாறு பல்வேறு தடவைகள் கோரிக்கை விடுத்துள்ள போதிலும் கடற்படையினர் அகற்ற மறுத்து வருகின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆட்சி மீண்டும் வந்தால் மட்டுமே தமது கடலில் தாங்கள் சுதந்திரமாகத் தொழில் செய்து வாழ்வாதாரத்தைப் பெருக்க முடியும் என முல்லைத்தீவுக் கடற்றொழிலாளர்கள் கண்ணீருடன் தெரிவித்தனர்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்கொலைகள் அதிகரிப்பு

தென் தமிழீழத்தில், மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 2015 மற்றும் 2016 ஆகிய இரு ஆண்டுகளிலும் 2 ஆயிரத்து 323 தற்கொலை முயற்சிகள் இடம்பெற்றுள்ளன எனவும் அவற்றின்போது 79 தற்கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. மட்டக்களப்பு தொழில்சார் உளநல உதவி நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கை யிலேயே மேற்படி விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

சிறிலங்கா படையினர் முன்னெடுத்த யுத்தம் காரணமாக மட்டக்களப்பு மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கினர். உறவினர்களின் இறப்புக்கள், காணாமற்போனோர் தொடர்பான பிரச்சினைகள், யுத்தம் காரணமாக பொருளாதார இழப்புக்கள் ஏற்பட்டதால் வீடுகளில் பிரச்சினைகள் போன்ற பல்வேறு பிரச்சினைகள் காரணமாக மக்கள் உள நெருக்கடிகளுக்கு ஆளாகியுள்ளனர். இவ்வாறான நெருக்கடிகள் இந்தத் தற்கொலை மற்றும் தற்கொலை முயற்சிகளுக்குக் காரணமாக இருக்கின்றது. இந்தத் தற்கொலைகள் தொடர்பாக மேற்படி உளநல உதவி நிலையத்தின் ஆய்வு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மட்டக்களப்பில் கடந்த 2015 ஆம் ஆண்டில் 37 பேர் தற்கொலை செய்துள்ளனர். 18 வயதுக்கு உட்பட்ட 400 பேர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளனர். இவர்களில் 120 ஆண்களும் 280 பெண்களும் அடங்குகின்றனர்.

அதே ஆண்டு 18 தொடக்கம் 50 வயதுக்குட்பட்ட 630 பேர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளனர். அவர்களில் 200 ஆண்களும் 430 பெண்களும் அடங்குகின்றனர்.

50 வயதுக்கு மேற்பட்டோரில் 250 போர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளனர். இவர்களில் 90 ஆண்களும் 160 பெண்களும் அடங்குகின்றனர். 2016 ஆம் ஆண்டில் 42 பேர் தற்கொலை செய்துள்ளனர். 18 வயதுக்கு உட்பட்ட 219 பேர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளனர். 18 வயது தொடக்கம் 50 வயதுக்குட்பட்ட 732 பேர் தற்கொ–லைக்கு முயற்சித்துள்ளனர். இவர்களில் 203 ஆண்களும் 429 பெண்களும் அடங்குகின்றனர். 50 வயதுக்கு மேற்பட்டோரில் 72 பேர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளனர். இவர்களில் 35 ஆண்களும், 37 பெண்களும் அடங்குகின்றனர். ? என அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டு. நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வனைத் தாக்க முயற்சி – அவரது மெய்க்காப்பாளர் காயம் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் மீது இடம்பெற்ற தாக்குதல் முயற்சியில் இருந்து அவர் காப்பாற்றப்பட்டார். அவரது மெய்க்காப்பாளரான சிறிலங்கா காவல்துறை உத்தியோகத்தர் காயமடைந்தார். இச்சம்பவம் கடந்த 11 ஆம் திகதி புதன்கிழமை பகல் இச்சம்பவம் இடம்பெற்றது. மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் கடமை யாற்றும், மாவட்டக் காணி உதவி ஆணையாளரே இவ்வாறு தாக்குதல் முயற்சியில் ஈடுபட்டார். சம்பவ தினம் தனது மனைவியுடன் நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்திற்குச் சென்ற மேற்படி நபர், நாடாளுமன்ற உறுப்பினர் தன்மீது அவதூறு பரப்புகின்றார் எனக் கூறி அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

வாக்குவாதம் முற்றிக் கைகலப்பு ஏற்பட்டபோது, நாடாளுமன்ற உறுப்பினரைக் காப்பாற்ற முயன்ற காவல்துறை உத்தியோகத்தர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் அவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் காவல்துறை நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

# அவலச் சாவுகளும் அகால மரணங்களும்

### அச்சுவேலி விபத்தில் இளைஞன் சாவு

உந்துருளி மின் கம்பத்தில் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். அச்சுவேலி தெற்கு நெருப்புமூட்டி பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில், நாவற் குழியைச் சேர்ந்த சஜீபன் (வயது 20) என்ற இளைஞன் படுகாயமடைந்து அச்சுவேலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். ஆவரங்கால் வல்லை முதன்மைச் சாலையில் விபத்து இடம்பெற்றது. ஆவரங்கால் நோக்கி வந்த உந்துருளி வேகக் கட்டுப்பாட்டை இழந்து முதன்மைச்சாலையில் நடப்பட்டிருந்த மின்கம்பத்துடன் மோதியது.

### யானை தாக்கி குடும்பத்தலைவர் உயிரிழப்பு

அம்பாறை, திருக்கோவில் காஞ்சிகுடா பாவட்டக் குளத்தடியில், யானை தாக்கிய தில் குடும்பத்தலைவர் உயிரிழந்தார். தனது வீட்டில் இருந்து கடந்த 4ம் திகதி அதிகாலை தொழிலுக்குச் சென்று கொண்டிருந்த போது அவரை யானை தாக்கியது எனக் கூறப்பட்டது. விநாயகபுரம் 2, பாடசாலை வீதியைச் சேர்நத 4 பிள்ளைகளின் தந்தை யானகிருஸ்ணபிள்ளைசதாசிவம்(வயது52)என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

### கொக்காவில் விபத்தில் ஒருவர் பலி

கொக்காவில் பகுதியில் கடந்த 2ம் திகதி பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரி ழந்துள்ளார். கொக்காவில் பகுதியிலிருந்த பழைய முறிகண்டி யிலுள்ள தனது வீடு நோக்கி வந்து கொண்டிருந்தவரை பின்னால் வந்த டிப்பர் வாகனம் மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. இதன்போது பழைய முறிகண்டி பனிக்கன் குளத்தை சேர்ந்த அ.பிரதாஸ் (வயது – 28) என்பவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

### மின்சாரம் தாக்கி குடும்பத்தலைவர் பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம், தாவடியில் மின்சாரம் தாக்கி குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்தார். தாவடி பத்திரகாளி கோவிலடியில் கடந்த 6ம் திகதி இந்தச் சம்பவம் இடம் பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் உதயகுமார் (வயது 54) என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தார். வீட்டு வேலி தகரத்தால் அடைக்கும் பணி இடம்பெற்றது. அந்த வேலியருகே மின் வயர் சென்றுள்ளது. அந்த வயரை வேலித் தகரம் அறுத்துள்ளது. தகரத்தை ஏந்தி நின்ற வீட்டின் உரிமை யாளருக்கு மின்சாரம் தாக்கியது. அதனால் அவர் உயிரிழந்தார்.

### அண்ணனும் தம்பியும் ஒரே நாளில் சாவு

உடன் பிறந்த சகோதரர்கள் இருவர் ஒரேநாளில் உயிரிழந்த துயரச் சம்பவம் கடந்த 2ம் திகதி இடம்பெற்றுள்ளது. இதுதொடர்பில் தெரியவருவதாவது கடந்த இரு வாரங்களின் முன் கிளிநொச்சியில் வாள்வெட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. வாகனம் திருத்தும் நிலையம் நடத்தும் அல்லைப்பிட்டியைச் சேர்ந்த பா.யசோதரன் (வயது 34) என்பவர் வெட்டுக்காயங்களுக்கு இலக்கானார். இவர் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்தார். இவரை மீசாலை மேற்கில் வதியும் இவரது சகோதரனான சுதாகரன் (வயது–31) என்பவர் தினமும் சென்று பார்வையிட்டு வந்துள்ளார். வெட்டுக்காயங்களுக்கு இலக்கான அண்ணன் 2ம் திகதி பிற்பகல் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். அண்ணன் இறந்த தகவல் கிடைக்க முன்னரே, தம்பியார் குடும்பப் பிரச்சினை காரணமாக தூக்கில் தொங்கி உயிரிழந்தார். அண்ணனின் சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்தவமனையிலும், தம்பியின் சடலம் சாவகச்சேரி மருத்துவமனையிலும் வைக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்ற பின்னர் இருவரது சடலங்களும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

### இளந்தாய் மர்ம மரணம் - இளைஞன் கைது

மட்டு. கொக்கட்டிச்சோலை பகுதியில் கடந்த 9ம் திகதி திங்கட்கிழமை மாலை பெண் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்தமை தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கொக்கட்டிச்சோலை பிரதான வீதியில் முத்துலிங்கப்பிள்ளையார் ஆலய வீதியில் வசித்த விஜயரட்ணம் தர்மினி என்னும் 26 வயது இளந்தாயே மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். உயிரிழந்த பெண்ணின் கணவரும், அவரது தாயும் வெளிநாடுகளில் தொழில்புரிந்து வரும் நிலையில், மேற்படி பெண்ணும் அவரது 5 வயதுடைய பெண் குழந்தையும், பெண்ணின் தந்தையும் குறித்த வீட்டில் வசித்து வந்துள்ளனர். வெல்லாவெளியில் அமைந்துள்ள அவர்களது உறவினர்களின் வீட்டுக்கு, தந்தை சென்றுள்ள நிலையிலேயே, இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.



இதேவேளை, தனது சகோதரியின் நண்பர் ஒருவருடன் பழகி வந்துள்ளதாகவும் இருவருக்கும் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இந்த மரணம் இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகப்படுவததாக தங்கை தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 08ம் பக்கம்




சொகுசுப் பேருந்து சேவை / LOCATION D'AUTOCARS
LOURDES, ESPAGNE, PORTUGAL & PARTOUT EN EUROPE
எங்களிடம் 16 முதல் 77 இருக்கைகள் கொண்ட
சொகுசுப் பேருந்துகள் தமிழ் சாரதிகளுடன் வாடகைக்கு உண்டு
CITYEXPRESS We Move the Businessclass
Tél: 0 651 651 729 - 06 95 95 63 73
www.cityexpress.fr / contact@cityexpress.fr / facebook: CityExpressParis



# ஓநாய்களிடம் ஆடுகளை விலைபேசும் மேய்ப்பர்



**கலாநிதி சேரமான்**

'தமிழ் மக்களின் ஒரு தொகுதியினரால் சனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தலைவர்களிடம் இந்த வேண்டுகையை நான் விடுக்கின்றேன். ஐயன்மீர், தமிழ் மக்கள் தொடர்பான உண்மைகளை வெளிக்கொணர்வதற்கும், அவர்களுக்கு நீதி கிட்டுவதற்கும் துணிச்சலுடனும், முதுகெலும்புடனும் செயற்படுமாறு ஒரு சமயத் தலைவன் என்ற வகையில் நான் உங்களைப் பணிவுடன் வேண்டுகின்றேன். வட்டுக்கோட்டைத் தீர்மானம், திம்புக் கோட்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்கு நீங்கள் முற்பட வேண்டும், அல்லது நீங்கள் அமைதி காப்பதால் தமிழ் மக்களின் அபிலாசைகள் பாதிப்படையும் என்பதைப் புரிந்து கொண்டு அரசியலில் இருந்து நீங்கள் ஒதுங்கிக் கொள்வதற்கான காலம் வந்து விட்டது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். உங்கள் தலைமைப் பொறுப்புக்களில் இருந்து நீங்கள் விலகினால் எவ்வாறான சனநாயக ஆட்சிமுறைக்கும், அடக்குமுறைக்கும் தமிழீழ மக்கள் உட்பட்டுப் போராடுகின்றார்கள் என்பதையாவது உலகம் உணர்ந்து கொள்ளும்.'

*வாசகர்களே, மேற்கண்டவாறு எழுதியவர் யார் என்று உங்களுக்கு எண்ணத் தோன்றுகின்றதா? இது ஒரு கத்தோலிக்க மதகுருவால் 17.04.2000 அன்று தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கு எழுதப்பட்ட கடிதத்தின் இறுதிப் பந்தி.*

*இரா.சம்பந்தர் தொடக்கம் ஆனந்த சங்கரி வரையான தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் சந்திரிகா அம்மையாருக்குத் துதிபாடிக் கொண்டிருந்த பொழுது இம்மடல் குறித்த கத்தோலிக்க மதகுருவால் எழுதப்பட்டது. அப்பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றொரு கட்சி தோற்றம் பெற்றிருக்கவில்லை.*

*இம் மடலை எழுதிய கத்தோலிக்க மதகுரு, மூன்றரை ஆண்டுகள் கழித்து 01.11.2003 அன்று அமெரிக்காவின் நியூ ஜேர்சி நகரில் நடைபெற்ற இலங்கைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழாவில் உரையாற்றும் பொழுது தமிழர்களின் ஆயுதப் போராட்டம் ஒரு தற்காப்புப் போராட்டம் என்று குறிப்பிட்டதோடு, உலகின் வல்லாதிக்க சக்திகளின் அழுத்தங்களுக்குத் தமிழர்கள் வளைந்து கொடுக்கத் தேவையில்லை என்றும் முழக்கமிட்டார்:*

'அநீதியான முறையில் நான் அடக்கப்பட்டு, அடக்குமுறையாளனால் நிலத்தில் அடித்து வீழ்த்தப்பட்டால், எனது சகல பலத்தையும், எனது கையில் கிடைக்கக்கூடிய எந்த ஆயுதத்தையும் பிரயோகித்துச் சண்டையிடும் உரிமை எனக்கு உண்டு. இந்த உலகமும், அதன் அமைப்புக்களும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சட்டங்களையும், போதனைகளையும் அடக்கப்படுவோர் மீது மட்டுமே பிரயோகிப்பதோடு, சரியான நேரத்தில் அடக்குமுறையாளன் மீது குற்றம் சுமத்துவதற்கோ, அன்றி அவனைக் கைது செய்வதற்கோ துணிவதில்லை. தமது சுயலாபங்களுக்காகக் கொடியவர்களின் பங்காளிகளாக உலகமும், அதன் அமைப்புக்களும் செயற்படுவதோடு, அது பயனைத் தராத சந்தர்ப்பத்தில் அப்பாவிகளுக்கு எதிராகவே தமது ஆயுதங்களைத் திருப்பிவிடுகின்றன.'

*அந்த மதகுரு 1990ஆம் ஆண்டு பங்குனி மாதம் இந்தியப் படைகளின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் வந்ததில் இருந்து சில காலத்திற்கு அங்கு ஆன்மீகப் பணி புரிந்தவர். அதனால் அவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நெருக்கம் ஏற்பட்டது. அத்தோடு தமிழீழ தேசியத் தலைவர் அவர்களை சந்திப்பதற்கும் அவருக்கு வாய்ப்புக்கள் கிட்டியிருந்தது.*

*பின்னர் யேர்மனிக்குப் புலம்பெயர்ந்த அவர், அங்கும், பிரித்தானியாவிலும் ஆன்மீகப் பணிபுரிந்து அருட்கலாநிதி பட்டம் பெற்றார். அத்தோடு அவர் நின்றுவிடவில்லை. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயம் பற்றிப் புலம்பெயர் தேசங்களில் நடைபெற்ற பல பேரணிகளில் உணர்வூர்வமாக உரையாற்றினார். ஆங்கில மொழியில் வெளிவந்த தமிழ்த் தேசியப் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் விதம்விதமாகக் கட்டுரைகளை எழுதினார்.*

*எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போன்று 'தமிழர் விடுதலைப் போராட்டத்தின் வேதனைகளும், அபிலாசைகளும்' என்ற மகுடத்தின் கீழ் 2004 ஆடி மாதம் ஆங்கிலத்தில் நூல் ஒன்றையும் அவர் வெளியிட்டார். அதில் இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி சிங்கள மக்களை நோக்கி எழுதப்பட்ட பந்தியொன்றில் பின்வருமாறு அவர் குறிப்பிட்டார்:*

தொடர்ச்சி 16ம் பக்கம்

**'உண்மை எங்கள் விடுதலைக்கு வழிவகுக்கும்' என்று பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் தனது கைப்படத் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மடல் எழுதிய அதே மதகுரு தான் இப்பொழுது இவ்வாறு கூறியிருக்கின்றார். அவர் வேறு யாருமல்ல: உலகத் தமிழர் பேரவையின் தலைவரான எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகளார்தான்.**

## வாள்வெட்டில் தாயும் மகனும் படுகாயம்

குடும்ப தகராறு காரணமாக வாள் வெட்டுக்கு இலக்காகி தாயும் மகனும் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இச்சம்பவம் மானிப்பாய் கட்டுடை பகுதியில் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தினைச் சேர்ந்த விக்னேஸ்வரன் கனேஸ்வரி (வயது 39) விக்னேஸ்வரன் துஷ்யந்தன் என்பவர்களே வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளனர். இது தொடர்பில் வாள்வெட்டு நடத்தியவரை மானிப்பாயிலுள்ள சிறீலங்காக் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

## தொடருந்து விபத்துக்களால் 380 பேர் பலி

தொடருந்து விபத்துக்களால் இந்த வருடத்தில் கடந்த 9 மாதங்களில் மட்டும் 380 பேர் உயிரிழந்தனர் என்று சிறீலங்கா தொடருந்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது. பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவைகளில் பயணித்தல், உயிரை மாய்த்துக் கொள்ளும் எண்ணத்தில் தொடருந்துடன் மோதுதல், செல்பி எடுத்தல் உள்ளிட்ட பல காரணங்களால் இத்தகைய இறப்புக்கள் சம்பவித்தன.

## அவுஸ்திரேலிய கட்சியின் தலைவராக தமிழ்ப் பெண்

அவுஸ்திரேலியாவின் முன்னணி அரசியல் கட்சிகளுள் ஒன்றான கிறீன்ஸ் கட்சியின் விக்டோரியா பிராந்திய தலைவராக இலங்கை வம்சாவளிப் பெண்ணான சமந்தா ரட்ணம் அறிவிக்கப்பட்டுள்ளார். மோர்லண்டின் முன்



னாள் நகரபிதாவாக பதவி வகித்த சமந்தா ரட்ணம், கடந்த 13ம் திகதி உத்தியோகபூர்வமாகத் தனது பதவியை ஏற்கவுள்ளார். மேற்படி தலைமைப் பதவியில் இருந்த முன்னாள் தலைவர் கிறெக் பார்பர் பதவி விலகியதையடுத்தே அப்பதவிக்கு சமந்தா நியமிக்கப்பட்டுள்ளார்.

## கண்டியில் மிளகு உற்பத்தி மாநாடு

2017ம் ஆண்டுக்கான மிளகு உற்பத்தி மாநாடு எதிர்வரும் 30ம் திகதி கண்டியில் நடைபெறவுள்ளது. இந்தியா, மலேசியா, இந்தோனேசியா, வியட்நாம் உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த மாநாடு தொடர்ச்சியாக 4 நாட்கள் நடைபெறும். மாநாட்டின் ஊடாக இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் மிளகுக்கு பன்னாட்டு ரீதியில் சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கு, வெளிநாடுகளின் பிரதிநிதிகளும் கலந்துரையாடப்படும் எனத் தெரியவருகிறது.

பரிஸ்தமிழ் www.ParisTamil.Com .கொம்
பிரான்ஸ் செய்திகள்
பிரான்ஸ் நிர்வாக தகவல்கள் — தமிழில்
WWW.PARISTAMIL.COM

## கேப்பாப்பிலவு புதைகுழியில் இருந்து ஆண் சிசு மீட்பு!

புதைக்கப்பட்டிருந்த ஆண் சிசுவின் உடல் முல்லைத்தீவு, கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில் கடந்த வாரம் மீட்கப்பட்டது. இதையடுத்து இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தில் இரு பெண்கள் கைது செய்யப்பட்டனர். சூரிபுரம் மாதிரிக் கிராமத்தில் சம்பவம் நடந்தது. சிசு ஒன்றின் உடலை இருவர் புதைப்பதை அவதானித்த ஒருவர் சிறீலங்காக் காவல்துறையினருக்குத் தகவல் வழங்கியதை அடுத்தே அவர்கள் கைது செய்யப்பட்டனர். சிசுவைப் பெற்றெடுத்தார் என்ற சந்தேகத்தில் 35 வயதுடைய பெண் ஒருவரும், அவருக்கு ஒத்தாசை புரிந்தார் என்ற சந்தேகத்தில் பெண்ணின் தாயும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## ஹெரோயினுடன் உகாண்டாப் பெண் கைது

5 மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளுடன் டுபாயில் இருந்து சிறீலங்கா வந்த 43 வயதான உகாண்டா நாட்டு பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க பிரிவினர் அவரைக் கைது செய்தனர். சந்தேகநபர் தனது பயணப்பையில் 505 கிராம் ஹெரோயினை மறைத்து வைத்திருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளுக்காக அவர் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று சுங்கத் திணைக்களம் தெரிவித்தது.

## சீன எரிபொருள் விற்பனைக்கு அனுமதி மறுப்பு

இலங்கையில் எரிபொருள்களை விற்பனை செய்வதற்கு சீன நிறுவனம் விடுத்த கோரிக்கையை கொழும்பு அரசு நிராகரித்துள்ளது. உள்ளூர் நிறுவனங்கள் பாதிக்கப்படும் என்ற காரணத்தால் கொழும்பு அரசு, சீனா நிறுவனத்தின் கோரிக்கையை நிராகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. இலங்கையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும், இந்திய எரிபொருள் நிறுவனமும் எரிபொருள் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அனுராவின் சொத்து மோதலுக்கு முடிவு

சிறீலங்காவின் முன்னாள் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கவின் சொத்துக்கள், அவரது சகோதரிகளான முன்னாள் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிக்கா,



சுனேத்ரா ஆகியோருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. அனுராவின் சொத்துக்களுக்கு உரிமை கோரி அவரது சகோதரிகள் 2008ம் ஆண்டு வழக்குத் தொடுத்திருந்தனர். அது தொடர்பான தீர்ப்பு கொழும்பு நீதிமன்றில் கடந்த வாரம் அறிவிக்கப்பட்டது. சகோதரிகள் இருவருக்குமே சொத்துக்கள் உரியது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

## வித்தியா கொலைக் குற்றவாளிகள் மரண தண்டனைக்கு எதிராக மனு

புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி சிவலோகநாதன் வித்தியாவைப் படுகொலை செய்தவர்களுக்கு ட்ரயல்-அட்-பார் நீதிமன்று மரண தண்டனை விதித்துள்ள நிலையில், அதில் இருந்து தப்புவதற்காக அவர்கள் மேன்முறையீடு செய்துள்ளனர். சிறைச்சாலைகள் திணைக்கள அதிகாரிகளும் குற்றவாளிகளின் சட்டத்தரணிகளும் தனித்தனியாக யாழ். மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

மேற்படிக் கொலையுடன் தொடர்புடைய ஏழு குற்றவாளிகளுக்கான மரண தண்டனைத் தீர்ப்புக்கு எதிராக அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள போகம்பறை சிறைச்சாலையின் அத்தியட்சகர், பதிவுத் தபாலில் மேன்முறையீட்டு மனுவை அனுப்பி வைத்துள்ளார். கொலையின் பிரதான சூத்திரதாரியான சுவிஸ்குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் மற்றும் அவரது சகோதரன் மகாலிங்கம் சசீந்தரன் சார்பில் சட்டத்தரணி மேல் முறையீடு செய்துள்ளார்.



குற்றவாளிகளுக்கு, ட்ரயல் அட் பார் தீர்ப்பாயத்தூடாக மரண தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதால், அவர்களின் மேன்முறையீட்டு மனு நீதியரசர்கள் ஐவர் அடங்கிய உயர் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என யாழ். மேல் நீதிமன்று தெரிவித்துள்ளது. தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் உள்ள தமிழ் மக்களை வித்தியா படுகொலை அதிர்ச்சியடையச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அவலச் சாவுகளும்...

அத்துடன், தனது அக்கா தூக்குப் போட்டுள்ளார் என்று அந்த நண்பர் கூறியதை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த தங்கை தனது அக்கா கட்டிலில் உறங்கிய நிலையில் சடலமாக இருந்ததாக தெரிவித்துள்ளார்.

ஒரு பிள்ளையின் தாயான குறித்த பெண் உயிரிழந்த அறையில் முகட்டு வளையில் கயிறு ஒன்று தொங்கிய நிலையில் காணப்பட்டதாகவும் அங்கு சென்றிருந்த சிறீலங்காக் காவல்துறையினர் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சகோதரியின் பாடசாலை நண்பன் ஒருவர் குறித்த வீட்டில் இருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் குறித்த பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் பட்டிப்பளையைச் சேர்ந்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளதுடன், உயிரிழந்த பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டது.

இதேவேளை, பெண்ணின் மரணத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் இளைஞரை கைது செய்யாமல் அவரை காப்பாற்றும் நடவடிக்கைகளை காவல்துறையினர் மேற்கொண்டதாகவும் பிரதேச மக்கள் குற்றச்சாட்டுகளை தெரிவித்தனர். கொக்கட்டிச்சோலை நிலையத்தினை பெருமளவான இளைஞர்கள் சூழ்ந்திருந்ததன் காரணமாக அப்பகுதியில் பதற்ற நிலைமையேற்பட்டதைத் தொடர்ந்து குறித்த சம்பவம் தொடர்பில் குற்றம்சாட்டப்பட்ட இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

### அலவாங்கு நெஞ்சில் பாய்ந்து பெண் பலி

மேய்ச்சலுக்குக் கட்டிய மாட்டை அவிழ்க்கச் சென்ற குடும்பப் பெண் மாடுகட்டும் அலவாங்கு நெஞ்சில் தாக்கியதில் உயிரிழந்தார். அலவாங்கிலிருந்து கயிறை அவர் அவிழ்த்த போது, மாடு இழுத்ததால் அலவாங்கு அந்தப் பெண்ணின் நெஞ்சில் பாய்ந்ததாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. முல்லைத்தீவு முத்துஐயன் கட்டு தட்டையர் மலைப் பகுதியைச் சேர்ந்த தேவராசா இந்திராணி (வயது 65) என்பவரே உயிரிழந்தார். நெஞ்சுப் பகுதியில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட அவர் உடனடியாக முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேலதிக மருத்துவத்துக்காக அவர் வவுனியா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு மருத்துவம் பயனளிக்காது அவர் உயிரிழந்துள்ளார்.

### வயோதிபத் தாய் அடித்துக் கொலை - மகன் கைது

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்ட பகுதியில் வயோதிப பெண்ணொருவர் அடித்து கொலை செய்யப்பட்டுள்ளார். குறித்த வயோதிப பெண்மணியின் மனநலம் பாதிக்கப்பட்ட மகனாலேயே கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது. இதில் அதேயிடத்தை சேர்ந்த 70 வயதுடைய செ.இரத்னாம்பிகை என்ற வயோதிப பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கடந்த 9ம் திகதி இராசாவின் தோட்டம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மின்சார இணைப்பு வேலைக்கு மின்சார சபை பணியாளர்கள் சென்றுள்ளனர்.

அந்த சமயம் குறித்த வீட்டின் கிணற்றடி பகுதியில் நபர் ஒருவர் இருந்துள்ளார். அவரது நடத்தையில் சந்தேகம் கொண்ட மின்சாரசபை பணியாளர்கள் ஏன் இந்த இடத்தில் தனியாக இருக்கின்றீர்கள் என கேட்டுள்ளார்கள். அப்போது அம்மாவை அடித்து கொன்று விட்டேன். அதனால் தான் இங்கு இருந்து பார்த்துகொண்டு இருக்கின்றேன் என பதில் கூறியுள்ளார். எனினும் அதனை உடனடியாக நம்ப மறுத்த பணியாளர்கள் கிணற்று அருகில் சென்று எட்டிப்பார்த்துள்ளார்கள். அப்போது சடலம் தண்ணீரில் மிதந்து கொண்டுள்ளதை அவர்கள் அவதானித்துள்ளார்கள்.

பின்னர் சம்பவ இடத்திற்குச்சென்று விசாரணைகளை மேற்கொண்ட சிறீலங்கா காவல்துறை, சந்தேகத்தின் பேரில் குறித்த வயோதிப பெண்ணின் மகனான செ.சுதர்சன் (வயது 35) என்பவரை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செய்திகளும் எழும் கேள்விகளும்



தெய்வமகள்

**செய்தி:-** வடக்கு மாகாணமும், கிழக்கு மாகாணமும் இணைவதற்கு நாம் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம் இந்த விடயத்தில் நாம் தெளிவாக இருக்கின்றோம் என அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** சாமி ஓமெண்டாலும் பூசாரிகள் விடமாட்டினமாக்கும்..?

★★★★ ★★★★

**செய்தி:-** வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் இந்த ஆட்சிக் காலத்துக்குப் பின்னர் அவருக்கு எந்தக் காரணம் கொண்டும் ஆதரவளிப்பதில்லை என்று ரெலோ அமைப்பு தீர்க்கமாக முடிவு செய்துள்ளது.

**எழும் கேள்வி:-** மக்களின் விருப்பங்களைவிட அமைச்சுப் பதவிகள்தான் முக்கியமாகிவிட்டனவோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** நாம் அனைவரும் சர்வதேசத்திடம் நியாயத்தை கேட்கின்ற நிலை நிச்சயமாக உருவாகும் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** சர்வதேசத்திடம் நியாயம் கேட்கின்ற நிலை இன்னும் உருவாகவில்லையா உங்களுக்கு..?

★★★★ ★★★★

**செய்தி:-** பெற்றோருக்குக் கீழ்படியாத பிள்ளைகள் எதிர்காலத்தில் சிறைத் தண்டனை அனுபவிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகலாம் என்று சிறீலங்கா சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** பிள்ளைகளை சிறையில் போட்டுவிட்டு, பெற்றோர்களை முதியோர் இல்லத்திலா விடப்போகின்றீர்கள்..?

★★★★ ★★★★

**செய்தி:-** வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் மாநாயக தேரர்களை சந்தித்தமை வரவேற்கத்தக்கது. சிங்கள மக்களின் நிலைமைகளை அவர் விரைவில் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும் என சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகே'? சேனாநாயக்க தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** ஏன் தமிழர்களின் நிலைமைகளை மாநாயக தேரர்கள் விளங்கிக்கொள்ள மாட்டினமோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** போர்க்குற்றங்களை ஏற்றுக்கொண்டு வெளிவிவகார அமைச்சு தேசத்துரோக செயலை செய்துள்ளதாகவும் மீண்டும் மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இவர்களுக்கு தூக்குத்தண்டனை வழங்கப்படும் எனவும் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** கொலை வெறி இன்னும் குறையவில்லையாக்கும்..?

★★★★ ★★★★

**செய்தி:-** எந்த ஒரு நாடும், தனது அரசாங்க கொள்கையின் ஒரு கருவியாக, பயங்கரவாதத்தைப் பயன்படுத்துவதைச் சகித்துக் கொள்ள முடியாது என ஐ.நாவில், இந்தியப் பிரதிநிதி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** சிறீலங்கா அரசாங்கம் மட்டும் பயன்படுத்தலாமா..?

★★★★ ★★★★

**செய்தி:-** சிறீலங்காவிற்கு சுதந்திரம் வழங்கப்பட்ட நிகழ்வு, கொழும்பு சுதந்திரச் சதுக்கத்தில் நடைபெற்றபோது, ஓர் இளம் சிறுவனாக, நேரடியாக பிரசன்னமாயிருந்து மிகவும் பெருமையுடன் அவதானித்ததாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** உங்களைத் தவிர வேறு யார் இதற்காக எல்லாம் பெருமைப்படப் போகின்றார்கள்..?

★★★★ ★★★★

**செய்தி:-** ராஜபக்ச குடும்பத்திலுள்ள எவரையும் எனது ஆட்சியின் கீழ் தலைமை அமைச்சராக்குவதற்கு இடமளிக்கமாட்டேன் என்று சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** ஒட்டகத்திற்கு இடம் கொடுத்தவனின் கதையை மைத்திரி தெரிந்து வைத்திருக்கின்றாரோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** தற்போது நாட்டுக்குள் இஸ்ரேலின் மொசாட் புலனாய்வுப்பிரிவு, இந்தியாவின் றோ பிரிவு, அமெரிக்க புலனாய்வுப்பிரிவு, சீன மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பலமான பிரிவுகளும் உட்புகுந்துள்ளன என பொது பல சேனாவின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** அப்ப சிறீலங்கா புலனாய்வுத்துறைக்கு என்ன வேலையாம்..?

# தலைவர் போராட்டத்தை கைகளில் தந்தது வெல்வதற்காகத்தான் வீழ்வதற்காக அல்ல...

**'தாயகத்தில் இருந்து' காந்தரூபன்**

சிங்கள தேசம் தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமே தமக்கு எதிரானவர்கள் என்று கருதியது. ஆதனால் சிங்கள அரசும் படைகளும் புலிகளை அழிக்கவேண்டும் என்று உலக நாடுகள் தோறும் பிரச்சாரம் செய்தது.

புலிகள் பயங்கரவாதிகள் என்றும் அவர்கள் உலக நாடுகளுக்கே அச்சுறுத்தலானவர்கள் என்றும் வல்லரசு நாடுகளிடம் சென்று ஒப்பாரி வைத்தனர் சிங்களவர்கள். அதன் மூலம் பெற்றுக்கொண்ட ஆயுதங்களைப் பயன்படுத்தி புலிகளின் கட்டமைப்புக்களைச் சிதைத்தனர்.

புலிகளுடன் மரபுவழிச் சமர் புரிய முடியாமல் இரசாயன ஆயுதங்களை வீசினர். கொத்துக் குண்டுகளைக் கொட்டினர். வன்னிப் பெருநிலப்பரப்பை பாலைவனமாக்கினர். புலிகளை அழிப்பது என்ற பெயரில் மக்களைக் கொன்று குவித்தனர். இயற்கைச் சமநிலையைக் குழப்பினர்.

ஆனால், அரசும் அதன் படைகளும் நினைப்பதைப் போன்று தமிழீழ விடுதலைப் புலிகள் வேறு தமிழ் மக்கள் வேறு இல்லை என்பதை, 2009 மே 18 இற்குப் பின்னர் தமிழ் மக்கள் நிரூபித்துக்கொண்டிருக்கின்றனர். வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் தன்முனைப்புடன் இடம்பெறும் தமிழ் மக்களின் போராட்டங்கள் இதையே எடுத்துக்காட்டுகின்றன.

இந்தப் போராட்டத்தின் ஒரு வடிவமாகவே கடந்த 14 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில், சிறீலங்காவின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டம் அமைந்திருந்தது. ஒரு நாட்டின் ஜனாதிபதிக்கு எதிராக, அவருக்கு முன்பாகவே கறுப்புக் கொடி ஏந்தி மக்கள் போராட்டம் நடத்துகின்றார்கள் என்றால் அவர்கள் தமிழ் மக்களாகத்தான் இருப்பர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுக்காவே போராடினார்கள் என்பதை தமிழ் மக்கள் ஒவ்வொரு தடவையும் நிரூபித்துக்கொண்டிருக்கின்றனர். யாழ்ப்பாணத்தில், அதுவும் தமிழ்மொழித்தின தேசிய விழா நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, அந்த நிகழ்வுக்கு ஜனாதிபதியை வரவேண்டாம் என்று கோரிக்கை விடுக்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

தமிழ் மொழியை உயிராக நேசிக்கும் தமிழர்கள், தமது மொழியையும் பண்பாட்டையும் பேணிப் பாதுகாப்பதற்காகவே இலட்சக்கணக்கான உயிர்களைத் தியாகம் செய்தனர். அவ்வாறு உயிர்கொடை கொடுத்த மண்ணில் நடைபெறும் தமிழ் மொழிக்கான நிகழ்வைத் தாங்களே புறக்கணித்திருக்கின்றனர்.

அந்த நிகழ்வுக்கு ஜனாதிபதியை வரவேண்டாம் என்று அவருக்கு எதிர்ப்புக் காட்டிப் போராட்டம் நடத்துகின்றனர். இந்த நிலை ஏன் ஏற்பட்டது? இந்த நிலைக்குக் காரணம் என்ன என்பதை சர்வதேசம் சற்றேனும் சிந்தித்துப் பார்த்தால் தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினையை அவர்கள் விளங்கிக்கொள்வார்கள்.

தமிழ் மக்கள் தமது இலட்சியத்தில் உறுதியாக நிற்பவர்கள். தமிழீழம் என்ற உயரிய இலட்சியத்திற்காக முப்பது ஆண்டுகள் எதிரியுடன் போரிட்டனர். அந்தப் போராட்டம் தற்போது தோற்றுவிட்டது என்று அவர்கள் நினைக்கவில்லை. தமது இலட்சியக் கனவில் இருந்து அவர்கள் பின்வாங்கவும் இல்லை.

போராட்ட வடிவங்கள் மாறலாம், போராட்ட இலட்சியம் மாறாது என்று கூறிய தமிழீழ தேசியத் தலைவரின் சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுப்பவர்கள் தமிழ் மக்கள். இப்போது போராட்ட வடிவம் மட்டுமே மாறியிருக்கின்றது. போராட்ட இலட்சியம் எப்போதும் மாறாது, மாறப்போவதும் இல்லை என்பதை தமிழ் மக்கள் அடிக்கடி துலாம்பரமாக வெளிப்படுத்தி வருகின்றனர்.

**தற்போது தமிழர் தாயகத்தில் விடுதலைக்கான போராட்டங்கள் வீச்சடைந்து வருகின்ற நிலையில், புலம்பெயர் தேசத்தில் போராட்டங்கள் வலுவிழந்துவிட்டன. இது சாதகமான நிலைப்பாடு அல்ல. புலம்பெயர் தேசத்தில் உள்ள எந்தவொரு தமிழ்த் தேசிய செயற்பாட்டாளரும் ஓய்வு எடுக்கக்கூடாது. உண்மையான வீரனுக்கு மரணம் தான் ஓய்வு என்றார் தேசியத் தலைவர்.**




நாடாளுமன்ற அரசியலில் நம்பிக்கை இல்லை என்றார் தேசியத் தலைவர். அது உண்மையும் கூட. ஆனால், அதே நாடாளுமன்றில் இருந்துகொண்டு சர்வதேசத்திற்கு தமிழ் மக்களின் போராட்ட உண்மைகளை உணர்த்துவதற்காகவும், தென்னிலங்கையிலுள்ள அப்பாவிச் சிங்கள மக்களுக்கு தமிழ் மக்களின் போராட்ட நியாயப்பாடுகளை எடுத்துரைப்பதற்காகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்தப் பணியை நேர்த்தியாகச் செய்துகொண்டிருந்தது. ஆனால், 2009 இற்குப் பின்னர் சுமந்திரன்

தொடர்ச்சி 14ம் பக்கம்

## கடவுச்சீட்டை இலங்கையில் அடகுவைத்த சீனப் பெண்!

சூதாட்டம் என்றால் சீனர்களுக்கு போதும். கடவுச்சீட்டை இரண்டு இலட்சம் ரூபாவுக்கு அடகு வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்ட சீனப்பெண்ணால் சிறீலங்காக் காவல்துறையினருக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. தனது கடவுச்சீட்டை யாரிடம் அடகு வைத்தார் என்பது தெரியாத நிலையில், அதை தேடும் பணியில் தற்போது காவல்துறையினர் ஈடுபட்டுள்ளனர். சூதாட்டத்தில் ஈடுபட்ட பெண் அதில் தோல்வியுற்ற காரணத்தினால் கடவுச்சீட்டை ஒருவரிடம் அடகு வைத்துள்ளார். ஆள் அடையாளத்தை நிரூபிக்க எந்த ஆவணங்களும் இல்லாத நிலையில் சீனப் பெண் கைது செய்யப்பட்டார்.

## 6 மாதங்களின் பின் வந்து சேர்ந்த சடலம்!

மத்திய கிழக்கு நாடொன்றுக்குத் தொழிலுக்குச் சென்ற பெண் ஒருவர் உயிரிழந்த நிலையில், அவரது சடலம் 6 மாதங்களின் பின்னர் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது. பசறைப் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான அவர், மத்திய கிழக்கு நாடொன்றுக்குச் சென்று பல்வேறு துன்புறுத்தல்களை எதிர்கொண்டார் என்று அவரது உறவினர்கள் தெரிவித்தனர். அவர் உயிரிழந்த விடயம் தமக்கு 6 மாதங்களுக்கு முன்னரே அறிவிக்கப்பட்டது எனவும் உறவினர்கள் தெரிவித்தனர். இந்த நிலையில் அவரது சடலம் கடந்த வாரம் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## லசந்த கொலை தொடர்பாக 295 பேரிடம் வாக்குமூலம்

சிறீலங்காவின் மூத்த ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் கெலை வழக்கில், இராணுவப் புலனாய்வுப் பிவைச் சேர்ந்த 295 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது என்று அந்நாட்டுக் காவல்துறையினர் தெரிவித்தனர். லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பான வழக்கு கல்கிசை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நீதிமன்றில் முன்னிலையாகிய இரகசியப் பிரிவுக் காவல்துறையினர் வாக்குமூலம் தொடர்பான விரங்களை நீதிமன்றுக்குத் தெரியப்படுத்தினர். தொலைபேசி உரையாடல்கள் விரங்கள் இன்னமும் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தனர். இந்த வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 18ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## சந்திரிக்காவுக்குப் புதிய பதவி

இனப்படுகொலையாளியும், சிறீலங்கா சுதந்திரக்கட்சியில் முன்னாள் தலைவரும் அந்நாட்டு முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிக்காவுக்கு புதிய பதவி வழங்கப்பட்டுள்ளது. அத்தனகல்ல தொகுதியின் அமைப்பாளராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து கட்சியின் பிரதான உறுப்பினர்கள் மற்றும் அரச தலைவர் முன்னிலையில் அவர் நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டார்.


விரைவில்...
வீ
தமிழ்க்கதிர்
TAMILKATHIR.COM
இணையத் தொலைக்காட்சி!
TKTV.TV
TAMILKATHIR.COM
தொடர்புகளுக்கு: tktv.info@gmail.com
ஊடக மையம்

'கிழக்கில் இருந்து' எழுவான்

# தமிழ் மக்களின் குறைகளைக் கண்டுகொள்ளாத தமிழ் அரசியல் தலைமைகள்

போரினால் பாதிக்கப்பட்ட மாகாணங்களில் கிழக்கு மாகாணம் மிகவும் முக்கியமானதென்று கூறினாலும் யுத்தகாலத்திலும், யுத்தம் முடிந்த பின்பும் களநிலவரங்கள் ஆராயப் படவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆற்றுப்படுத்தல் நடவடிக்கையென்று எதுவும் இடம்பெறவில்லை. ஒருபக்கம் காணாமல் போனவர்கள் தொடர்பாக பிரச்சினைகள், மறுபக்கத்தில் அபிவிருத்தி என மக்கள் துன்பதுயரங்கள் நிலைந்த நாட்களைத்தான் கடக்கின்றார்கள்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை யில் மூவினங்கள் வாழ்கின்ற மாகாணம் எனினும், சிறீலங்கா அரசாங்கத்தினால் வழங்கப்படும் வளப்பங்கீடானது மிகவும் பாராபட்சமாக பகிரப்படுகிறது. இதனை அண்மையில் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு பயணம் மேற்கொண்ட அமைச்சர் மனோ கணேசன் குறிப்பிட்டிருந்தார். அபிவிருத்தி நடவடிக்கையில் தமிழ் பிரதேசங்கள் புறந்தள்ளப் பட்டுள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.

இக்கருத்தை அமைச்சர் மனோ கணேசன் குறிப்பிடுதற்கு முன்னர் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் என்று இருப்பவர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர். அத்துடன், தமிழ் தேசிய கூட்டப்பு கிழக்கு மாகாணத்தில் 11 தமிழ் ஆசனங்களைக் கொண்ட சபை, நாடாளுமன்றத்தில் திருகோணமலை மாவட்டத்தில் தேசிய பட்டியல் உறுப்பினர் உட்பட இரு நாடாளுமன்ற உறுப்பினர்களையும், மட்டக்களப்பு மாவட்டம் மூன்று உறுப்பினர்களையும், அம்பாறை ஒன்று என மொத்தமாக எதிர்க்கட்சித் தலைவர் உட்பட ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட மாகாணமாக உள்ளபோதிலும் மத்திய அரசியல் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஒருவர் கிழக்கு மாகாணம் பற்றி பேசுகிறார் என்றால், கிழக்கில் மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்து என்ன பிரயோசனம்?

கிழக்கு மாகாணத்தில் தற்போது முஸ்லிம்களினால் தமிழர்களின் பூர்விக குடியிருப்பு மற்றும் பயிர்ச் செய்கை காணிகள் அபகரிக்கப்படுகிறது, அபிவிருத்தி நடவடிக்கையில் தமிழ் பிரதேசம் பின்தள்ளப்பட்டுள்ளது, மக்களின் மீள்குடியேற்ற முழுமையடையாது அரைகுறையாக காணப்படுகிறது. வேலையில்லா பட்டதாரிகளின் பிரச்சினை, மக்களை வறுமையில்வாட்டும் நுண்கடன் திட்டம், அரசாங்கத்தின் மாறுபட்ட பொருளாதாரக் கொள்கையினால் அதிகரிக்கும் விலையேற்றத்தினால் மக்களின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினை என பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துவரும் நிலையில், தமிழ் மக்களின் அன்றாடப்பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு எட்டப்படாது, அரசியல் ரீதியான கண்ணோட்டத்தில் அரசியல்கட்சிகள் நடந்துகொள்ளும் நடவடிக்கையானது மக்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் தேர்தல் தொகுதியில் தமிழ் மக்களின் காணிகள் சிங்கள மற்றும் முஸ்லிம்களினால் சூறையாடப்படுகிறது. தமிழர்களின் இந்து ஆலயத்திற்கு அருகில் பள்ளிவாசல்கள்கட்டப்பட்டள்ளன. பௌத்த சிங்களவர்களினால் தமிழ் இனம் அடக்கி ஒடுக்கப்படுகிறது. இது தொடர்பாக அம்பாறை மாவட்டத்தின் தமிழ்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறப்பினார் கோடீஸ்வரன் எடுத்த நடவடிக்கை என்ன? அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களின் வறுமையை வைத்து மதம் மாற்றுகின்றனர், தமிழ் பெண்களை கொத்தடிமைகளாக வைத்துள்ளனர். இவையெல்லாம் நாடாளு மன்ற உறுப்பினரின் கண்களுக்குத் தெரியவில்லையா?

இதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த படுவான்கரை பகுதியில் முன்னொரு காலத்தில் வாப்பாட வாப்பா குடியிருந்ததாக கூறிக் கொண்டு கொழும்பு அரசாங்கத்தின் அரசியல் பின்புலத்தில் தமிழர்களின் பூர்வீகச் சொத்துக்களை அத்துமீறி பிடிக்கின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்கட்டிச்சேனை போன்ற பகுதிகள் இன்றும் அபிவிருத்தி என்றால் என்ன? என மக்கள் கேட்கும் அளவுக்கு நிலவரம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

யுத்தத்தினால் பாதிக்கப்படாத காத்தான்குடி பகுதியில் எந்த ஒரு இடத்திலும் கிறவல் வீதி காணமுடியாது, அதுமாத்திரமல்ல பிரதேச சபை நகர சபையாக தரமுயர்த்தப்படுகிறது. பாடசாலைகளில் வித்தியாலயங்கள் கல்லூரியாகவும், தேசிய பாடசாலைகளாகவும் தரமுயர்த்தப்படுகிறது. வேலைவாய்ப்புகளிலும் அனைத்துத் துறைகளிலும் முஸ்லிம்களின் பங்களிப்பை காணக்கூடியதாக உள்ளது.

திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேச செயலளார் பிரிவுக்குட்பட்ட சம்பூர் பகுதியில் கடந்த 2006ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து, 2015ஆம் ஆண்டு முதல் கட்டமாக மீள்குடியேறிய 365 குடும்பங்களில் சுமார் 100க்கும் மேற்பட்ட அரச ஊழியர் குடும்பங்களாகும். மீள்குடியேறிய அரச ஊழியர்களுக்கு வாழ்வாதார உதவிகள் தவிர ஏனைய அனைத்து உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கு தகுதியாளவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிற போதிலும் அவர்களின் உதவிகள் பிரதேச செயலளாரினால் தடுத்து நிறுத்தப்படுகிறது. ஓபர், ஜே.ஆர். ஆர் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் மலசலகூடம், கிணறு வசதிகளை அமைத்துக் கொடுப்பதற்கு முன்வருகின்ற போதிலும் இதற்கு பிரதேச செயலளார் அனுமதி வழங்கவில்லை.

இதேவேளை, மூதூர் முஸ்லிம் பகுதிகளில் இடம்பெயர்ந்த முஸ்லிம் அரச ஊழியர்களுக்கு நிரந்தர வீட்டுத் திட்டம் உட்பட அனைத்து உதவிகளும் வழங்குவதற்கு அனுமதி வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. இது தொடர்பாக பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளான முன்னாள்



**அதிகமாக தமிழர்கள் வாழ்கின்ற மூதூர் பகுதிக்கு ஒரு தமிழ் பிரதேச செயலாளரை நியமிக்க முடியாத ஒரு வக்கற்ற அரசியல்வாதிகள்தான் தமிழ்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள்.**

மாகாண சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கும் கொண்டுவந்தும் இதுவரையில் எவ்வித நடவடிக்கையம் எடுக்கவில்லை. அதிகமாக தமிழர்கள் வாழ்கின்ற மூதூர் பகுதிக்கு ஒரு தமிழ் பிரதேச செயலாளரை நியமிக்க முடியாத ஒரு வக்கற்ற அரசியல்வாதிகள்தான் தமிழ்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

சம்பூர் பகுதியில் கொக்கட்டி எனும்...

தொடர்ச்சி 22ம் பக்கம்

## நிலச்சரிவு அவதானிப்பு இயந்திரத்தை வழங்கியது நோர்வே

நிலச்சரிவு அவதானிக்கும் இயந்திரம் ஒன்றை நோர்வே அரசு, சிறீலங்காவிற்கு வழங்கியுள்ளது. நோர்வேயின் சிறீலங்காவிற்கான தூதுவர் தோர்ப ஜோன், இடர் முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பாவிடம் அந்த இயந்திரத்தைக் கையளித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டள்ளது. இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தி நிலச்சரிவு அபாயம் இல்லாத பகுதிகளை இலகுவாக அடையாளம் காண முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாலியல் தொழிலாளிகள் தொடர்பில் கணக்கெடுப்பு

பாலியல்த் தொழிலாளிகள் மற்றும் ஓரினச் சேர்க்கையாளர்கள் தொடர்பில் ஆய்வு நடத்தப்பட உள்ளதாக, சிறீலங்காவின் தேசிய பால் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் சிசிர லியனகே தெரிவித்தார். 2014ம் ஆண்டில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் போது இலங்கையில் சுமார் 15 ஆயிரம் பாலியல்த் தொழிலாளிகளும், 10 ஆயிரம் ஓரினச் சேர்க்கையாளர்களும் உள்ளதாகக் கண்டறியப்பட்டது. எச்.ஐ.வி. தடுப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது இந்தப் புள்ளி விபரத் தகவல்கள் மிகவும் அவசியமானது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எயிட்ஸ் நோயை ஐந்து ஆண்டுகளில் இல்லாதொழிக்கும் திட்டமொன்று முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற 6631 பேர் கைது

பொது மன்னிப்பு காலத்தில் இராணுவத்தில் சரணடையாத மற்றும் சட்ட ரீதியில் விலகிக்கொள்ளாத இராணுவ உறுப்பினர்கள் 6631 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரொ'ான் செனவிரத்ன தெரிவித்துள்ளார். இவ்வாறு இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர்களுக்கு தொழில்வாய்ப்புக்களை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் எனவும், அவ்வாறே நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இராணுவத்தில் இருந்து தப்பிச்சென்றவர்களை சட்ட ரீதியில் விலகிக்கொள்ளும் பொருட்டு கடந்த வருடம் (2016)



டிசம்பர் மாதம் பொதுமன்னிப்பு காலம் வழங்கப்பட்டிருந்தது. இந்த காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க சிலரே சட்ட ரீதியில் விலகிச் சென்றுள்ளனர் எனவும் மேலும் 38,000றக்கும் அதிகமானோர் இதுவரை சட்டரீதியில் விலகிச்செல்லாது உள்ளனர் எனவும் ரொஷான் செனவிரத்ன சுட்டிக்காட்டியுள்ளார். இதற்கமைய கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 6631 கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




**கேள்வி:–** அரிச்சந்திரன் அவர்களே, எல்லாக் கேள்விகளுக்கும் உங்களால் பதிலளிக்க முடியுமா?

விமலராஜ் குகநாதன் சூரிச் சுவிச்சர்லாந்து

**பதில்:–** கேள்வி கேட்பதுதான் கடினம். பதிலளிப்பது சுலபம் என்று சொல்வார்கள். அந்த சுலபமான வேலையைத்தான் நான் செய்துகொண்டிருக்கின்றேன். ஆனாலும் அதற்கும் தொடர்ந்து தேடல் வேண்டும். தேடல் இல்லாமல் பதிலளித்தால், அந்தப் பதில் தவறாகவும் போய்விடும். இப்போதுதான் தேடலுக்கு இலகுவாக எத்தனையோ நவீன இலத்திரனியல் வழிகள் வந்துவிட்டனவே. இருந்தாலும் சில தேடல்களுக்கான சரியான பதில்கள் அங்கும் கிடைப்பதில்லை. நம் முன்னோர்களிடம் இருந்துதான் அவற்றைப் பெற்றுக்கொள்ளவேண்டியிருக்கின்றது.



அண்மையில் முகநூலில் நண்பர் ஒருவர் பதிவிட்டிருந்த வாக்கியத்தைப் பார்த்தபோது அது எத்தனை யதார்த்தமானது என்று புரிந்தது. அவர் எழுதியிருந்தது இதுதான்...

**‘உனக்கு எதாவது தெரியாதென்றால் கூகுளிடம் கேள்.**
**உனக்கு யாரையாவது தெரியாதென்றால் பேஸ்புக் இடம் கேள்.**
**உனக்கு எதையாவது தேடியும் கண்டுபிடிக்க முடியாவிட்டால் அம்மா இடம் கேள்.’**

இத்தனை வழி இருக்கும்போது உங்கள் கேள்விகளுக்கு பதிலைக் கண்டுபிடிப்பது என்ன அத்தனை கடினமா..?

**கேள்வி:–** தமிழீழம் வேண்டுமென்றால் அங்கு சென்று போராட வேண்டியதுதானே? பிறகெதற்கு வெளிநாடுகளில் நின்றுகொண்டு போராடுகின்றீர்கள்..?

பரா. கருணாகரன் பரிஸ் பிரான்ஸ்

**பதில்:–** யூதர்கள் இஸ்ரேலில் நின்றுகொண்டு போராடவில்லை. அவர்கள் போராடும்போது இஸ்ரேல் என்ற ஒரு நாடும் உலக வரைபடத்தில் இருக்கவில்லை. ஆனாலும் தங்கள் தாயகத்தை அமைக்க அவர்கள் புலம்பெயர்ந்திருந்த நாடுகள் எங்கும் தொடர்ந்து போராடினார்கள். அவர்களின் தாயகம் அமைவதற்கு முதன்மையான நபர் ஜேர்மனியின் சர்வாதிகாரி அடொல்ப் ஹிட்லர்தான். யூதர்கள் மீது அத்தனை அழிவுகளை அவர் ஏற்படுத்தியிருக்காவிட்டால் அவர்களின் தாயகக் கனவு இன்றளவில் எவ்வாறு இருந்திருக்கும் என்பது தெரியவில்லை. ஹிட்லர் அந்த மக்களுக்கு ஏற்படுத்திய பேரழிவுதான், தங்களுக்கான ஒரு தாயகத்தை அமைத்தே ஆகவேண்டும் என்ற உறுதியையும், உந்துசக்தியையும் அந்த மக்களுக்குக் கொடுத்தது.



ஆனால்; தாயகத்தை அமைப்பதற்கு எத்தனையோ அர்ப்பணிப்புக்களுடன் போராடிய தமிழினம், முள்ளிவாய்க்காலில் பேரழிவைச் சந்தித்ததன் பின்னர், போராடுவதில் பின்னடித்து நிற்கின்றது. அழிவைச் சந்தித்தபின் எழுச்சிகொள்ளவேண்டிய இனம், அடங்கிப்போனதென்பது தாயக மீட்பில் யூதர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான பெரும் முரண். தமிழினம் தங்கள் போராட்ட குணத்தை இழந்துவிட்டதுவோ என்று அச்சப்படும் அளவிற்கு வலுவிழந்துபோய் நிற்கின்றது. ஆனாலும் அங்கொங்கொன்றும் இங்கொன்றுமாக நடக்கும் தொடர் போராட்டங்கள், அந்த நம்பிக்கையில் நீர் வார்ப்பது போல் இருக்கின்றது.

எங்கு நின்று போராடுகின்றார்கள் என்பது முக்கியமல்ல, போராடுகின்றார்களா என்பதுதான் முக்கியமானது.

**கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**
இலத்திரனியல் முகவரி : eelamurazu@gmail.com
தபால் முகவரி : Media Centre, BP 40, 93141 Bondy pdc
குறுந்தகவலாக (கைபேசி SMS) : 00 33 7 81 80 81 16




– கந்தரதன்

# தீணிக்கப்படும் கடன் சுமை!

இன்று தமிழர் தாயகப் பகுதிகளில் ஒவ்வொருவரும் கடன் சுமைகளைத் தம் தலைகளில் சுமந்தவர்களாகவே வலம் வருகின்றனர். இதற்கு அங்கு போட்டி போட்டுக்கொண்டு இருக்கும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களே காரணமாக அமைந்துள்ளன என்று கூறுவது மிகையாகாது.

இன்றைய காலகட்டத்தில் ஆடம்பரங்களின் தேவைகள், அதிகரித்துள்ளதைக் காணமுடிகின்றது. அத்துடன் ஆடம்பர வாழ்க்கைக்கு போட்டி போட்டுக்கொண்டு அலையும் சமூக உணர்வுகளே மேலோங்கியிருக்கின்றன. குறித்த ஆடம்பரங்களை அரங்கேற்றுவதற்கு தனியாரிடமிருந்தோ அல்லது பொது அமைப்புக்களிடம் இருந்தோ கடன்பெறவேண்டி ஏற்படுகின்றது. இவ்வாறான நிலை விரும்பியோ விரும்பாமலோ ஏற்பட்டு விடுகின்றது. தேவையற்ற ஆடம்பரப் போட்டிகள் எமது சமூகத்தை கடும் ஆபத்துக்குள் தள்ளிவிடும் என்பதே உண்மை.

இதனை நிரூபிப்பதாக தமிழர் தாயகத்தில் உள்ள பெண்கள் அமைப்பினரின் கோரிக்கை காணப்படுகின்றது. அதாவது, குடும்ப வாழ்வை பாதிப்படையச் செய்கின்ற நுண்கடனிலிருந்து எங்கள் பிரதேச பெண்களை பாதுகாக்கவேண்டும் என கிளிநொச்சி முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்ட பெண்கள் அமைப்பினர், மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமியிடம் மன்றாட்டமாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.



நுண்கடன் நிறுவனங்கள் இலகுவான முறையில் அதிக வட்டிக்கு நுண்கடன்களை மக்களுக்கு வழங்கி வருகின்றன. குறிப்பாக அதிகமாக பெண்களை இலக்குவைத்தே இந்த நுண்கடன்கள் வழங்கப்படுகிறது.

இதன் பின்னர் கடனை அறவிட வருகின்ற நிதி நிறுவனங்களைச் சேர்ந்த நபர்கள் அநாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வதோடு, அலுவலக நேரங்களுக்கு பின்னரும் சில இடங்களில் இரவு நேரங்களிலும் கடன் அறவீட்டுக்கு வருகின்றார்கள்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் பல்வேறு தேவைகளுடன் வாழ்கின்றனர். வறுமை அதிகமாக காணப்படும் பிரதேசமாகவும் இந்த மாவட்டங்கள் காணப்படுகிறது. எனவே இங்கு மக்களிடம் இலகுவாக கடன்களை வழங்கக் கூடிய சூழ்நிலைகளே காணப்படு கிறது.

இதனைத் தமக்கு சாதகமாக பயன்படுத்தும் நிதி நிறுவனங்கள் மக்களிடம் அதிக வட்டிக்கு வாரந்த கடன், மாதாந்த கடன் என வழங்கி வருகின்றார்கள் எனவும் பெண்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

மேலும் அரச மற்றும் வணிக வங்கிகளில் கடன்களுக்கு காணப்படுகின்ற இறுக்கமான நடைமுறைகளும் நுண்கடன் நிறுவனங்களுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது எனவும் மத்திய வங்கியின் ஆளுநருக்கு சுட்டிக் காட்டப்பட்டதோடு, இந்த நுண்கடன் முறைக்கு மத்தியவங்கியும் பொறுப்பேற்க வேண்டும் எனவும் வங்கிகளை கட்டுப்படுத்த வேண்டிய மத்திய வங்கி இவர்களை கட்டுப்படுத்தத் தவறியது தொடர்பிலும் மத்திய வங்கியின் ஆளுநரின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி நிதி நிறுவனங்களின் நுண்கடன் ஒரு கொள்ளை கடன். இது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, வங்கிக் கடனை செலுத்த முடியாமல், வங்கி ஊழியர்களுக்கு பயந்து நான்கு மணி நேரமாக குடும்ப பெண் ஒருவர் கிணற்றுக்குள் ஒழிந்திருந்த பரிதாப சம்பவம் ஒன்றும் வடமராட்சி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

> **வீட்டைவிட்டு செல்ல மாட்டோம் எனக் கூறி அங்கேயே இருந்துள்ளனர். குறித்த பெண் அவர்களுக்கு பயந்து அருகில் உள்ள காணியில் இருந்த கிணற்றில் இறங்கி பதுங்கி இருந்துள்ளார். நான்கு மணி நேரமாகியும் அந்த நிதி நிறுவன ஊழியர்கள் வீட்டை விட்டு செல்லாத காரணத்தினால் அவர் நான்கு மணி நேரமும் கிணற்றுக்குள்ளேயே பதுங்கி இருந்துள்ளார்.**

குறித்த பெண் குடும்பத்தின் கஸ்ட நிலை காரணமாக 3 நிதி நிறுவனத்திடம் இருந்து கடனை பெற்றிருந்தார். வாராந்தம் பணத்தை செலுத்தி வந்துள்ளார்.

இறுதியில் அவரால் வாராந்தம் செலுத்தமுடியாமல் போனபோது, இரு வாரம் கழித்து 3 நிதி நிறுவனங்களுடைய ஊழியர்களும் அவருடைய வீட்டுக்கு வந்துள்ளனர். அங்கு வந்து இருந்து தகாத வார்த்தைகளை பிரயோகித்துள்ளனர்.

வீட்டைவிட்டு செல்ல மாட்டோம் எனக் கூறி அங்கேயே இருந்துள்ளனர். குறித்த பெண் அவர்களுக்கு பயந்து அருகில் உள்ள காணியில் இருந்த கிணற்றில் இறங்கி பதுங்கி இருந்துள்ளார்.

தொடர்ச்சி 22ம் பக்கம்

# மலரும் சுதந்திர பூமியில்




கலாநிதி சிறீஸ்கந்தராஜா

## குர்தி சுதந்திரத் தளபதியுடன் இரண்டரை மணிநேரப் பயணம்

ஈராக்கில் இருந்து பிரிந்து சென்று குர்திஸ்தான் தனியரசை அமைப்பதற்கான பொது வாக்கெடுப்பில் குர்தி மக்கள் ஈடுபட்டமைக்கான கூட்டுத் தண்டனையாகக் கடந்த மாதம் 29ஆம் நாளன்று குர்திஸ்தானுக்கான பன்னாட்டு விமானப் போக்குவரத்துக்களை ஈராக்கிய அரசாங்கம் தடை செய்தது. இத்தடையை அனைத்து வெளிநாட்டு அரச மற்றும் தனியார் விமான சேவை நிறுவனங்கள் ஏற்றிருப்பதால், கடந்த இரண்டரை வாரங்களாக குர்திஸ்தானின் எர்பில், சுலைமானியா ஆகிய பன்னாட்டு விமான நிலையங்களுக்கான நேரடி வெளிநாட்டு விமானப் போக்குவரத்துக்கள் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் குர்திஸ்தான் செல்லும் வெளிநாட்டு, உள்நாட்டுப் பயணிகள் ஈராக் தலைநகர் பாக்தாத்தில் உள்ள பன்னாட்டு விமான நிலையத்தில் இறங்கி, பின்னர் அங்கிருந்து எர்பிலிற்கும், சுலைமானியாவிற்கும் இடையில் நிகழும் உள்நாட்டு விமான சேவைகளைப் பயன்படுத்தும் நிலை காணப்படுகின்றது. ஆனால் கடந்த மாதம் 6ஆம் பிரித்தானியாவில் இருந்து குர்திஸ்தானுக்கு நான் பயணம் செய்த பொழுது நிலைமை அவ்வாறு இருக்கவில்லை.

06.09.2017 நள்ளிரவு கடந்த சில நிமிடத் துளிகள். துருக்கியின் இஸ்ரான்புல் விமான நிலையத்தில் இருந்து குர்திஸ்தானின் சுலைமானியா பன்னாட்டு விமான நிலையம் நோக்கிப் புறப்படுவதற்கான நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. விமான நிலையத்தின் உட்புறம் மின்குமிழ்களால் ஒளியூட்டப்பட்டு ஏதோ பகல் பொழுதில் அங்கு நிற்பது போன்ற பிரம்மையை ஏற்படுத்தியிருந்தாலும், வெளியில் கவிந்திருந்த இருள் நான் ஏறப்போகும் குர்திஸ்தானுக்கான விமானம் இரத்மலானையில் இருந்து பலாலிக்குப் பயணிக்கும் அன்ரனோவ் ரகத்தைச் சேர்ந்த தட்டிவான் சகடை விமானம் போன்றே இருக்கும் என்ற படிமத்தை வலுப்படுத்தியிருந்தது.

சோதனைப் பகுதியைக் கடந்து அதற்கும் விமானத்திற்கும் இடையிலான மேம்பாலக் குகை ஊடாக நடக்கத் தொடங்கிய பொழுது ஒரு கணம் அதிர்ந்து போனேன். ஐரோப்பிய நாடுகளுக்கிடையே போக்குவரத்துக்களில் ஈடுபடும் ரையன் எயார், ஈசி ஜெற் போன்ற விமானங்களுக்கு ஒப்பான வசதிகளையும், தொழில்நுட்பத்தையும் கொண்ட விமானம் ஒன்றை நோக்கி நான் நடந்து கொண்டிருப்பதை அப்பொழுது என்னால் உணர முடிந்தது.

என்னால் இதனை நம்ப முடியவில்லை. 'இது எப்படி சாத்தியமாகும்?' என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன். குர்திஸ்தான் எண்ணெய் வளங்களைக் கொண்ட ஒரு பிராந்தியம் தான். ஆனாலும் இலங்கையை விட சிறிய நாடாகவும், ஈராக்கின் ஒரு பகுதியாகவும் திகழும் குர்திஸ்தானில் இலங்கையை விட அதிக வசதிகள் இருக்கும் என்று நான் எண்ணியிருக்கவில்லை. ஆனாலும் என் கண் முன்னே நின்ற குர்திஸ்தானுக்கான விமானம் என் மனப்படிமங்களை இடித்து வீழ்த்தியது.

என் மனதில் எழுந்திருந்த கேள்விகளை ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு, எனக்கான ஆசனத்தைத் தேடிக்



ஒரு கூட்டத்தில்
கலந்துகொண்டிருக்கும் றிஸ்கார் அலி

கண்டுபிடித்து அமர்ந்து கொண்டேன். எனது ஆசனத்தில் நான் அமர்ந்து கொண்ட சில நிமிடங்களில் நடுத்தர வயதுமிக்க ஆண் ஒருவர் தனது துணைவியார் மற்றும் மூன்று பிள்ளைகளுடன் நடந்து வந்தார். இவர்களுடன் இரண்டு இளைஞர்கள் கூட வந்தார்கள். எனக்கு அருகில் நடுத்தர வயதுடைய ஆணும், பதின்மத்தின் ஆரம்ப ஆண்டுகளைச் சேர்ந்த அவரது மகளும் அமர்ந்து கொண்டனர். எங்களுக்கு முன்னால் இருந்த ஆசனத்தில் அவரது துணைவியாரும், ஏனைய இரண்டு பிள்ளைகளும் (இருவரும் சிறுவர்கள்) அமர்ந்தார்கள்.



றிஸ்கார் அலி
Rizgar Ali

அவர்களின் முன்புற ஆசனத்தில் ஒரு இளைஞனும், எங்களுக்குப் பின்புறமாக இருந்த ஆசனத்தில் மற்றைய இளைஞனும் அமர்ந்து கொண்டார்கள். அவர்கள் குறித்த நபரினது அல்லது அவரது துணைவியாரின் சகோதரர்களாக இருக்கலாம் என்று எண்ணிக்கொண்டேன்.

சிறிது நேரத்தில் விமானம் மேலெழுந்தது. அப்பொழுது என் அருகில் இருந்த நபர் தனது ஆசனத்தின் முன்னால் இருந்த தொலைக்காட்சித் திரையைச் சரிசெய்வதில் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். அவரின் பக்கம் திரும்பி சைகை மொழியில் அவருடன் பேசி அவருக்கு உதவிபுரிந்தேன்.

அப்பொழுது என்னைப் பார்த்து நன்றியுடன் சிரித்து விட்டு ஆங்கிலத்தில் அவர் கேட்டார்: "நீங்கள் இந்தியாவில் இருந்து வருகின்றீர்களா?"

"இல்லை, நான் இலண்டனில் இருந்து வருகின்றேன். நான் தமிழன்..." என்றேன்.

**உலகில் முப்பது நாடுகளுக்கு மேல் எமது தேச சுதந்திர இயக்கத்தைத் தடை செய்திருந்தாலும், முழு உலகமும் எமது வீரர்களைத் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கவில்லை என்பதும், தனியரசுக்கான பாதையில் பயணிக்கும் ஒரு தேசத்து மக்கள் எமது சுதந்திர வீரர்கள் மீது மதிப்பு வைத்துள்ளார்கள் என்பதையும் நினைத்த பொழுது ஆசுவாசமாக இருந்தது.**

"சிறீலங்காவா?" என்று அப்பொழுது வினவினார்.

"இல்லை, ஆனால் எனது நாடு இப்பொழுது சிறீலங்காவின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளது. உங்கள் நாடு ஈராக்கின் ஆதிக்கத்தின் கீழ் இருப்பது போன்றுதான் தமிழர்களான எங்கள் நிலையும்..." என்று பதிலளித்தேன்.

"ஓ... தமிழ்ப் புலிகளைப் பற்றிக் கேள்விப்பட்டுள்ளேன்..." என்று கூறினார்.

அத்துடன் எங்களின் பேச்சு அரசியலின் பக்கம் திரும்பியது. "உங்கள் நாட்டில் என்ன பிரச்சினை? நீங்கள் எதற்காகத் தனிநாடு கேட்கின்றீர்கள்?" என்று கேட்டார். மலையகத் தமிழர்களின் குடியுரிமைப் பறிப்பு, மொழியுரிமை பறிப்பு, பல்கலைக்கழக நுழைவுகளில் பாகுபாடு, தமிழர்கள் மீதான சிறீலங்கா அரசின் இனவழிப்பு எனச் சுருக்கமாக எமது பிரச்சினையை நான் கூறிய பொழுது, உடனே குறுக்கிட்ட அவரது பதின்ம ஆண்டுகளைச் சேர்ந்த மகள், "இது கொடுமையானது..." என்று கூறினார்.

அந்தச் சிறுமிக்குக் குறைந்தது பதின்மூன்று வயதிருக்கும். ஆகக் கூடினால் பதினைந்து வயதைத் தாண்டாது. ஆனால் தனது தந்தைக்கு நிகராக தமிழர் பிரச்சினையை அறிவதில் ஆர்வம் காட்டிக் கொண்டிருந்தார். இதுநாள் வரை எமது தமிழ்ப் பிள்ளைகள் மட்டும் தான் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்த எனக்கு, எமது இளைய தலைமுறையினருக்கு நிகராகக் குர்திப் பிள்ளைகளும் இருக்கின்றார்கள் என்பது வியப்புக்குரியதாகவே இருந்தது.

மீண்டும் சிறுமியின் தந்தை பேசினார். அவரது பெயர் றிஸ்கார் அலி கமஜான். "நாங்களும் இப்படியான பிரச்சினையைத் தான் சதாம் உசேனின் ஆட்சியில் எதிர்கொண்டோம். உங்களைப் போன்று தான் எமது மொழியுரிமை பறிக்கப்பட்டது. எமது கல்வியுரிமை மறுக்கப்பட்டது.

தொடர்ச்சி 15ம் பக்கம்

# தலைவர் போராட்டத்தை...

சுமந்திரன் போன்ற அடிவருடிகள் அதற்குள் நுழைந்ததும் கூட்டமைப்பு தடம் மாறிப் பயணித்து வருகின்றது.

அதனால் அந்தக் கட்சியில் இருந்து வெளியேறிய கஜேந்திர குமார் பொன்னம்பலம் போன்ற தமிழ் அரசியல்வாதிகள் தற்போது நேர்த்தியான தமிழ்த் தேசியப் பண்பாட்டை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றனர். அவர்களின் போராட்டங்களுடன் மக்கள் கரம்கோர்க்கவேண்டும். அப்போதுதான் அது தேச விடுதலையை விரைவுபடுத்தும்.

காணி விடுவிப்பாக இருந்தால் என்ன, கைதிகள் விடுவிப்பாக இருந்தால் என்ன போராட்டம் நடத்தியே அவற்றைச் சாதிக்க வேண்டிய நிலை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் இதற்கான போராட்டங்கள் தற்போது முனைப்புப் பெற்றுள்ளன. இதன்மூலம் சில சாதகமான முடிவுகளும் கிடைத்திருக்கின்றன.

நாம் விரும்பினாலோ விரும்பாவிட்டாலோ போராட்டமே எமது வாழ்க்கையாகவும் வாழ்க்கையே எமது போராட்டமாகவும் மாறிவிட்டது எனத் தமிழீழ தேசியத் தலைவர் கூறியதைப் போன்று, தமிழ் மக்கள் இன்று சிங்களத்தின் அடக்குமுறைக் குகைக்குள் இருந்தே உறுமத் தொடங்கியிருக்கின்றனர்.



இந்த உறுமல் தனியே, மைத்திரியை நோக்கியதாகவோ தென்னிலங்கையை நோக்கியதாகவோ இருக்கக்கூடாது. அது சர்வதேசத்தை நோக்கி நகர வேண்டும். தமிழீழ விடுதலைப் போராட்டம் சிறீலங்காவிற்குள் மட்டுப்படுத்தப்பட்ட போராட்டமாக அன்றி, அது சர்வதேச ரீதியாகப் பரிணமித்திருப்பதால் எமது எதிர்காலக் காய் நகர்த்தல்களும் அப்படியே அமைவது நன்மை பயக்கும்.

தமிழீழ அரசியல் ஆலோசகர், தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அன்று சர்வதேசத்தின் காதுகளுக்குள் உறுமியதைப் போன்று இன்று புலம்பெயர் தேசத்தில் உள்ள தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் உறுமவேண்டும்.

தற்போது தமிழர் தாயகத்தில் விடுதலைக்கான போராட்டங்கள் வீச்சடைந்து வருகின்ற நிலையில், புலம்பெயர் தேசத்தில் போராட்டங்கள் வலுவிழந்துவிட்டன. இது சாதகமான நிலைப்பாடு அல்ல. புலம்பெயர் தேசத்தில் உள்ள எந்தவொரு தமிழ்த் தேசிய செயற்பாட்டாளரும் ஓய்வு எடுக்கக்கூடாது.

உண்மையான வீரனுக்கு மரணம் தான் ஓய்வு என்றார் தேசியத் தலைவர். அவரது கருத்திற்கு செயல் வடிவம் கொடுத்தார் தேசத்தின் குரல். நோய் வாட்டிய போதிலும், வயதான போதிலும் தமிழீழ விடுதலைக்கான தனது பணியை இறுதிவரை நேர்த்தியுடன் செய்துமுடித்தார்.

அதேபோன்று, புலம்பெயர் தேசத்தில் உள்ள ஒவ்வொரு மக்களும் தமிழ் மக்களின் விடுதலைக்கான பணியை முழு வீச்சுடன் தொடங்கவேண்டும். சிறீலங்காவின் ஆட்சியாளர்களுக்கும் படையினருக்கும் எதிராக தாயகத்தில் போராட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற சம நேரத்தில் புலம்பெயர் தேசத்திலும் போராட்டங்கள் இடம்பெறவேண்டும்.

உலகில் காலத்திற்குக் காலம் புதிய நாடுகள் உருவாகிக்கொண்டிருக்கின்றன. தமிழ் மக்களை விட குறைந்த எண்ணிக்கையான மக்கள் தொகையையும் குறைந்த நிலப்பரப்பையும் உடைய சில தேசங்கள் தங்களை சுதந்திர நாடுகளாக பிரகடனப்படுத்தி, தனி நாடாக மாறியிருக்கின்றன.

ஆனால், முப்பது வருடங்களாக இரத்தம் சிந்திப் போராடி, நாற்பதாயிரத்திற்கு மேற்பட்ட மாவீரர்களை மண்ணில் விதைத்து, இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களை அர்ப்பணித்த பின்னரும் நாம் விடுதலை பெறவில்லை என்றால், உலகில் கையாலாகாத இனம் என்ற அவப்பெயர் எங்களை வந்து சேரும்.

எனவே, தமிழினம் தூக்கம் கலைந்து எழவேண்டும். சோம்பலைத் தூர விரட்டவேண்டும். தமிழ் மண்ணை மீட்க மீண்டும் களம் புகத் தயாராகவேண்டும். ஆயுதங்கள்தான் விடுதலைக்கான வழி அல்ல. எமக்கு அகிம்சையும் தெரியும் என்ற அண்ணன் திலீபனைப் பின்பற்றுவோம், வெள்ளைக் கொடி ஏந்தியும் போராடுவோம் எனத் துணிந்த நடேசன், புலித்தேவனைப் பின்பற்றுவோம்.

சிங்களச் சேனையை எம் தலைவர் சிந்தனையால் சிதறடிக்க வேண்டும். தலைவர் எமது கைகளில் ஒப்படைத்த போராட்டத்தை ஒப்பேற்ற வேண்டிய பெரும் பணி எம் அனைவருக்கும் உள்ளது. புதிய வழிகளைத் திறக்க வேண்டும். காற்றுப் புக முடியாத கட்டுநாயக்காவிற்குள் புகுந்த காவிய நாயகர்கள் போன்று புதிய வழிகளைத் திறந்து போராடவேண்டும். அதன் மூலமே தமிழர்களின் எதிர்காலம் இருள் அகன்று விடியலைப் பெறும்.

## இந்திய தேசச் செய்திகள்

# இந்தியாவில் ஐரோப்பிய ஒன்றிய மாநாடு ஒத்துழைப்பை வலுப்படுத்த உறுதி

இந்தியா மற்றும் 28 உறுப்பு நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய ஒன்றியம் இடையேயான 14வது உச்சி மாநாடு, டில்லியில் கடந்த 6ம் திகதி நடைபெற்றது. பிரதமர் நரேந்திர மோடி, ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் டொனால்ட் ஃபிரான் சிஸ் டஸ்க், ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் ஜோன் கிளாட் ஜங்கர் உள்ளிட்டோர் பங்கேற்ற இந்த மாநாட்டில், இருதரப்பு உறவுகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. அத்துடன், பயங்கரவாதம், ரோஹிங்கயாக்கள் விவகாரம், கொரிய தீபகற்பத்தில் நிலவும் பதற்றமான சூழல் உள்ளிட்டவை குறித்தும் விவாதிக்கப்பட்டது. மேலும், சூரிய மின்சக்தி உற்பத்தியில் சர்வதேச அளவில் ஒருங்கிணைந்து செயல்படுவது உள்பட 3 ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின.



இதுதொடர்பாக வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், ஹபீஸ் சயீது, மும்பைத் தாக்குதல் வழக்கின் முக்கிய குற்றவாளி ஜாகியுர் ரஹ்மான் லக்வி, தாவூத் இப்ராஹிம் உள்பட சர்வதேச அளவில் தடை செய்யப்பட்ட பயங்கரவாதிகளுக்கும், லஷ்கர்–ஏ–தொய்பா, ஜெய்–ஏ–முகமது, ஐ.எஸ் உள்ளிட்ட பயங்கரவாத அமைப்புகளுக்கும் எதிராக உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இருதரப்பு தலைவர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மாநாட்டுக்கு பின்னர், பிரதமர் மோடி ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் இருவரும் என மூவரும் கூட்டாக செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தனர். அப்போது, மோடி கூறுகையில், பயங்கரவாதத்துக்கு எதிராக ஒருங்கிணைந்து செயல்படவும், பாதுகாப்பு உள்பட அனைத்து துறைகளிலும் இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்தவும் உறுதியேற்றுள்ளோம் என்றார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் டொனால்ட் டஸ்க் கூறுகையில், பயங்கரவாதத்துக்கு எதிராக குறிப்பாக இணைய வழி பயங்கரவாதத்துக்கு எதிராக ஒருங்கிணைந்து செயலாற்றுவது என்று கூட்டாகத் தீர்மானித்துள்ளோம். அத்துடன், பயங்கரவாதிகளுக்கு நிதி, ஆயுதங்கள் கிடைப்பதை தடுக்கும் நடவடிக்கைகளில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தவும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது என்றார்.

ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் ஜோன் கிளாட் ஜங்கர் கூறுகையில், இந்தியாவில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பெரிய அளவில் முதலீடு செய்துள்ளன. எனவே, இருதரப்புக்கும் இடையே தடையில்லா வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான சரியான தருணம் இதுவாகும். அதனை முன்னெடுப்பதற்கான முக்கிய படியாக இந்த மாநாடு அமைந்துள்ளது. எதிர்வரும் நாட்களில், இந்த விவகாரம் தொடர்பாக இருதரப்பினரும் பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டும் என்றார்.

பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஒஸ்ரியா உட்பட 28 உறுப்பு நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய ஒன்றியம், இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தக கூட்டாளியாக இருந்து வருகிறது. கடந்த ஆண்டில் சுமார் 5.7 இலட்சம் கோடி ரூபா (இந்திய) அளவுக்கு இருதரப்பு வர்த்தகம் நடைபெற்றுள்ளது. அதேபோல, இந்தியப் பொருள்கள் ஏற்றுமதிக்கான முக்கிய இடமாகவும் ஐரோப்பிய ஒன்றியம் இருந்து வருகிறது. 2000ம் ஆண்டு முதல் 2017ம் ஆண்டு வரை ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து இந்தியாவுக்கு சுமார் 5.4 இலட்சம் கோடி ரூபா அளவுக்கு முதலீடுகள் கிடைத்துள்ளன. இது, அந்த காலக்கட்டத்தில் கிடைக்கப் பெற்ற வெளிநாட்டு முதலீடுகளில் சுமார் 24 சதவீதமாகும்.

இந்தியா–ஐரோப்பிய ஒன்றியம் இடையிலான 13வது உச்சி மாநாடு, புருசல்ஸில் கடந்த ஆண்டு மே மாதம் 30ம் திகதி நடைபெற்றது. அப்போது, இருதரப்புக்கும் இடையே நீண்ட காலமாக நிலுவையில் இருந்து வரும் தடையில்லா வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து முன்னெடுப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது. எனினும், அறிவுசார் சொத்துரிமை, வரி குறைப்பு உள்ளிட்ட விவகாரங்களில் கருத்தொற்றுமை ஏற்படாததையடுத்து, பேச்சுவார்த்தைகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதுஇவ்வாறிருக்க, விமானப் போக்குவரத்துத்துறையில் இந்தியாவுடன் நீண்டகால நோக்கில் ஒத்துழைப்பு ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து, ஐரோப்பிய ஒன்றியத்தின் துணை அமைப்பான ஐரோப்பிய ஆணையத்தின் போக்குவரத்துப் பிரிவு இயக்குநர் ஹென்றிக் ஹோலோயி சிங்கப்பூரில் கடந்த 11ம் திகதி புதன்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் பேசியதாவது: பொது விமானப் போக்குவரத்துத் துறையைப் பொருத்தவரை, இந்தியாவுக்கும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையே நீண்டகால நோக்கிலான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியம் ஆகும்.

அந்த ஒப்பந்தங்களில், விமானப் போக்குவரத்து நிர்வாகத்தை நவீனப்படுத்துவது, போக்குவரத்துக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை நெறிப்படுத்துவது, சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற அனைத்து அம்சங்களும் இடம்பெற்றிருக்க வேண்டும்.

டில்லியில் நடைபெற்ற இந்திய – ஐரோப்பிய ஒன்றிய மாநாட்டுக்குப் பிறகு, இருதரப்பிலும் மேற்கொள்ளப்பட்ட பொது விமானப் போக்குவரத்து ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்துள்ளது. போக்குவரத்துக்கான ஐரோப்பிய ஆணையர் இந்தியாவில் வரும் டிசம்பர் மாதம் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். அப்போது, இரு தரப்பு ஒத்துழைப்பு மேலும் வலுவடையும் என்ற நம்பிக்கை உள்ளது. இவ்வாறு ஒத்துழைப்பை அதிகரிப்பதன் மூலம், இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் விமானப் போக்குவரத்து நிறுவனங்கள் மேலும் சிறந்த முறையில் சேவைகளை அளிக்க முடியும் என்றார் அவர்.

## நோயாளிக்கு மருத்துவர்கள் பாகுபலி அறுவை சிகிச்சை!

ஆந்திர மாநிலம் குண்டூரில், செவிலியராக பணியாற்றி வந்த 43 வயதான வினயா குமாரி என்ற பெண்ணுக்கு வலிப்பு நோய் ஏற்பட்டது. மருத்துவப் பரிசோதனையில், அவரது மூளையில் ஒரு கட்டி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு செப்டம்பர் 21ம் திகதி துளசி பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இந்த அறுவை சிகிச்சையின் போது நோயாளி முழுக்க முழுக்க விழிப்பு நிலையில் இருக்க வேண்டும் என்பது கட்டாயம். அதனால், நோயாளிக்கு மடிக்கணினி மூலமாக பாகுபலி படத்தைப் போட்டு அவர் விழிப்பு நிலையில் இருக்க வைக்க மருத்துவர்கள் திட்டமிட்டனர்.



மிக சிக்கலான அறுவை சிகிச்சையினை செய்த மருத்துவர்கள் குழுவில் இடம்பிடித்த நரம்பியல் மருத்துவர் சிறீனிவாஸ் கூறுகையில், நோயாளி முழித்துக் கொண்டிருக்க வேண்டியது மிகவும் அவசியம். அதனை பாகுபலி சிறப்பாக செய்தது. அறுவை சிகிச்சை குறித்து நோயாளி பயப்படவேயில்லை. அதிலும் படத்தைப் பார்த்து இரசித்து, பாடல்களை சேர்ந்து பாடியதாகக் கூறினார். குணமடைந்து மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பிய வினயாகுமாரி, இந்த அறுவை சிகிச்சை சுமார் ஒன்றரை மணி நேரம் நடந்தது. ஆனால், அறுவை சிகிச்சை அதிக நேரம் நடக்கும், முழுப் படத்தையும் பார்த்து விடலாம் என்று நினைத்திருந்தேன் என்கிறார். இந்த அறுவை சிகிச்சை வெற்றியடைந்ததால், இதற்கு 'பாகுபலி மூளை அறுவைச் சிகிச்சை' என்று பெயரிட்டுள்ள மருத்துவர்கள், இனி இதுபோன்ற அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ளவும் திட்டமிட்டுள்ளனர்.

# மலரும் சுதந்திர பூமியில்....



எமது நிலப்பகுதிகளில் அரபுக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. எமது மக்கள் நாடுகடத்தப் பட்டார்கள். இனவழிப்பிற்கு ஆளாக்கப்பட்டார்கள்..." என்றார். பின்னர் என்னிடம் கேட்டார், "அரசியல் ரீதியில், அதாவது சனநாயக ரீதியில், உங்களை உரிமைகளை வென்றெடுக்க முடியாதா?"

அதற்கு நான் சிரித்து விட்டுக் கூறினேன்: "சிறீலங்காவின் தேர்தல் முறைதான் மிகப் பெரும் பிரச்சினை. இந்த முறையைப் பயன்படுத்தித் தான் எமக்கு எதிரான சட்டங்களை நிறைவேற்றினார்கள். இந்த முறைமையின் கீழ் நாங்கள் எந்த அதிகாரத்தையும் பெற முடியாது."

அப்படி நான் கூறியதும் என்னை ஆச்சரியத்துடன் றிஸ்கார் அலி உற்றுப் பார்த்தார். பின்னர் பெருமூச்சொன்றை விட்டவாறு கூறினார், "இதுதான் எங்களின் பிரச்சினையும். ஈராக்கின் தேர்தல் முறைமையின் கீழ் எந்தக் காலத்திலும் நாம் அதிகாரத்தைப் பெற முடியாது. இதற்காகத் தான் நாங்கள் தனிநாடு கோருகின்றோம்..." அதன் பின்னர் என்னைப் பார்த்துக் கேட்டார்: "என்ன விடயமாக குர்திஸ்தானுக்கு வருகை தருகின்றீர்கள்?"

"வரும் 25ஆம் நாளன்று உங்கள் நாட்டில் நடைபெறும் பொது வாக்கெடுப்புத் தொடர்பான அரசறிவியல் ஆய்வரங்கம் வியாழக்கிழமை சுலைமானியா பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்றது. அதில் தமிழர்களின் சுதந்திரப் போராட்டம் பற்றி உரையாற்றுகின்றேன்.." என்றேன்.

அப்பொழுது தான் முன்னர் இருந்ததை விட றிஸ்கார் அலி உற்சாகமடைந்ததை என்னால் அவதானிக்க முடிந்தது. பின்னர் யார், யாரெல்லாம் என்னோடு வந்துள்ளார்கள் என்று வினவினார். குர்தி அரசறிவியலாளர் கலாநிதி அடெல் பகவான் என்னுடன் வந்திருப்பதைக் குறிப்பிட்ட பொழுது, அவர் அமர்ந்திருந்த ஆசனத்தை நோக்கினார். பின்னர் தனக்கு கலாநிதி அடெல் பகவானைத் தெரியும் என்று கூறினார்.

அதன் பின்னர் றிஸ்கார் அலி கூறினார்: "நாங்கள் தமிழ்ப் புலிகளைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறோம். அவர்கள் பற்றி எங்களுக்கு நிறைய மதிப்பு உள்ளது. அவர்கள் சிறந்த வீரர்கள் என்று அறிந்திருக்கின்றோம். ஆனால் ஏனோ தெரியவில்லை, எங்களுக்கும் தமிழ்ப் புலிகளுக்கும் இடையில் தொடர்புகள் எவையும் இருக்கவில்லை. ஆனால் துருக்கியில் இருந்து பிரிந்து சென்று வடகுர்திஸ்தான் தனியரசை அமைப்பதற்குப் போராடும் ஒஸ்லானின் தலைமையிலான பி.கே.கே போராளிகள் தமிழ்ப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தார்கள். அவர்கள் மூலமாகத் தான் தமிழ்ப் புலிகளைப் பற்றி நாங்கள் நிறையக் கேள்விப்பட்டிருக்கின்றோம்..."

தமிழ்ப் புலிகள் என்றால் பயங்கரவாதிகள், பயங்கரமானவர்கள், கொடூரமானவர்கள் என்று மேற்குலகத்தவர்கள் நிந்திக்கும் இடத்தில், தமிழ்ப் புலிகள் மீது குர்தி மக்கள் மதிப்பு வைத்திருப்பதாக றிஸ்கார் அலி கூறியது என் மனதிற்கு இதமாக இருந்தது. உலகில் முப்பது நாடுகளுக்கு மேல் எமது தேச சுதந்திர இயக்கத்தைத் தடை செய்திருந்தாலும், முழு உலகமும் எமது வீரர்களைத் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கவில்லை என்பதும், தனியரசுக்கான பாதையில் பயணிக்கும் ஒரு தேசத்து மக்கள் எமது சுதந்திர வீரர்கள் மீது மதிப்பு வைத்துள்ளார்கள் என்பதையும் நினைத்த பொழுது ஆசுவாசமாக இருந்தது.

இப்பொழுது மதத்தின் பக்கம் எமது பேச்சுத் திரும்பியது. அப்பொழுது றிஸ்கார் அலி கூறினார்: "எங்களில் பெரும்பாலானவர்கள் சுன்னா இஸ்லாமியர்கள். ஆனால் எங்களின் பிரச்சினை மதம் அல்ல. நாங்கள் முதலில் குர்தி இனத்தவர்கள். அதன் பின்னர்தான் நாம் இஸ்லாமியர்கள்..."

இதனைக் கேட்பதற்கு எமது ஈழத்து இஸ்லாமியத் தமிழ்ச் சகோதரர்கள் எவரும் அருகில் இல்லையே என்று அப்பொழுது ஆதங்கப்பட்டுக் கொண்டேன். எவ்வளவுதான் மரபணு ரீதியில் தாம் தமிழர்களாக இருந்தாலும், தமது தாய் மொழியாகத் தமிழ் மொழியைப் பேசினாலும், தம்மைத் தமிழர்கள் என்று ஈழத்தின் இஸ்லாமியத் தமிழர்களில் பெரும்பாலானோர் கூறிக் கொள்வதில்லை. தமிழர்கள் என்று கூறுவது ஏதோ தீண்டத் தகாத சொற்பதம் என்பது போல், சாவக-ஹம்பேய வழிவந்த ஈழத்தீவின் முஸ்லிம்களுடன் சேர்ந்து கொண்டு தம்மைச் சோனகர்கள் என்றும், முஸ்லிம்கள் என்றும் தனியான ஒரு இனமாகவே எமது இஸ்லாமியத் தமிழர்கள் அடையாளப்படுத்துவார்கள். முதலில் இனம், அதன் பின்னர் தான் மதம் என்பதை குர்தி இஸ்லாமிய மக்களிடம் இருந்து இவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்று எண்ணிக் கொண்டேன்.

இப்படியே நாம் இருவரும் பேசிக் கொண்டிருக்க நேரம் அதிகாலை 2:30 மணியை அண்மித்திருந்தது. விமானமும் தாழப்பறக்கத் தொடங்கியது. உடனே எனது அருகில் இருந்த கண்ணாடி ஊடாக எட்டிப் பார்த்தேன்.

> **றிஸ்கார் அலிக்கு கைலாகு கொடுத்து விட்டு இறங்கத் தயாராகினேன். எனக்குக் கைலாகு கொடுத்துவிட்டு, இரு இளைஞர்களும் வழித்துணை வழங்கத் தனது குடும்பத்தினருடன் விரைவாக அவர் இறங்கிவிட்டார். நான் விமானத்தை விட்டு இறங்கிய பொழுது எனக்கு றிஸ்கார் அலி பற்றிய இன்னுமொரு அதிர்ச்சி காத்திருந்தது.**

என்ன ஆச்சரியம்! கீழே மின்குமிழ்களால் அலங்கரிக்கப்பட்ட அழகிய நகரம் ஒன்று பளபளத்துக் கொண்டிருந்தது. துருக்கியின் இஸ்தான்புல் நகரை எனது விமானம் நெருங்கிய பொழுது எவ்வாறு இஸ்தான்புல் நகரம் ஜொலித்துக் கொண்டிருந்ததோ அப்படியே சுலைமானியாவும் தக தகவெனப் பளபளத்துக் கொண்டிருந்தது. என்னால் நம்ப முடியவில்லை. எதற்கும் றிஸ்கார் அலியிடம் தெளிவுபடுத்திக் கொள்வோம் என்று எண்ணிக்கொண்டு அவரிடம் கேட்டேன்: "கீழே தெரிவது சுலைமானியாவா?"

ஆம் என்ற தொனியில் தலையசைத்தார். பின்னர் என்னிடம் பெருமையுடன் கூறினார்: "சுலைமானியா ஒரு அழகான நகரம். இருபத்தாறு ஆண்டுகளுக்கு முன்னர் சதாம் உசேனிடம் இருந்து இந்த நகரத்தையும், குர்திஸ்தானின் ஏனைய இடங்களையும் மீட்டெடுத்தோம். இந்த இருபத்தாறு ஆண்டுகளில் சுலைமானியாவை நாங்கள் கட்டியெழுப்பி விட்டோம்." இவ்வாறு றிஸ்கார் அலி அவர்கள் கூறத் தொடங்கவே எனது மனத்திரையில் படிந்திருந்த குர்திஸ்தான் பற்றிய பனானா றிபப்ளிக் படிமம் உடைந்து சுக்குநூறாகியது.

மீண்டும் என் முன்னால் இருந்த தொலைக்காட்சித் திரையைப் பார்த்தேன். சுலைமானியா விமான நிலையத்தை விட்டு வேறு திசையில் விமானம் சுற்றிக் கொண்டிருந்தது. எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அப்பொழுது மீண்டும் றிஸ்கார் அலி கூறினார்: "நீங்கள் இறங்கப் போகும் சுலைமானியா பன்னாட்டு விமான நிலையம் முதலில் ஈராக் வான்படையின் விமானத் தளமாக இருந்தது. இங்கிருந்துதான் விமானங்களை ஏவி எமது மக்களையும், போராளிகளையும் சதாம் உசேன் கொன்று குவித்தார். மலைப்பிரதேசத்தில் விமானத் தளத்தை அமைத்தால் எமது போராளிகள் அதனைத் தாக்க மாட்டார்கள் என்று அவர் நினைத்தார். அதனைத் தான் நாம் பின்னர் கைப்பற்றி இப்பொழுது பன்னாட்டு விமானம் நிலையம் ஆக்கினோம். அதனால் தான் மலைகளைச் சுற்றி வந்து மறுமுனையால் இறங்குவதற்கு மறுதிசையில் விமானம் பயணித்துக் கொண்டிருக்கின்றது. இப்பொழுது இந்த மலைப் பகுதியில் எமது குர்திஸ்தான் தேசியக் கொடியைப் பிரமாண்டமான அளவில் பொறித்திருக்கின்றோம். நீங்கள் பகல் வேளையில் விமானத்தில் பயணித்தால் அதனைப் பார்க்க முடியும்."

பின்னர் என்னிடம் தனது கைபேசி எண், மின்னஞ்சல் முகவரி ஆகியற்றை உள்ளடக்கிய சிட்டை ஒன்றைத் தந்து விட்டுக் கூறினார்: "குர்திஸ்தானில் நீங்கள் தங்கியிருக்கும் நாட்களில் உங்களுக்கு என்ன உதவி தேவைப்பட்டாலும் தயக்கமின்றி என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள்..."

எனக்கு மீண்டும் ஆச்சரியமாக இருந்தது. தமிழர்கள் போன்று குர்தி இனத்தவர்கள் இனவழிப்பிற்கும், ஒடுக்குமுறைக்கும் ஆளாக்கப்பட்டவர்கள் மட்டுமன்றி தமிழர்கள் போன்று விருந்தோம்பலிலும் சிறந்து விளங்குவதைப் பார்த்த பொழுது எமது இரண்டு இனங்களுக்கு இடையில் ஏதோவொரு பிணைப்பு இருப்பது போன்ற உணர்வே அப்பொழுது என்னிடம் ஏற்பட்டது.

றிஸ்கார் அலி தனது குடும்பத்துடன் விடுமுறையில் துருக்கி சென்று விட்டுத் திரும்புவதாக என்னிடம் ஆரம்பத்தில் கூறியிருந்தார். ஆனாலும் தனது தொழில் என்ன என்று அவர் கூறவில்லை. எனக்கு இப்பொழுது ஒரு சந்தேகம் ஏற்பட்டிருந்தது. இவர் ஏதாவது எண்ணெய் வியாபரம் செய்யும் குர்தி இன வணிகராக இருப்பாரோ என்பதுதான் அந்தச் சந்தேகம்.

எனது சந்தேகத்தை அவரிடம் வெளியிட்ட பொழுது அவர் சிரித்தார். தனது தொழில் என்ன என்பதை என்னிடம் உதவி கோர வேண்டும் சந்தர்ப்பம் வந்தால் நான் அறிந்து கொள்வேன் என்று மர்மமாக பேசினார்.

அப்பொழுது தான் அவதானித்தேன்: எமக்குப் பின்புறமாக இருந்த இளைஞனும், றிஸ்கார் அலி அவர்களின் துணைவியாரின் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த இளைஞனும் அடிக்கடி எங்களைப் பார்த்துக் கொண்டிருப்பதை. அப்பொழுது என் மனதில் பொறி தட்டியது. இவர் ஏன் ஒரு அரசியல்வாதியாக இருக்கக் கூடாது? இவரின் இருமுனையிலும் அமர்ந்திருக்கும் இளைஞர்கள் இருவரும் ஏன் இவரது மெய்ப் பாதுகாவலர்களாக இருக்க முடியாது? அவர்களின் தோற்றத்தைப் பார்க்கும் பொழுதும், அவர்கள் மிகவும் விழிப்புடன் அமர்ந்திருந்ததை உற்று நோக்கிய பொழுதும் என் மனதில் அப்படியொரு சந்தேகமே எழுந்தது.

ஆனால் அதற்கு நேரம் இடம் கொடுக்கவில்லை. விமானம் தரையிறங்கிக் கொண்டிருந்தது. றிஸ்கார் அலிக்கு கைலாகு கொடுத்து விட்டு இறங்கத் தயாராகினேன். எனக்குக் கைலாகு கொடுத்து, எனக்குத் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்து விட்டு, இரு இளைஞர்களும் வழித்துணை வழங்கத் தனது குடும்பத்தினருடன் விரைவாக அவர் இறங்கிவிட்டார்.

என்னோடு வந்த கலாநிதி அடெல் பகவான் உள்ளடங்கலான ஏனைய அரசறிவியலாளர்களுடன் நான் விமானத்தை விட்டு இறங்கிய பொழுது எனக்கு றிஸ்கார் அலி பற்றிய இன்னுமொரு அதிர்ச்சி காத்திருந்தது.

றிஸ்கார் அலி வேறு யாருமல்ல: குர்திஸ்தான் விடுதலைப் போராட்டத்தில் பெஸ்மேகா படை வீரர்களின் மூத்த தளபதிகளில் ஒருவராகத் திகழ்ந்தவரும், தற்பொழுது குர்திஸ்தான் மாநிலத்தின் கூட்டு ஆளும் கட்சியாகவும், சுலைமானியா மாகாணத்தின் ஆளும் கட்சியாகவும் திகழும் பி.யூ.கே எனப்படும் தேசப் பற்றுள்ள குர்திஸ்தான் ஒன்றியத்தின் அரசியல்பீட உறுப்பினர்களில் ஒருவராகவும், அக்கட்சியின் வெளியுறவு விவகாரப் பொறுப்பாளராக விளங்குபவரும் தான் றிஸ்கார் அலி கமஜான் ஆவார்.


**குர்திஸ்தான் பயணம் தொடரும்..**

குறிப்பு: கடந்த தொடரில் இஸ்தான்புல் விமான நிலையத்தில் 05.09.2017 பின்னிரவு 11:50 மணிக்கு எனது விமான நிலையம் தரையிறங்கியதென்றும், 06.09.2017 அதிகாலை 1:00 மணியளவில் கலாநிதி அடெல் பகவானை சந்தித்தேன் என்றும் குறிப்பிட்டிருந்தேன். இது தவறானது. எனது விமானம் இஸ்தான்புல்லில் தரையிறங்கிய பொழுது துருக்கி நேரம் 9:50 மணி: அப்பொழுது பிரித்தானிய நேரமே 11:50 மணியாக இருந்தது. அதே போல் கலாநிதி அடெல் பகவானை நான் சந்தித்தது துருக்கி நேரம் 05.09.2017 பின்னிரவு 11:00 மணியளவிலாகும்: அப்பொழுது பிரித்தானிய நேரம் 06.09.2017 அதிகாலை 1:00 மணியாகும். சுலைமானியாவிற்கான எனது விமானம் துருக்கி நேரம் நள்ளிரவு 12:15 மணியளவிலேயே புறப்பட்டது.

# ஓநாய்களிடம் ஆடுகளை...

'இனப்பிரச்சினையையும், இனப்பதற்றத்தையும் தீர்ப்பதற்குப் பதிலாக அவற்றை மேலோங்க வைக்கும் ஒற்றையாட்சி முறையை இறுகப் பற்றிப் பிடித்திருப்பதைத் தவிர்த்து, எல்லா இனங்களின் அபிலாசைகளும் புரிந்து கொள்ளப்பட்டும், மதிக்கப்பட்டும், உண்மையும், நீதியும் நிலைநாட்டப்படும் வகையில் ஒன்றுபட்ட நாட்டைக் கட்டியெழுப்ப நாம் முன்வர வேண்டும். வரலாற்றினதும், இக்காலத்தினதும் உண்மைகளை நேர்மையுடனும், நீதியின் எதிர்பார்ப்புக்கு அமைவாகவும் துணிவுடன் நாம் எதிர்கொள்வதோடு, சமாதானத்துடனும், ஒத்துழைப்புடனும் ஒரே நாட்டிற்குள் நல்ல அயலவர்களாக, எவராலும் எவரும் ஆதிக்கத்திற்கு ஆளாக்கப்படும் அச்சமின்றி வாழ்வதற்கு நாம் ஒவ்வொருவரும் உறுதிபூண வேண்டும்.'

அத்தோடு அந்த மதகுரு நின்று விடவில்லை. தான் எழுதிய நூலின் பிரதியொன்றையும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்தார். தனது கையொப்பத்துடன் 31.07.2004 அன்று அவர் அனுப்பிய நூலில் இவ்வாறு குறிப்பிட்டார்: 'உண்மை எங்கள் விடுதலைக்கு வழிவகுக்கும்.'




கிறித்துவ சமய நூலான பைபிளின் வார்த்தைகளில் கூறுவதானால், அன்று அந்த மதகுரு ஒரு நல்ல மேய்ப்பர் போன்றே நடந்து கொண்டார். ஓநாய்களின் வேட்டையில் இருந்து தப்புவதற்காக நாடெங்கிலும், உலகெங்கிலும் அலைந்து திரிந்து கொண்டிருந்த ஆடுகளுக்கு வழிகாட்டும் பல மேய்ப்பர்களில் ஒருவராகவே அந்த மதகுருவைத் தமிழீழ விடுதலைப் புலிகள் பார்த்தார்கள்: அவரை மதித்தார்கள். 2004ஆம் ஆண்டு மார்கழி மாதம் 26ஆம் நாளன்று தமிழீழத்தைக் கடற்கோள் தாக்கிய பொழுது, வன்னிக்கு ஓடோடிச் சென்று மக்களுக்கு உதவிகள் புரிந்தார். அது அவர் மீது தமிழீழத் தேசியத் தலைவர் கொண்டிருந்த மதிப்பை உயர்த்தியது.

இவ்வாறு ஒரு நல்ல மேய்ப்பராகத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களாலும், ஈழத் தமிழர்களாலும் மதிக்கப்பட்ட இந்த மதகுரு, கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஈழத்தீவிற்குப் பயணம் செய்திருந்தார். தனது பயணம் பற்றிக் கொழும்பில் இருந்து வெளிவரும் 'த சண்டே லீடர்' பத்திரிகைக்கு அவர் செவ்வியளிக்கையில், தற்பொழுது ஆட்சியில் இருக்கும் மைத்திரி-ரணில் அரசாங்கத்தைப் போற்றிப் புகழ்ந்ததோடு, இனப்பிரச்சினைக்கான தீர்வாகக் கடந்த மாதம் அரசாங்கத்தால் வெளியிடப்பட்டிருக்கும் திட்ட வரைபையிட்டுப் பெருமிதம் வெளியிட்டார்:

'தற்போதைய அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட வரைபைப் பார்க்கும் பொழுது, கடந்த காலங்களில் தயாரிக்கப்பட்ட அரசியலமைப்பிற்கான வரைபுகள் ஒரு கட்சியின் சாதனையாக இருந்தது போன்று அல்லாது அவற்றில் இருந்து வேறுபட்டதாகவே இது உள்ளது எனலாம். நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளினதும், பொதுமக்களின் சகல தரப்பினரினதும் ஒருமித்த கருத்தைப் பெறுவதற்குப் புதிய அரசாங்கம் முற்படுகின்றது. சகல மக்களும் நல்லிணக்கத்துடன் சமாதானமாகச் சகவாழ்வு வாழ்வதற்கும், சகல தளங்களிலும் முன்னேற்றம் காண்பதற்குமான இலக்கின் முதற்படியாகவே இவ்வரைபு உள்ளது. இதில் சில நல்ல விடயங்கள் இருந்தாலும், தமிழ் மக்களினதும், சிங்கள மக்களினதும் எல்லா அபிலாசைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் வரைபு இல்லைதான். எனவே இரு தரப்பினரும் சமமாக வெற்றிபெறுவதற்கு ஏதுவான வெளிப்படையான விவாதம் ஒன்று நடைபெறுவது அவசியமாகும். தமது சுயலாபத்திற்காக ஒரு பக்கத்தில் இருந்து விடயங்களை அணுகுவோர் இதனையிட்டு அதிருப்தியடைந்தாலும், இரு தரப்பிலும் இருக்கும் சிரமங்களைப் புரிந்து கொண்டு, இவ் வரைபின் நல்ல அம்சங்களைச் சரியாகப் பயன்படுத்துவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும்.'

இதை வாசிக்கும் பொழுது, மைத்திரி-ரணில் அரசாங்கத்தின் திட்ட வரைபைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் அவர்கள் அண்மையில் புகழ்ந்துரைத்தமை வாசகர்களுக்கு நினைவில் வரலாம். ஒருவேளை சம்பந்தர் கூறிய கருத்தைத் தான் குறித்த மதகுரு வெளியிட்டார் என்றும் இப்பத்தியில் நாம் தவறாக எழுதுகின்றோம் என்றும் வாசகர்கள் நினைக்கக் கூடும். ஆனாலும் உண்மை அவ்வாறு இல்லை.

'உண்மை எங்கள் விடுதலைக்கு வழிவகுக்கும்' என்று பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் தனது கைப்படத் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மடல் எழுதிய அதே மதகுரு தான் இப்பொழுது இவ்வாறு கூறியிருக்கின்றார். அவர் வேறு யாருமல்ல: உலகத் தமிழர் பேரவையின் தலைவரான எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளார்தான் இவ்வாறு கூறியுள்ளார்.

இத்தோடு இம்மானுவேல் அடிகளார் நின்று விடவில்லை. இறுதிப் போரில் நிகழ்ந்த குற்றங்கள் தொடர்பாக சிங்கள மக்களிடையே தகுந்த விழிப்பூட்டல்களை மைத்திரி-ரணில் அரசாங்கம் மேற்கொண்டால் குற்றவாளிகளைத் தண்டிப்பது கடினமாக இருக்காது என்றும், புதிய கண்டுபிடிப்பொன்றையும் இம்மானுவேல் அடிகளார் வெளியிட்டிருக்கின்றார்.

மேலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் விடுமுறையில் நாட்டுக்கு வருவதோடு மட்டும் நின்று விடாது, நாட்டைக் கட்டியெழுப்புவதற்குக் காத்திரமான முறையில் உதவிகளை வழங்க வேண்டும் என்றும் தனது செவ்வியில் இம்மானுவேல் அடிகளார் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆட்சியில் தமிழீழம் இருந்த பொழுது இம்மானுவேல் அடிகளார் வெளியிட்ட கருத்துக்களையும், இன்று அவர் வெளியிடும் கருத்துக்களையும் நாம் நுணுகி ஆராயும் பொழுது இரண்டு விடயங்கள் தெளிவாகின்றன. அன்று ஒரு நல்ல மேய்ப்பராகவும், தமிழர்களின் குரலாகவும் இம்மானுவேல் அடிகளார் திகழ்ந்ததார். இன்று சிங்கள அரசாங்கத்தின் ஊதுகுழலாக மாறி ஆடுகளை ஓநாய்களிடம் விலைபேசும் தீய மேய்ப்பராக இம்மானுவேல் அடிகளார் மாறிவிட்டார்.

இம்மானுவேல் அடிகளார் கற்றுத் தேறி அருட்கலாநிதி பட்டம் பெற்ற பைபிளில், தமது இனத்தின் நலனில் அக்கறை கொள்ளாது சுயநலத்துடன் நடப்பவர்கள் பற்றிப் பல கனதியான வரலாற்றுப் பதிவுகள் இருக்கின்றன. அவர்களைத் தீய மேய்ப்பர்கள் என்றுதான் பைபிள் விழிக்கின்றது.

இன்று இம்மானுவேல் அடிகளார் நடந்து கொள்வது போன்று, இற்றைக்கு இரண்டாயிரத்து அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இஸ்ரேலை விட்டு யூதர்கள் புலம்பெயர்ந்து அலைந்துழன்ற பொழுது, அவர்களின் நலனுக்காகப் பாடுபடாது சுயநலத்துடன் அவர்களின் தலைவர்கள் நடந்து கொண்டார்கள். அப்பொழுது பபிலோனில் தங்கியிருந்த எசேக்கியல் என்ற யூதர்களின் தீர்க்கதரிசியிடம் பின்வருமாறு இறைவன் அறிவித்தாராம்:

'தங்களின் வயிற்றை மட்டும் நிரப்புவதில் கவனம் செலுத்தும் இஸ்ரேலின் மேய்ப்பர்களுக்குத் துன்பம் உண்டாகட்டும். இனி நானே எனது ஆடுகளைத் தேடிக் கொண்டு வருவேன். சிதறுண்டு கிடக்கும் தனது ஆட்டு மந்தைகளிடையே ஒரு நாளில் மேய்ப்பர் தேடுவது போன்று, இருளும் கருமேகமும் சூழ்ந்த இந்நாளில் எங்கெங்கு எனது ஆடுகள் சிதறுண்டு கிடக்கின்றனவோ, அவற்றையெல்லாம் தேடிக் கண்டுபிடித்து அவற்றுக்கு நான் விடுதலை அளிப்பேன். ஆட்களிடமிருந்து அவற்றை வெளிக்கொணர்ந்து, அவை இருக்கும் நாடுகளில் இருந்து அவற்றை திரட்டி வந்து, அவற்றின் சொந்த நாட்டில் அவற்றை நான் குடியமர்த்துவேன்.'

பைபிளில் பொறிக்கப்பட்டுள்ள இவ் வாசகங்கள், தமிழீழ மக்களின் அரசியல் உரிமைகளை இரா.சம்பந்தரின் வழியில் சிங்களத்திடம் விலைபேசி விற்க முற்படும் இம்மானுவேல் அடிகளாருக்குச் சமர்ப்பணம்.

# வர்த்தகம் மூலதனம்

ஜெகன்

## அதிரடியாகச் சேவையை நிறுத்திய மோனார்க் எயார்லைன்ஸ்!

பிரித்தானியாவின் மோர்னார்க் எயார்லைன்ஸ் (Monarch) நிறுவனம் நட்டம் காரணமாக திடீரென விமான சேவையை நிறுத்தியுள்ளது. இதன் காரணமாக, பல இலட்சக்கணக்கான பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரித்தானியாவின் மிகப்பெரிய தனியார் விமான நிறுவனம் மோனார்க் எயார்லைன்ஸ். 1967ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம், 2015ம் ஆண்டு வரை இலாபத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. அதன் பிறகு கடும் நட்டத்தை சந்தித்தது. கடந்தாண்டு மட்டும் சுமார் 2,500 கோடி பவுண்ஸ் நட்டத்தை சந்தித்தது. இதனால் தொடர்ந்து நிறுவனத்தை நடத்த முடியாமல் சிக்கல் ஏற்பட்டது. இந்நிலையில், கடந்த 2ம் திகதி திடீரென இந்நிறுவனம் தனது சேவையை நிறுத்திக் கொள்வதாக அதிரடி அறிவிப்பை வெளியிட்டது. இதுதொடர்பாக பயணச்சீட்டு முன்பதிவு செய்திருந்த பயணிகளின் செல்பேசிக்கு குறுந்தகவல் அனுப்பியது. ஆனால் தகவல் அறியாமல் பல பயணிகள் விமான நிலையத்திற்கு சென்ற பிறகுதான், விமானம் இரத்து செய்யப்பட்ட தகவல் அறிந்தனர். விமான நிறுவனத்தில் முன்பதிவு செய்திருந்த சுமார் ஏழரை இலட்சம் பேரின் பயணச் சீட்டுக்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. வெளிநாட்டுக்கு சுற்றுலா சென்ற சுமார் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் பேரின் பயணச் சீட்டுக்களும் இரத்தாகின. இதன் காரணமாக பயணிகள் கடும் அவதிக்குள்ளாயினர். இதைத் தொடர்ந்து, பிரித்தானிய விமானப் போக்குவரத்து அமைப்பும் பிரித்தானிய அரசும் பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு மாற்று ஏற்பாடுகளை செய்து வருகிறது. அத்துடன் இந்நிறுவனத்தின் இணையத்தையும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளது. அத்துடன், வெளிநாட்டில் உள்ள பயணிகளை அழைத்து வர 30 விமானங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதேவேளை, இந்நிறுவனம் சேவை நிறுத்தியதால் சுமார் 2100 பேர் தங்கள் வேலையை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், ஏற்கனவே 36 பயணிகள் விமானத்தை வைத்திருக்கும் இந்நிறுவனம், மேலும் 30 விமானங்களை கொள்வனவு செய்வதற்கான முற்பதிவையும் செய்திருந்தது.




## அமெரிக்காவுக்கான விமான சேவையை நிறுத்துகிறது பாக்.!

மிக மோசமான நட்டம் காரணமாக பாகிஸ்தான் சர்வதேச எயார்லைன்ஸ் நிறுவனத்தால் இயக்கப்பட்டு வந்த அமெரிக்காவுக்கான விமான சேவை நிறுத்தப்பட உள்ளது. பல கோடி பாக். ரூபாய் நட்டம் காரணமாக, அமெரிக்காவுக்கு இயக்கப்படும் விமான சேவையை வரும் ஒக்டோபர் 31ம் திகதி முதல் நிறுத்திவிட முடிவு செய்யப்பட்டுள்ளது. முன்னதாகவே அமெரிக்காவுக்கான விமான சேவையை ஒக்டோபர் 31ம் திகதிக்குப் பிறகான திகதிக்கு முன்பதிவு செய்யும் வசதி நிறுத்தப்பட்டுவிட்டது. 1961ம் ஆண்டு முதல் இயக்கப்பட்டு வரும் இந்த சேவை, பல முறை நட்டம் காரணமாக நிறுத்த முடிவு செய்யப்பட்டாலும், பல்வேறு அரசியல் அழுத்தங்கள் காரணமாக தொடர்ந்து இயக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.




## நட்டமடையும் எயார் பேர்லின் லுஃப்தான்சா கையில்!

ஜேர்மனியின் மிகப்பெரிய விமான நிறுவனமான லுஃப்தான்சா, எயார் பேர்லினின் விமானங்கள் மற்றும் பணியாளர்களை விலைக்கு வாங்குகிறது. எயார் பேர்லின் விமான நிறுவனம் நட்டமடைந்து மூடப்படும் நிலையில், அந்நிறுவனத்தின் 144 விமானங்களில் 81 விமானங்களை லுஃப்தான்சா வாங்க உள்ளது. இதேபோல் எயார் பேர்லின் நிறுவனத்தில் பணியாற்றும் 8 ஆயிரத்து 500 பணியாளர்களில், 3 ஆயிரம் பணியாளர்களையும் லுஃப்தான்சா நிறுவனம் அப்படியே தமது நிறுவனத்துக்கு பணிக்கு எடுத்துக் கொள்கிறது. இதற்காக 210 மில்லியன் ஈரோக்களை லுஃப்தான்சா வழங்கியுள்ளது. இதற்கான ஒப்பந்தம் கடந்த 12ம் திகதி கையெழுத்தாகியுள்ளதாக லுஃப்தான்சா தலைமைச் செயலதிகாரி கார்ஸ்டென் ஸ்போர் அறிவித்துள்ளார்.



ஒரு கதை

## கண்ணை மறைத்த பயம்!

ஒரு காட்டில் இளைஞன் ஒருவன் நடந்து சென்று கொண்டிருந்தான். அவனுக்குப் பசித்தது. ஒரு மரத்தில் கனிந்த பழங்கள் இருப்பதைக் கண்டான். கனிகள் மிக உயரத்தில் இருந்தன. அவன் மரத்தின் மீது ஏறி சில பழங்களைப் பறித்துத் தின்றான். மிகக் கனிந்த வாசனையுள்ள பழங்கள் மரக் கிளைகளின் நுனியில் இருந்தன. அவற்றை எட்டிப் பறிக்க கிளையின் மீது நகர்ந்து சென்ற போது அவனது பாரம் தாங்காமல் கிளை முறிய ஆரம்பித்தது. சட்டென்று சுதாரித்துக் கொண்ட அவன், அருகில் இருந்த ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான். குனிந்து பார்த்தால் தரை வெகு கீழே இருந்தது. ஏற்கனவே பயந்து போயிருந்த அவன், மிகவும் பயந்துபோய் கண்ணை மூடிக்கொண்டு, "யாராவது என்னைக் காப்பாற்றுங்கள்..." என்று அலற ஆரம்பித்தான். அவனது உள்ளங்கை வியர்த்து, கை நழுவி விடும் போல இருந்தது.



தற்செயலாக அந்த வழியே முதியவர் ஒருவர் வந்தார். மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த இளைஞனைப் பார்த்தார். அவன் மேல் ஒரு சிறிய கல்லை விட்டு எறிந்தார்!

கல் பட்டவுடன் வலியில் கீழே பார்த்தான் இளைஞன்! அவனுக்குக் கோபம் வந்தது!


"பெரியவரே! எனக்கு உதவி செய்யச் சொன்னால் என்னைக் கல்லால் அடிக்கிறீரே!...,உமக்கு அறிவில்லையா?" என்று கேட்டான். பெரியவர் பதில் ஏதும் பேசாமல் மற்றொரு சிறிய கல்லை எடுத்து அவன் மீது எறிந்தார்.

தொடர்ச்சி 22ம் பக்கம்

ஒரு விதை

## மண்ணிற்காய் விதையான முஸ்லிம் வித்து

இந்திய இராணுவத்தினருடனான மோதல் 10.10.1987 ஆரம்பமாகியது. இந்நிலையில் யாழ். கோட்டைப் பகுதியில் இந்திய இராணுவத்துடன் நடந்த மோதலில் வீரவேங்கை முகம்மது மருத்தீன் 15.10.1987 அன்று வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். இதேதினம் இந்தியப் படையுடன் நடந்த மோதலில் வீரவேங்கை ரூபன் (கந்தசாமி ரதிதரன் - மானிப்பாய்), வீரவேங்கை சீலன் (நவரத்தினம் விஜயகுமார் - தெல்லிப்பழை) ஆகியோரும் வீரச்சாவைத் தழுவிக்கொண்டிருந்தனர்.



முகம்மது மருத்தீன்
(சந்தியோகு மருத்தீன் - உயிர்தரசன்குளம்
வீரச்சாவு 15.10.1987

ஒரு குறள்

அறத்துப்பால் – அடக்கமுடைமை




அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.

அடக்கம் அழியாத புகழைக் கொடுக்கும். அடங்காமை வாழ்வையே இருளாக்கி விடும்.

ஒரு மருத்துவம்

## வியக்கவைக்கும் பழஞ்சோற்றின் பயன்!

பழஞ்சோறு சாப்பிடுவதை நம்மில் பலர் கௌரவக் குறைவாக எண்ணுகின்றார்கள். ஆனால் அதன் மகத்துவத்தை அமெரிக்கர்கள் கண்டு ஆச்சரியமடைந்திருக்கின்றார்கள். அமெரிக்காவில் உள்ள ஒரு பல்கலைகழகத்தில் ஒரு ஆராய்ச்சி செய்தார்கள். முன்தினம் வடித்த சோறை நீர்விட்டு அதில் தயிரையும் சேர்த்து பிசைந்து மறுநாள் காலையில் சாப்பிட்டால் என்ன பலன் கிடைக்கும் என்று ஆராய்ந்தார்கள். கிடைத்த முடிவுகளை பார்த்து அவர்களின் தமிழர்களின் உணவு முறை குறித்து ஆச்சரியம் வெளியிட்டுள்ளார்கள்.



தமிழர்களின் பாரம்பரிய உணவான பழைய சோற்றில் தயிரையும் கலந்து உண்டால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது. வெள்ளை அணுக்கள் அதிகரிக்கிறது. உடல் சோர்வை போக்குகிறது. உடலில் உள்ள அனுச்சிதைவுகளை தடுக்கிறது. உடல் சூட்டை தணிக்கிறது. வயிற்றிலுள்ள பழைய கழிவுகளை விரைந்து வெளியேற்றுகிறது. உற்சாகமான மனநிலையை தருகிறது. என்று பலவிதமான நன்மைகளை பட்டியலிட்டனர். அத்துடன், பழைய சோற்றில் தான், விட்டமின் பி6 மற்றும் பி12 அதிகமாக உள்ளது.

தொடர்ச்சி 22ம் பக்கம்

ஒரு தகவல்

## தன்னம்பிக்கைப் பாலம்!

அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்துக்கும் லோங் ஐலண்ட் தீவுக்கும் இடையே பாலமில்லாமல் மக்கள் மிகவும் சிரமப்பட்டனர். 'ஜோன் ஒகஸ்டஸ் ரோப்ளிங் (John Augustus Roebling)' என்ற கட்டடப் பொறியியளாளர், தன் மகன் வாஷிங்டனுடன் கலந்தாலோசித்து இற்றைக்கு சரியாக 150 வருடங்களுக்கு முன், 1869ம் ஆண்டு பாலம் கட்டுவதற்கான முதல் கட்டப் பணியைத் தொடங்கினார். சில மாதங்களிலேயே கட்டமானப் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பால கட்டுமானம் சரிந்து விழுந்தது. அந்த விபத்தில் ஜோன் ரோப்ளிங் இறந்தார். மகன் வாஷிங்டனும் பின்னர் பக்க வாத நோயால் பாதிக்கப்பட்டு பேசும் திறன் இழந்தார். அவரது வலது கை செயலிழந்தது.





தொடர்ச்சி 22ம் பக்கம்

ஒரு பொன்மொழி

உடலும் உள்ளமும் கெடுவதற்குக் காரணம் வாய்தான்.
- போர்னியா

ஒரு பழமொழி

ஒரு வேலையை நன்றாகச் செய்யவேண்டும் என்று விரும்பினால் அதை நீங்களே செய்துவிடுங்கள்.
- பிரான்ஸ்

ஒரு வரலாறு

## நெப்போலியனின் மர்ம மரணம்

விரல் விட்டு எண்ணக்கூடிய மாவீரர்களில் நெப்போலியனும் ஒருவர். உலகையே தன் காலடியில் கொண்டு வர வேண்டும் என்று நினைத்த அந்த மாவீரனின் மரணம் மர்மம் நிறைந்ததாகவே இன்னமும் இருக்கிறது. ஐரோப்பா பல்லாண்டுகளாக விடை தேடிக் கொண்டிருக்கும் ஒரு கேள்வி நெப்போலியன் எப்படி இறந்தார் என்பதுதான்.

இப்படி கேள்வி கேட்பதற்கு காரணமும் இருக்கிறது. மைனஸ் 26 பாகை செல்சியஸ் குளிரில் குதிரைகளின் இரத்தத்தை குடித்து உயிர் வாழ்ந்தவர். தீவுச்சிறையில் இருந்து கடலை நீந்திக் கடந்த ஒரு வீரன். இவர் தானாகவே நோய்வாய்ப்பட்டு இறந்தார் என்றால் நம்பமுடியவில்லை என்கிறார்கள், வரலாற்று ஆய்வாளர்கள். நெப்போலியன் கடைசியாக இருந்த தனிமைச் சிறையில் என்ன நடந்தது என்பதை அறிய யாருக்கும் எந்த ஆவணமும் அப்போது கிடைக்கவில்லை. கி.பி.1816 முதல் 1821-ம் ஆண்டு வரை அதாவது அவர் இறக்கும் வரை உதிர்ந்த முடிகள் ஆய்வுக்கு கிடைத்தன. ஆய்வின் முடிவில் அந்த முடிகளில் ஆர்கானிக் அமிலம் கலந்து இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. ஆரோக்கியமான ஒரு மனிதனின் முடியில் ஆர்கானிக் அளவு சோதனையில் வெளிப்படையாக தெரியும் அளவுக்கு இருப்பதில்லை.



தொடர்ச்சி 22ம் பக்கம்

ஒரு பழமொழியும் விளக்கமும்

## விருந்தும் மருந்தும் மூன்று நாள்



சொந்தக்காரர்கள் வீட்டிற்கு விருந்துக்குச் சென்றால் மூன்று நாள் மட்டுமே இருக்க வேண்டும். நீண்ட நாட்கள் இருப்பின் பகையுண்டாகும். மருத்துவரிடம் மருந்து உட்கொள்ளும்போது, ஒரு மருந்தின் ஆற்றல் மூன்று நாட்களுக்குள்ளாக தெரிந்துவிடும். இல்லையேல் மருந்தை மாற்ற வேண்டும் என்கிறது இப்பழமொழி.



# எங்களது சிறப்பு விற்பனையில்

HOLLAND FRANCE **Marketing Executive:** Praveen - 0033 754 299 945

# DESYHAM Hair Dye Shampoo

Japaniya தொழில்நுட்பத்தில் Noni மற்றும் Olive Oil கலந்த மூலிகையிலான Hair Dye ஆகும்.








Available in 3 colours

Halal Certification Authority International

Ammonia Free

5 MINUTE HAIR COLOR

# Shikakai Shampoo

உங்கள் கூந்தலை வளப்படுத்தி பலப்படுத்தக்கூடிய சிகைக்காய், செம்பருத்தி, அருகம்புல், வேம்பு, குமரி மற்றும் நெல்லி ஆகிய மூலிகைகள் உள்ளடக்கிய ஷாம்புவாகும்.














தலைமுடி உதிர்வா?

சகல தமிழ்க்கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். இந்த பொருட்களை வாங்கி விற்பனை செய்வதற்கு முகவர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

HOLLAND **Marketing Executive:** Praveen - 0033 754 299 945

**Marketed By**

# BEAUTY COMPLEX

Unit 1 Chandani Bazar, 29/33 Ealing Road, Wembley, Middlesex, London, HA0 4YA

Phone: 020 8902 9479 Email: beautycomplex@hotmail.co.uk

# கட்டலோனியா தனி நாட்டுப் பிரகடனம் நடைமுறைப்படுத்தல் நிறுத்திவைப்பு

# 5 நாட்கள் அவகாசம் வழங்கியுள்ளது ஸ்பெயின்




கட்டலோனியா ஸ்பெயின் நாட்டிலுள்ள தன்னாட்சி பிரதேசம் ஆகும். பார்சலோனாவைத் தலைநகராகக் கொண்டு தன்னாட்சி பிரதேசமாக இருந்த கட்டலோனியாவுக்கு, 2005ம் ஆண்டு, கட்டலோனிய மொழி, வரி மேலாண்மை, நீதித்துறை நிர்வாகம் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில், அப்பகுதிக்கு நாடு என்னும் சிறப்பு உரிமையை வழங்கி ஸ்பெயின் நாட்டு அரசியலமைப்பு திருத்தப்பட்டது. அந்தத் திருத்தத்தை ஸ்பெயினின் அரசியலமைப்பு நீதிமன்றம் 2010ம் ஆண்டு இரத்து செய்தது தனி நாடு கோரிக்கையை வலுபெறச் செய்தது. கட்டலோனிய நாடாளுமன்றத்தில் பிரிவினைக்கான ஆதரவு பெரும்பான்மையாக இருந்தாலும், ஸ்பெயின் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் உள்பட பெரும்பாலானோர் இதற்கு எதிராகவே உள்ளனர்.

ஆனாலும், வளம் மிகுந்த பகுதியான கட்டலோனியா, தொடர்ந்து தனிநாடு கோரிக்கையை முன்வைத்து வந்தது. ஸ்பெய்ன் நாட்டின் பொருளாதாரத்தில் ஐந்தில் ஒரு பங்கு கட்டலோனியா பகுதியிலிருந்து கிடைக்கிறது. இந்நிலையில், கட்டலோனிய மாநில அரசு, தனிநாடு குறித்து ஸ்பெய்னின் தடையையும் மீறி கடந்த முதலாம் திகதி பொது வாக்கெடுப்பு நடத்தியது. ஆனால், இந்த வாக்கெடுப்பில், ஸ்பெய்னின் அரசு காவல்துறை மூலம் முடக்க, வாக்களிக்க வந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியது. எனினும், வாக்கெடுப்பில் கலந்துகொண்ட 90 சதவிகித கட்டலோனிய மக்கள், தனி நாடு வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளதாக அந்த மாநில அரசு தெரிவித்து, தனிநாடு வாக்கெடுப்பில் வெற்றிபெற்றுள்ளதாகவும் அறிவித்தது.




கட்டலோனியா சுதந்திரப் பிரகடனத்தை அறிவிக்கும் என எதிர்பார்த்திருந்த நிலையில், ஸ்பெயினிடமிருந்து சுதந்திரம் பெறுவதற்கான தீர்மானத்தைத் தள்ளிவைக்குமாறு கட்டலோனியா மாகாணப் பேரவையிடம் அதன் அதிபர் கார்லஸ் பூக்டெமன்ட் அறிவித்துள்ளார். அவரது இந்தக் அறிவிப்பு ஒரு கபட நாடகம் என்று ஸ்பெயின் குற்றம்சாட்டியுள்ளது.

இதுகுறித்து பிரான்சின் ஈரோப்-1 வானொலியில் ஸ்பெயின்வெளியுறவுத்துறைஅமைச்சர் அல்ஃபோன்ஸா டஸ்டிஸ் கூறியதாவது: ஸ்பெயினின் தன்னாட்சிப் பிரதேசமான கட்டலோனியாவை தனி நாடாக அறிவிக்க நீண்ட காலமாக கோரிக்கை இருந்து வருகிறது. சுயாட்சிப் பிரதேசத்தில் தற்போது பிரிவினைவாதிகளின் கட்சி ஆட்சியில் உள்ளது. இந்நிலையில், ஸ்பெயினிலிருந்து பிரிவது குறித்த பொதுவாக்கெடுப்பை இந்த மாதம் முதலாம் திகதி கட்டலோனியா அரசு நடத்தியது. அதில், மாகாணத்தை தனிநாடாக அறிவிக்க பொது மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளதால், சுதந்திரப் பிரகடன மசோதாவை மாகாணப் பேரவையில் தாக்கல் செய்வோம் என்று கட்டலோனியா அதிபர் கார்லஸ் அறிவித்தார்.

எனினும், அந்த வாக்கெடுப்புக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் கிடையாது என்று ஸ்பெயின் மத்திய அரசு ஏற்கெனவே அறிவித்துவிட்டது. வாக்குப் பெட்டிகள் போன்ற பொருட்களைப் பறிமுதல் செய்யவும் அரசு உத்தரவிட்டது. மேலும் நீதிமன்றங்களும் பொது வாக்கெடுப்பு அரசியல் சாசனத்துக்குப் புறம்பானது என்று அறிவித்துள்ளன.

இந்த நிலையில், கட்டலோனியாவை தனி நாடாக அறிவிக்கும் மசோதாவை தள்ளிவைக்கும்படி மாகாணப் பேரவையை அதன் அதிபர் கார்லஸ் கேட்டுக் கொண்டார். மேலும், இந்த விவகாரம் குறித்து ஸ்பெயின் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாக அவர் கூறினார். இதுகுறித்து ஈரோப்-1 வானொலியில் ஸ்பெயின்வெளியுறவுத்துறைஅமைச்சர் அல்ஃபோன்ஸா டஸ்டிஸ் கூறியதாவது: சுதந்திரப் பிரகடனத்தைத் தள்ளிவைக்கும் கட்டலோனியா அதிபரின் அறிவிப்பு, ஒரு தந்திரவேலையாகும். ஸ்பெயினின் உறுதியான நடவடிக்கைகளைத் தவிர்ப்பதற்காக, அவர் கபட நாடகமாடுகிறார். அவர் எப்போதையும் போல, கட்டலோனியாவை பொருளாதார மற்றும் சமூகச் சிக்கலை நோக்கி அழைத்துச் சென்றுகொண்டிருக்கிறார். அவரே சட்டவிரோதமாக பொதுவாக்கெடுப்பை நடத்தி, அவரே அதில் வெற்றிபெற்றதாக அறிவித்துவிட்டு, தற்போது அவரே அந்தப் பொதுவாக்கெடுப்பின் பலனைத் தள்ளிப் போடுவதாகக் கூறுவது நம்பும்படியாக இல்லை என்றார் அவர்.

தொடர்ச்சி 22ம் பக்கம்

# 2016ல் 8000ற்கும் அதிகமான சிறுவர்கள் பலி

சர்வதேச நாடுகளின் பல பகுதிகளில் நடந்து வரும் யுத்தத்தினால் கடந்த ஆண்டில் மட்டும் சுமார் 8000ற்கும் அதிகமான சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாக ஐ.நாவின் பொதுச்செயலாளர் அன்டனியோ குட்டர்ஸ் தகவல் வெளியிட்டுள்ளார். பல்வேறு நாடுகளில் நடக்கும் உள்நாட்டுப்போர் மற்றும் ஆயுததாரிகளின் தாக்குதல்களினால் உயிரிழந்த சிறுவர்கள் தொடர்பிலான அறிக்கை 'போர் முனையில் சிறார்கள்' எனும் தலைப்பில் குட்டர்ஸினால் வெளியிடப்பட்டது. குறித்த அறிக்கையில் கடந்த ஆண்டில் ஆப்கானிஸ்தானில் மாத்திரம் சுமார் 3,512 சிறார்கள் உயரிழந்துள்ளதாக குறிப்பிடப்படடுள்ளது.


இதுதொடர்பில் கருத்து தெரிவித்த குட்டர்ஸ், சிறுவர்களை ஆயுதம் ஏந்த வைத்து போர்களுக்கு அனுப்புவது மிகவும் வேதனைக்குரியது அத்துடன் 2015ம் ஆண்டை விட சிறுவர்களை போரில் ஈடுபடுத்தும் எண்ணிக்கை இருமடங்கு அதிகமாக பதிவாகியுள்ளது என தெரிவித்துள்ளார்.

அதில், அவர் மேலும், சிறார்களை பயங்கரவாத இயக்கங்களில் சேர்ப்பது, பயங்கரவாதச் செயல்களுக்கு அவர்களைப் பயன்படுத்துவது, சிறார்கள் மீது தாக்குதல் நடத்துவது, சிறார்கள் மீது பாலியல் வன்முறை நிகழ்த்துவது, பாடசாலை, மருத்துவமனை ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்துவது ஆகியவற்றை சகிக்க முடியாது. மோதலில் ஈடுபடும் குழுவினர், சர்வதேச மனித உரிமை விதிகளை மதித்து சிறார்களைப் பாதுகாக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

# பூமியைக் கடந்து சென்ற விண்கல் திரும்பிவந்து தாக்கும் எனக் கணிப்பு!

விண்வெளியில் வலம் வந்துகொண்டிருக்கும் TC4 என்ற விண்கல், பூமி மீது மோதாமல் அருகில் கடந்து சென்றுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். பூமியிலிருந்து சுமார் 38,500 கிலோ மீற்றர் தொலைவில் TC4 விண்கல் கடந்து சென்றதால், பூமிக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. ஆனால், இதே விண்கல், தனது சுற்றுவட்டப் பாதையில், 2079ம் ஆண்டு நிச்சயம் பூமியைத் தாக்கும் என்றும் கணித்துள்ளனர்.

முன்னதாக இந்த விண்கல், அடுத்து 2050ம் ஆண்டில் பூமியை எதிர்கொண்டாலும், பூமியுடன் மோத வாய்ப்பில்லை என்பதும் சற்று ஆறுதலான விடயமாகவே உள்ளது.



சுமார் 15 முதல் 30 மீற்றர் வரை அகலம் கொண்ட விண்கல் ஒன்று, விண்வெளியில் சுற்றிவருவதை விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். TC4 என்று பெயரிடப்பட்டுள்ள அந்த விண்கல், 2012ம் ஆண்டின் இதே ஒக்டோபர் மாதம், 12ம் திகதி அன்டார்டிகா கண்டத்துக்கு மிக நெருக்கத்தில் கடந்து சென்றது.

இந்நிலையில், அந்த விண்கல் மீண்டும் 2017ம் ஆண்டு பூமியை நெருங்கும் என்று விண்வெளி ஆய்வாளர்கள் அப்போதே கணித்துக் கூறியிருந்தனர். அதன்படி, TC4 விண்கல் பூமியை கடந்த ஒக்டோபர் 12ம் திகதி வியாழக்கிழமை மிக நெருக்கத்தில் கடந்து சென்றது. எனினும், 38,500 கி.மீ. தொலைவிலேயே அந்த விண்கல் பூமியைக் கடந்துவிட்டதால், அது பூமியுடன் மோதும் ஆபத்து ஏற்படவில்லை என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். மேலும், விண்கற்களால் பூமிக்கு ஆபத்து நேரிடும் சூழலில், அதனைத் தடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்புக் கருவிகள் மற்றும் அமைப்புகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைத் தெரிந்துகொள்வதற்கு, இந்த TC4 விண்கல்லின் வருகை உதவும் என்று கூறப்படுகிறது.

# பிரெஞ்சுப் பொருட்களுடன் கடலில் விழுந்த விமானம்

மேற்கு ஆபிரிக்காவில் ஐவரி கோஸ்ட் நாட்டின் சரக்கு விமானம் கடலில் விழுந்து விபத்துக்குள்ளானது. பிரெஞ்சு இராணுவத்தினருக்கு தேவையாக பொருட்களுடன் அபித்ஜான் நகரில் இருந்து புறப்பட்ட சில நிமிடங்களிலேயே அப்பகுதியில் உள்ள கடலில்



விழுந்து விமானம் நொறுங்கியது. இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 4 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 6 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த மீட்பு குழுவினர் படுகாயமடைந்த 6 பேரை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். உயிரிழந்த 4 பேரின் உடல்களையும் மீட்டனர். போர்ட் பவுட்டிற்கு அருகே வந்தபோது கன மழை காரணமாக விமானம் விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என கூறப்படுகிறது. இருப்பினும் விபத்து குறித்து மீட்கப்பட்டவர்களிடம் விசாரணை நடைபெற்று வருகின்றது.

# இரு தசாப்தங்களாக இருந்த தடை நீக்கம்

கடந்த இருதசாப்தங்களுக்கு முன்னர் அமெரிக்கா சூடான் மீது விதித்திருந்த பொருளாதார மற்றும் வர்த்தக தடைகளை தளர்த்தியுள்ளது. இந்த நிலையில் குறித்த தடைகளை அமெரிக்கா நீக்கியுள்ளமையினால் சூடானில் பொருளாதாரத்தில் மாற்றம் ஏற்படுமென ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். எனினும் அமெரிக்கா சூடானை இன்னமும் பயங்கரவாத அச்சுறுத்தல் உள்ள நாடாகவே அறிவித்துள்ளது. மேலும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பினால் பயண தடை விதிக்கப்பட்ட எட்டு நாடுகளின் பட்டியலில் சூடானும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தாயும், மகளும் சாதனை!

சிரியாவைச் சேர்ந்த 42 வயதையுடைய பாதிமா பீரீன்ஜி அவர்களும் 21 வயதுடைய அவரது சொந்த மகளான காதா பீரீன்ஜி அவர்களும் மத்திய துருக்கியின் கோனியாப் பகுதியிலுள்ள



மருத்துவமனையில் ஒரே நாளில் ஒரே நேரத்தில் ஆளுக்கொரு ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளனர். தாயும் மகளும் ஒரே நாளில், ஒரே நேரத்தில் ஒரே மருத்துவமனையில் குழந்தை பெற்றெடுத்துள்ளமை அதிசயிக்கத்தக்க ஆச்சரியத்துக்குரிய ஒரு விடயமாகும், இவ்வாறான அபூர்வ நிகழ்வு உலகத்தில் நடந்திருப்பது இதுவே முதன் முறையாகும் என அம்மருத்துவமனை மருத்துவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். சிரியாவைச் சேர்ந்த இவர்கள் துருக்கியின் குடியரசுத் தலைவர் ரஜப் தையிப் அர்துகான் மீது கொண்ட அன்பு காரண

20

மாக, தாயின் பிள்ளைக்கு ரஜப் என்றும், மகளின் குழந்தைக்கு தையிப் என்றும் பெயர் சூட்டியுள்ளார். மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் பாத்திமா பிரின்சியும், அவரது மகள் காதா பிரின்சியும் சிரியாவை விட்டு வெளியேறி துருக்கியில் அடைக்கலம் புகுந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## எரிபொருள் வாகனங்கள் நுழைய பல்கலைக்கழகம் தடை

இன்னும் சில ஆண்டுகளில் எரிபொருள் பயன்படுத்தும் வாகனங்களைத் தடை செய்ய பிரான்ஸ், பிரித்தானியா உட்பட சில நாடுகள் முடிவெடுத்துள்ளன. இதற்கான பணிகளை அந்த நாடுகள் தற்போது மேற்கொண்டு வருகின்றன. இந்நிலையில், பிரித்தானியத் தலைநகர் இலண்டனில் வருகிற 2020ம் ஆண்டில் இருந்து எரிவாயு மூலம் இயங்கும் கார்களை இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்காக ஒத்துழைப்பு அளிக்கும் வகையில் இலண்டனில் உள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் 2020ம் ஆண்டு முதல் எரிபொருள் வாகனங்களை பல்கலைக் கழகத்தினுள் பயன்படுத்த தடை விதித்துள்ளது.

## மியன்மாருக்கு போப் ஃபிரான்சிஸ் பயணம்!

மியன்மாரில் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கெதிரான வன்செயல்கள் அதிகரித்துள்ள நிலையில் நவம்பர் மாதம் அந்நாட்டுக்கு பொப்பரசர் ஃபிரான்சிஸ் பயணம் செய்யத்திட்டமிட்டுள்ளார். இந்தப் பயணத்தின்போது மியன்மாரின் சிரேஷ்ட பௌத்த சமயத் தலைவர்களையும், இராணுவ உயரதிகாரிகளையும் அந்நாட்டு மக்கள் தலைவர் ஆங் சான் சூ கீயையும் சந்தித்துப் பேசவுள்ளதாகத் தெரியவருகிறது. நவம்பர் 6ம் திகதி முதல் டிசம்பர் இரண்டாம் திகதி வரையான இந்தப் பயணத்தின்போது போப் ஃபிரான்சிஸ் பங்களாதேசுக்கும் பயணம் செய்யவுள்ளார். இதேவேளை, மியன்மாருக்கு பயணம் செய்யவுள்ள முதலாவது போப் ஃபிரான்சிஸ்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஹிட்லரின் உலகம் ஏலத்தில் விற்பனை

ஜேர்மன் நாட்டு சர்வாதிகாரி அடொல்ஃப் ஹிட்லர் பயன்படுத்திய உலக உருண்டை, உடை உள்ளிட்டவை அமெரிக்காவில் சமீபத்தில் ஏலம் விடப்பட்டது. 2ம் உலகப் போரின் போது ஜேர்மனியில் உள்ள ஹிட்லரின் இல்



லத்தில் இருந்து 1945ம் ஆண்டு மே 10ம் திகதி அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவரால் ஹிட்லர் பயன்படுத்திய உலக உருண்டை, உடை உள்ளிட்டவை எடுக்கப்பட்டது. அந்த உலக உருண்டையானது, மரத்தாலான அடித்தளத்தில் அமைக்கப்பட்டிருந்தது. உலக உருண்டையானது உலோகத்தால் அமைந்திருந்தது. இந்த உலக உருண்டையில் ஜேர்மனியின் எல்லையோரங்கள் குறிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக 1939ம்

→ 21

## அவுஸ்திரேலிய போர் விமானங்களின் இரகசியங்கள் சீனர்களால் திருட்டு!

அவுஸ்திரேலிய அரசுக்கு சொந்தமான ஸ்டெல்த் எஃப்–3 மற்றும் பி–8 கண்காணிப்பு விமானம் ஆகிய 2 போர் விமானங்களின் தகவல்களை மர்ம நபர்கள் ஊடுருவியதால் (ஹக் செய்ததால்) அந்நாட்டு அரசு அதிர்ச்சி அடைந்துள்ளது. இதில் ஸ்டெல்த் எஃப்–3 என்ற போர் விமானம் அமெரிக்க அரசாங்கத்திடம் இருந்து வாங்கப்பட்டதாகும்.

அவுஸ்திரேலிய அரசின் விமானத்துறையில் ஸ்டெல்த் எஃப்–3 மற்றும் பி–8 ஆகிய 2 விமானங்களும் பல காலமாக முக்கிய பங்காற்றி வருகின்றது. இந்நிலையில் ஸ்டெல்த் எஃப்–3 மற்றும் பி–8 கண்காணிப்பு விமானம் ஆகியவற்றின் இரகசியங்களில் சிலவற்றை கணினி ஊடுருவிகள் (ஹக்கர்கள்) திருடியுள்ளனர். இந்த ஊடுருவி வேலையில் ஈடுபட்டது யார் என்று இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் ‘சைனா சோப்பார்’ என்ற ஊடுருவிக் கருவியை வைத்து திருடியுள்ளதாக கண்டுபிடித்துள்ளனர். சைனா சோப்பார் என்பது ஹக்கிங் செய்வதற்காக பயன்படும் ஒரு கருவியாகும். இது சீனாவில் பலரால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே சீனா மீது சந்தேகம் வலுத்துள்ளது. எனினும், இதுகுறித்து துறை ரீதியான விசாரணைக்கு அவுஸ்திரேலிய அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும் இதனுடன் அவுஸ்திரேலியாவின் ஒரு போர் கப்பலின் வரைப்படமும் காணாமல் போனது குறிப்பிடத்தக்கது.

## போகோ ஹராம் பயங்கரவாதிகளுக்கு எதிராக இராணுவ நீதிமன்றில் இரகசிய விசாரணை

நைஜீரிய அரசிடம் பிடிபட்ட 2,321போகோ ஹராம் பயங்கரவாதிகளுக்கு எதிராக வழக்கு விசாரணை இரு இராணுவ நீதிமன்றங்களில் கடந்த 16ம் திகதி திங்கள்கிழமை தொடங்கியுள்ளது.

நைஜீரியாவை இஸ்லாமிய நாடாக பிரகடனப்படுத்தியுள்ள போகோ ஹராம் பயங்கரவாத இயக்கம், 2009ம் ஆண்டிலிருந்து அரசை எதிர்த்து சண்டையிட்டு



வருகிறது. இதில், பொதுமக்கள் 20 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். அத்துடன் மாணவிகள் உட்பட பலரையும் கடத்திச் சென்று வைத்துள்ளது.

இந்த நிலையில், அந்த பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புடைய 2,321பேரை நைஜீரியா அரசு கைது செய்து சிறையில் அடைத்தது. அவர்களுக்கு எதிராக இராணுவ நீதிமன்றத்தில் இரகசிய விசாரணை நடத்த முடிவு செய்யப்பட்டது.

மத்திய மாகாணமான கயின்ஜியில் உள்ள இராணுவ முகாமில் அமைக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தில் 1,670 பேரிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது. கிவா இராணுவ முகாமில் அமைக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தில் 651 பேரிடம் இரகசிய விசாரணை நடத்தப்படவுள்ளது. பாதுகாப்பு கருதி இந்த விசாரணையின்போது செய்தியாளர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என நீதித்துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

## தலிபான்கள் பிடியில் இருந்து 5 வருடங்களின் பின் மீட்கப்பட்ட குடும்பம்!

### பிறந்த குழந்தையைக் கொன்றதுடன், மனைவி மீது பாலியல் வல்லுறவு புரிந்ததாக கணவன் தெரிவிப்பு

ஆப்கானிஸ்தானில் 2012ம் ஆண்டு சிறைப்பட்டிருந்த கனேடிய–அமெரிக்க தம்பதியர் கனடா திரும்பியுள்ளனர். ஐந்து வருடங்களாக தலிபான்கள் பிடியில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்து விடுவிக்கப்பட்ட கனேடிய–அமெரிக்க தம்பதியர், தமது பணயக் காலத்தில் இடம்பெற்ற சோகச் சம்பவங்களை தற்போது விவரித்துள்ளனர்.

கனடாவை சேர்ந்த ஜோசுவா பாயல் என்பவர் அமெரிக்காவை சேர்ந்த கெயித்லான் கோல்மேனை



திருமணம் செய்திருந்தார். இருவரும் தமது இரண்டு குழந்தைகளுடன் ஐந்து வருடங்களுக்கு முன் குறுகிய பயணம் ஒன்றை மேற்கொண்டு ஆப்கானிஸ்தான் சென்றிருந்தனர். அங்கு, தலிபான்கள் கட்டுப்பாட்டில் இருந்த குக்கிராமங்களில் வசித்துவரும் மக்களுக்கு தம்மாலான உதவிகளைச் செய்து கொடுத்து வந்தனர்.

அப்போது ஒருநாள், தலிபான்களின் வலையமைப்பில் உள்ள கடும்போக்கு மதவாத அமைப்பான ஹக்கானி குழுவினர், இக் குடும்பத்தினரைப் பணயக் கைதிகளாகப் பிடித்துச் சென்றனர். அப்போது கர்ப்பிணியாக இருந்த கெயித்லான் கோல்மேன் பிரசவித்த பெண் குழந்தையை அவர்கள் கொலை செய்துள்ளனர். மேலும், ஹக்கானி குழுவின் தலைவரின் உதவியுடன் காவலர் ஒருவர் கெய்ட்லனை வல்லுறவுக்கும் உட்படுத்தியுள்ளார். பாகிஸ்தானிய இராணுவத்தின் தலையீட்டையடுத்து இத்தம்பதியினர் அவர்களது குழந்தைகள் சகிதம் விடுவிக்கப்பட்டு கனடாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

முன்னதாக, இவர்களை மீட்க நடவடிக்கை எடுத்து வந்த அமெரிக்க படைகளால், தம்பதியினர் சிறைவைக்கப்பட்டு இருந்த இடத்தை கண்டறிய முடியவில்லை. இந்த நிலையில் இக்குடும்பத்தினரைப் பயங்கரவாதிகள் கடந்த 11ம் திகதி குர்ரம் பள்ளத்தாக்கு வழியாக பாகிஸ்தானுக்குள் கொண்டு சென்றதை அமெரிக்க உளவுத்துறை கண்டறிந்தது. உடனே இது குறித்த விவரங்களை பாகிஸ்தானுக்கு தெரிவித்தது.

இதைத்தொடர்ந்து அதிரடியாக களத்தில் இறங்கிய பாகிஸ்தான் இராணுவத்தினர், பயங்கரவாதிகளுடன் தீவிர சண்டையிட்டு இக் குடும்பத்தினரை பத்திரமாக மீட்டனர். இந்தச் சம்பவத்தின் போது அக்கணவனுக்கு சிறிய காயம் ஏற்பட்டது.

இதேவேளை, தங்கள் நாட்டு குடிமக்களை பாகிஸ்தான் இராணுவம் மீட்டிருப்பது அமெரிக்கா மற்றும் கனடாவுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அதிலும் ஹக்கானி குழுக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை எனக்கூறி பாகிஸ்தானை கடுமையாக கண்டித்து இருந்த டிரம்ப், இது ஒரு நேர்மறையான நடவடிக்கை என பாராட்டி உள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், ஹக்கானி குழுக்களின் ஆதிக்கம் நிறைந்த பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியில் தேவையான பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும் என்ற அமெரிக்காவின் விருப்பத்துக்கு மரியாதை அளிக்கும் அறிகுறியாக பாகிஸ்தானின் இந்த ஒத்துழைப்பு அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தானின் இந்த நடவடிக்கை மூலம் ஏற்கனவே விரிசல் ஏற்பட்டு இருந்த அமெரிக்கா–பாகிஸ்தான் உறவில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. ஆனால், அமெரிக்க இராணுவ மற்றும் வெளியுறவு அமைச்சர்கள் விரைவில் பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருக்கும் நிலையில், பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையில் அமெரிக்காவை திருப்திபடுத்தவே இந்த நடவடிக்கையில் பாகிஸ்தான் ஆர்வம் காட்டியதாக சில அமெரிக்க அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

## அமெரிக்காவிலுள்ள கியூப அதிகாரிகளை வெளியேற உத்தரவு

அமெரிக்காவில் உள்ள 15 கியூபா தூதரக அதிகாரிகள் 7 நாட்களில் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என அமெரிக்க உள்துறை செயலகம் உத்தரவு பிறப்பித்தது. கியூபா – அமெரிக்க இடையே நீடித்த நீண்ட கால பகை முற்றுப்பெரும் விதமாக ஒபாமா அதிபராக பதவி வகித்த போது, கியூபாவில் அமெரிக்க தூதரகத்தை நிறுவினார். இதனையடுத்து, வாஷிங்டன் நகரிலும் கியூபா தூதரகம் அமைக்கப்பட்டது. இதற்கிடையே, கடந்த அதிபர் தேர்தலில் டிரம்ப் வெற்றி பெற்றார். சில வாரங்களுக்கு முன்னதாக ஹவானா நகரில் இருக்கும் அமெரிக்க தூதரகத்தில் பணியாற்றிய அதிகாரிகள் சிலருக்கு உடல் உபாதைகள் ஏற்பட்டது. ஒலி தாக்குதலால் இந்த பிரச்சனை ஏற்பட்டதாக கூறப்பட்டது. ஆனால், அவை நிரூபிக்கப்படவில்லை. மேலும், கியூபா அரசு இந்த குற்றச்சாட்டை மறுத்தது. அமெரிக்க தூதரக அதிகாரிகளை கியூபா பாதுகாக்க தவறிவிட்டதாக கூறி, அனைத்து தூதரக அதிகாரிகளும் விடுப்பில் சென்றனர். இந்நிலையில், வாஷிங்டன் நகரில் உள்ள கியூபா தூதரக அதிகாரிகள் 15 பேர் கொண்ட குழு 7 நாட்களில் நாட்டை



விட்டு வெளியேற வேண்டும் என அமெரிக்க உள்துறை செயலகம் உத்தரவிட்டுள்ளது. நீண்ட கால மோதலுக்கு பின்னர் லேசாக மலர்ந்த அமெரிக்கா – கியூபா உறவு, தற்போது டிரம்ப் நிர்வாகத்தின் அதிரடி முடிவுகளால் மீண்டும் பழைய நிலைக்கு செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இஸ்ரேலுக்காக யுனெஸ்கோவிலிருந்து மீண்டும் வெளியேறும் அமெரிக்கா!

சர்வதேச அளவில் கல்வி, அறிவியல், கலாசாரம் இடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநாட்டுவதற்காக யுனெஸ்கோ அமைப்பு தொடங்கப்பட்டது. உலகளாவிய புரதானச் சின்னங்கள், பாரம்பரியக் கட்டடங்களைப் பேணிக்




காக்கும் நடவடிக்கைகளையும் அந்த அமைப்பு பிரதானமாக மேற்கொண்டு வருகிறது.

ஆனால், ஐ.நா.வின் கல்வி, அறிவியல், விஞ்ஞான, பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோ, இஸ்ரேலுக்கு எதிராக பாகுபாடு காட்டுவதாக அமெரிக்கா தொடர்ந்து கூறி வந்தது. யுனெஸ்கோ செயல்பாடுகளில் இருந்து விலகியே இருந்தது. இதனால் அமெரிக்கா எந்த நேரத்திலும் யுனெஸ்கோவில் இருந்து விலகலாம் என்று தகவல் வெளியானது. இந்நிலையில் யுனெஸ்கோவில் இருந்து விலகப்போவதாக டிரம்ப் நிர்வாகம் கடந்த 12ம் திகதி வியாழக்கிழமை அறிவித்திருக்கிறது.

பலஸ்தீனத்துக்கு முழுமையான உறுப்புரிமையை 2011ம் ஆண்டில் யுனெஸ்கோ வழங்கியிருந்தது. பலஸ்தீனத்துக்கு அத்தகைய உரிமையைக் கொடுத்த முதல் ஐ.நா. அமைப்பு என்றால் அது யுனெஸ்கோதான். அதற்குப்பிறகு அமெரிக்கா யுனெஸ்கோவுக்கு நிதியுதவி செய்வதை நிறுத்திக் கொண்டது. அமெரிக்காவின் வெளியேற்றம் 2018 டிசம்பர் 13ம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும். அதுவரை யுனெஸ்கோவில் முழுமையான உறுப்புரிமை கொண்ட நாடாக தொடர்ந்தும் அமெரிக்கா இருக்கும்.

அமெரிக்காவின் தீர்மானத்தை வெளியுறவு அமைச்சர் றெக்ஸ் ரில்லெர்சன் யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகம் ஜரினா பொகோவாவுக்கு தெரியப்படுத்தினார். இது யுனெஸ்கோவுக்கு பெரும் இழப்பு. ஐ.நா. குடும்பத்துக்கு ஒரு இழப்பு. பன்முகவாதத்துக்கும் இது ஒரு இழப்பு என்று பொகோவா அறிக்கையொன்றில் தெரிவித்திருக்கிறார்.

யுனெஸ்கோவில் நிரந்தரமான அவதான அலுவலகம் ஒன்றை நிறுவுவதற்கு அமெரிக்கா நடவடிக்கை எடுக்கும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் ஹீதர் நோவேர்ட் கூறினார். இந்த தீர்மானம் மிகவும் எளிதாக மேற்கொள்ளப்பட்டதொன்றல்ல. யுனெஸ்கோவில் அதிகரிக்கும் நிலுவைகளை பற்றிய அமெரிக்காவின் அக்கறைகளை இத்தீர்மானம் பிரதிபலிக்கிறது. யுனெஸ்கோ தொடர்ந்தும் இஸ்ரேலுக்கு எதிரான உணர்வுகளுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த அமைப்பில் அடிப்படை மாற்றங்கள் செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது என்று அவர் அறிக்கையொன்றில் தெரிவித்திருக்கிறார்.

உலக கலாசார பாரம்பரியங்களைப் பாதுகாத்தல், பத்திரிகைச் சுதந்திரத்துக்காகப் பாடுபடுதல், விஞ்ஞான துறையிலான ஒத்துழைப்பையும் கல்வியையும் மேம்படுத்துதல் உட்பட யுனெஸ்கோவினால் முன்னெடுக்கப்படுகின்ற முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாடுகளில் கருத்துகளையும் நோக்குகளையும் நிபுணத்துவத்தையும் வழங்கும் முகமாக உறுப்புரிமை இல்லாத அவதானி அந்தஸ்தில் தொடர்ந்தும் அமெரிக்கா தொடர்புகளைப் பேணும் என்று பொகோவாவுக்கு தெரியப்படுத்தப்பட்டிருப்பதாகவும் இராஜாங்க திணைக்கள பேச்சாளர் கூறினார்.

பலஸ்தீனத்தை அங்கீகரிக்கின்ற எந்தவொரு ஐ.நா. அமைப்புக்கும் நிதியுதவி வழங்கப்படுவதை அமெரிக்க சட்டங்கள் தடுக்கின்றன. 2011ம் ஆண்டிலிருந்து அமெரிக்கா நிதியுதவியை நிறுத்திய போதிலும், யுனெஸ்கோவுக்கும் வாஷிங்டனுக்கும் இடையிலான தோழமையை நாம் ஆழமாக்கியிருக்கிறோம். அந்த தோழமை இப்போதிருப்பதைப் போன்று முன்னர் ஒருபோதும் பயனுறுதியுடையதாகவும் அர்த்தமற்றதாகவும் இருந்ததில்லை என்று யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகம் நீண்டதொரு அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்க மக்களின் பண்பு விழுமியங்களுக்கு இசைவானதாகவே யுனெஸ்கோவின் இலக்குகளும் செயற்பாடுகளும் அமைந்திருக்கின்றன. பயங்கரவாத தாக்குதல்களுக்கு மத்தியிலும், மனித குலத்துக்கு பொதுவானதாக இருக்கும் கலாசாரப் பாரம்பரியங்களைப் பாதுகாக்கும் கல்வி மற்றும் ஊடகப் போதனை மூலமாக வன்முறைத் தீவிரவாதத்தைத் தடுப்பதிலும் நாம் இணைந்து செயற்பட்டு வந்திருக்கின்றோம். அதன் காரணத்தினால்தான் எமது அமைப்பிலிருந்து வெளியேறுவதென்ற அமெரிக்காவின் முடிவு கவலை தருகிறது என்று தனது அறிக்கையில் தெரிவித்திருக்கும் பொகோவா, யூத இனத்தவர்களின் உணர்வுகளுக்கு எதிரான போராட்டத்தில் யுனெஸ்கோ முன்னெடுத்து வந்திருக்கும்செயற்பாடுகளைப் பட்டியலிட்டுஇருக்கிறார்.

சோவியத் ஒன்றியத்திகுச் சார்பாக செயற்படுவதாக குற்றஞ்சாட்டி அமெரிக்கா றொனால்ட் றீகன் ஜனாதிபதியாக பதவி வகித்த போது 1984ம் ஆண்டிலும் யுனெஸ்கோவில் இருந்து முன்னர் வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. 2002 இல் ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் ஜனாதிபதியாக இருந்த வேளையில் அமெரிக்கா மீண்டும் யுனெஸ்கோவில் இணைந்து கொண்டது. யுனெஸ்கோவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான உறவுகள் சர்ச்சைக்குரியதாகவே இருந்து வந்திருக்கின்றன. மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் கலாசார பாரம்பரியம் தொடர்பில் யூதர்களின் கருத்துக்களை யுனெஸ்கோ அலட்சியம் செய்கிறதென்று குற்றஞ்சாட்டி இஸ்ரேல் 2016ம் ஆண்டில் அந்த அமைப்புக்கான தனது தூதுவரை திரும்பப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அமெரிக்காவின் இந்த முடிவை துணிச்சலான, அறம் சார்ந்த முடிவு என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு தெரிவித்துள்ளார். அமெரிக்கா விலகும்போது அந்த சமயத்தில் இஸ்ரேலும்

தொடர்ச்சி 22ம் பக்கம்

# காணாமல்போன சுவீடன் பெண் ஊடகவியலாளர் டென்மார்க் கடலில் துண்டு துண்டாக மீட்பு!

சுவீடனில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் காணாமல்போன பெண் ஊடகவியலாளரின் தலை கடலில் இருந்து மீட்கப்பட்ட சம்பவமொன்று டென்மார்கில் இடம்பெற்றுள்ளது. கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் சுவீடன் நாட்டைச் சேர்ந்த கிம் வால் எனும் பெண் ஊடகவியலாளர் நீர் மூழ்கிக் கப்பலில் ஆழ்கடல் பயணம் மேற்கொண்டபோது காணாமல்போயிருந்தார். இந்நிலையில் குறித்த பெண் ஊடகவியலாளரின் தலை தற்போது கடலுக்கடியில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக டென்மார்க் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் டென்மார்க் காவல்துறையினர் தெரிவிக்கையில், பெண் ஊடகவியலாளரின் தலை ஒரு பையில் இருந்தது. அதே பையில் இரண்டு கால்களும் இருந்துள்ளன. அவரின் ஆடைகளைக் கொண்டுள்ள மற்றுமொரு பையும் கடலுக்கடியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பீட்டர் மேட்சனுக்குச் சொந்தமான நீர்மூழ்கிக் கப்பலில், பீட்டரின் கடல் சாகசங்களைப் பற்றிய நூல் ஒன்றை எழுதுவதற்காக, கடந்த ஓகஸ்ட் மாதம் 10ம்



திகதி பயணத்தை ஆரம்பித்திருந்தார் பெண் ஊடகவியலாளர். இந்நிலையில், 11 நாட்கள் கழித்து தலை மற்றும் கால்களற்ற அவரது உடல், டென்மார்கின் கோபென்ஹெகன் கடற்கரையில் இருந்து மீட்கப்பட்டிருந்தது.

கிம் வாலைக் கொலை செய்து, அவரின் உடலைச் சிதைத்த குற்றச்சாட்டுகளை மறுத்துள்ள பீட்டர் தற்போது கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார். கோபென்ஹேகன் அருகே உள்ள கடல் பகுதியில் பல தடவைகள் சுழியோடிகள் தேடுதல்களை மேற்கொண்ட நிலையிலேயே இவ்வாறு பைகள் மீட்கப்பட்டுள்ளன. அவை மேலே மிதந்து வராமல் இருக்க கனம் மிகுந்த உலோகத் துண்டுகளுடன் கட்டி கடலுக்குள் வீசப்பட்டிருந்தன.

அந்தத் தலையில் காயங்கள் எதுவும் இல்லை என்றும், அது கிம் வாலின் தலைதான் என்று தடயவியல் பல்மருத்துவர் உறுதிப்படுத்தியுள்ளார். கிம் வாலின் விலா எலும்பு மற்றும் பிறப்பு உறுப்பில் அவரது மரணம் நிகழ்ந்த சமயம் அல்லது மரணத்திற்கு சற்று கழித்து கத்தியால் ஏற்படுத்தப்பட்ட காயங்கள் இருப்பது பிரேதப் பரிசோதனையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் 21ம் திகதி அவரின் உடல் கண்டெடுக்கப்பட்ட இடத்தில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் கடலுக்குள் தற்போது தலையும், காலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவர் இறந்ததற்கான காரணம் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. ஒரு பெண்ணின் தலை வெட்டப்படும் காணொளியொன்று, பீட்டருக்கு சொந்தமானது என்று சந்தேகிக்கப்படும் ஹார்ட் டிரைவ் ஒன்று கிடைத்துள்ளதாக காவல்துறையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கோபென்ஹேகன் கடற்கரையில் கிம் வாலை இறக்கி விட்டதாக முதலில் தெரிவித்த பீட்டர், பின்னர் தன்னுடன் கப்பலில் இருந்தபோது தலையில் ஏற்பட்ட ஒரு காயத்தால் அவர் இறந்துவிட்டதால், கடலுக்குள்ளேயே அவரைப் புதைத்துவிட்டதாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வருடம் நடைபெற்ற சோவியத் ஒன்றிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்த வரைபடம் அமைக்கப்பட்டிருந்தது. ஹிட்லர் பயன்படுத்திய இந்த உலக உருண்டை தற்போது 65,000 டொலர்களுக்கு அமெரிக்காவில் ஏலம் விடப்பட்டது. அதுமட்டுமல்லாமல் அதே சமயத்தில் எடுத்து வரப்பட்ட ஹிட்லர் பயன்படுத்திய போர் உடை ஒன்றும் (அதில் அடோல்ஃப் ஹிட்லர் என்பதை குறிக்கும் விதமாக ஏ. ஹெச். என்று பதியப்பட்டிருக்கும்) 10,000 டொலர்களுக்கு ஏலம் போனது.

## சீனக் கோப்பையின் பெறுமதி 37.7 மில்லியன் டொலர்!

1000 ஆண்டுகளுக்கு முன்பு சீனாவில் தயாரிக்கப்பட்ட ஒரு சிறிய கோப்பை 37.7 மில்லியன் டொலர் ஏலம் போனது. இது சாங் மன்னர் ஆட்சி காலத்தில் அதாவது கி.பி.960–1127ம் ஆண்டு தயாரிக்கப்பட்டது. இந்த கோப்பை ஹொங்கொங்கில் சோத்பீ



மையத்தில் ஏலம் விடப்பட்டது. இதை வாங்கியவர் யார் என்ற விவரத்தை வெளியிட அந்நிறுவனம் மறுத்துவிட்டது. போட்டி கடுமையாக இருந்ததால் ஏலம் 20 நிமிட நேரம் நடந்தது. இதற்கு முன்பு 2014ம் ஆண்டு மிங் மன்னர் ஆட்சி காலத்தில் தயாரிக்கப்பட்ட சீன கோப்பை அதிகபட்சமாக 36.3 மில்லியன் டொலர் ஏலம் போனது. தற்போது அந்த சாதனையை இக்கோப்பை முறியடித்துள்ளது.

## ஐ.நா. சபையின் உயர் பதவியில் தமிழ்ப்பெண்!

ஐக்கிய நாடுகள் சபையின் உலக சுகாதார நிறுவனத்தின் துணை இயக்குனராக தமிழ்ப் பெண் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். தமிழகத்தைச் சேர்ந்த 58 வயதான சௌமியா சுவாமிநாதன் என்பவரே இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் குழந்தைகள் நல மருத்துவராவார். இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவராகவும்



கடமையாற்றி வருகின்றார். கசநோய்க்கான ஆராய்ச்சி மூலம் மருத்துவ விஞ்ஞானியாக அறியப்பட்டார். இவர் சென்னையில் தேசிய காசநோய் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார். பசுமை புரட்சியின் தந்தை என்ற அழைக்கப்படும் வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதனின் மகள் சௌமியா சுவாமிநாதன் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மக்களின் குறைகளைக்....

சம்பூர் பகுதியில் கொக்கட்டி எனும் இடத்தில் சம்பூர் காவல்துறையினரின் உதவியுடன், முஸ்லிம் குடியேற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை பிரதேச செயலளார் மேற்கொண்டிருந்தார். எனினும், அவரின் திட்டமானது சம்பூர் மக்களினால் முறியடிக்கப்பட்ட நிலையில், இதனை வைத்துக் கொண்டு சந்தர்ப்பங்களை பார்த்து சம்பூர் மக்களை பழிதீர்த்துவருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். இதனைத்தட்டிக்கேட்க எமது மக்களுக்கு யார் இருக்கின்றார்கள்?

இவ்வாறு மக்கள் அன்றாடம் பலபிரச்சினைகளை எதிர்நோக்கிவரும் நிலையில், மக்களின் பிரச்சினைகளை ஆராய்து தீர்க்க முடியாத தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி போன்ற அரசியல் கட்சிகள் மக்களின் வாக்குகளை மாத்திரம் சூறையாடுவது எப்படி என்று கங்கணம்கட்டி வருன்றனர். தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுன்ற உறுப்பினர்கள் உதவாக்கரைகளாக போய்விட்டார்கள் என்பது வெளிப்படையான உண்மை. இந்நிலையில், தமிழ் தேசிய மக்கள் முன்னணியாவது மக்களின் குறைகளை தீர்ப்பார்கள் என எதிர்பார்த்தால், அவர்கள் மக்களின் பிரச்சினையை வைத்துக் கொண்டு அரசியல் நடத்துகின்றனர். கேட்டால் எங்களுக்கு பலம் இல்லை. எங்களை எம்.பி ஆக்குக்கள் என மக்களைக் கோருகின்றார்கள். எது எப்படியான போதிலும், கிழக்கில் உள்ளவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டால் மாத்திரம் தமிழர்களின் உரிமைகளை பெற்று நிம்மதியாக வாழமுடியும். அவ்வாறு இல்லாவிட்டால் கிழக்கில் தமிழர்கள் வாழ்ந்தார்களா? என்ற கேள்வி பின்வரும் காலங்களில் எழும் என்பது உண்மை.

## திணிக்கப்படும் கடன்...

நான்கு மணி நேரமாகியும் அந்த நிதி நிறுவன ஊழியர்கள் வீட்டை விட்டு செல்லாத காரணத்தினால் அவர் நான்கு மணி நேரமும் கிணற்றுக்குள்ளேயே பதுங்கி இருந்துள்ளார்.

பின்னர் அவர்கள் அங்கிருந்து சென்ற பின்னே அவர் வெளியே வந்துள்ளார். இது பெரும் வேதனைக்கு உரிய விடயம் இவ்வாறு பல இடங்களில் நாளுக்கு நாள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறே அண்மையில் தென்மராட்சிப் பகுதியிலும் ஒரு சம்பவம் இடம்பெற்றுள்ளது. அன்றைய தினம் இரவு 8.30 மணியளவில் தமது நிதி நிறுவனத்தில் கடன் பெற்று ஒரு தவணைக் கடனை உரிய நேரத்தில் செலுத்தாததால், குறித்த கடனாளியின் வீட்டிற்குள் நுழைந்தே மேற்படி தனியார்நிறுவன ஊழியர்கள் அட்டகாசத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் நிறுவனமொன்றில் சாவகச்சேரி கெருடாவில் கிராம்புவில்பகுதியில் வசிக்கும் குறித்த பெண் கடனடிப்படையில் ஒரு லட்சம் ரூபாவை பெற்றுள்ளார்.

அதற்காக ஒவ்வொரு வாரமும் 2000 ரூபாவினை கட்டுப்பணமாக அவர் செலுத்த வேண்டும்.

இந்நிலையில் குறித்த தினம் குறித்த வங்கியிடம் கடன் பெற்றவர் வாராந்த பணத்தினை செலுத்த முடியாத சூழ்நிலையில் மறுதினம் தினம் செலுத்துவதாகக் கூறியுள்ளார்.

இதனை ஏற்றுக்கொள்ளாத நிதி நிறுவன ஊழியர்கள் இருவர் குறித்த பெண்ணின் வீட்டிற்கு இரவு 8.30 மணிக்குச் சென்று தகாத வார்த்தை பிரயோகத்தில் ஈடுபட்டு,தனிமையில் இருந்த பெண்ணை துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்துமுள்ளனர்.

இதன்போது கடன் பெற்ற பெண்ணின் கணவர் குறித்த நேரத்தில் அங்கு இருக்கவில்லை. பெண்கள் மட்டும் தனியாக இருக்கும் நேரத்திலேயே மேற்படி நிதி நிறுவன ஊழியர்கள் அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

மாலை 5.30 பிற்பாடு நிதிநிறுவன ஊழியர்கள் கடன் பெற்றவர்களின் வீடுகளுக்கு செல்ல முடியாது என்று வடக்கு மாகாண சபை சட்டம் அமுல்படுத்திய பின்பே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளமை பலரது விசனத்துக்கும் உள்ளாகியுள்ளது. இதுதான் எமது தாயகத்தின் இன்றைய நிலை. இந்நிலை தொடருமாயின் பல பெண்களின் வாழ்க்கைமுறை கேள்விக்குரியதே! இது சிந்திக்கும் நேரமல்ல சிந்தித்து செயற்படும் நேரம்!!

*(சூறையாடல்கள் தொடரும்)*

## கட்டலோனியா தனி...

இதுகுறித்து பிரான்சுக்கான ஸ்பெயின் தூதர் ஃபெர்னாண்டா காடெரேரா கூறுகையில், ஸ்பெயினிடமிருந்து கட்டலோனியா சுதந்திரம் பெறுவது என்ற பேச்சுக்கே இடமில்லை. இல்லாத ஒன்றை கட்டலோனியா அதிபரால் தள்ளி வைக்க முடியாது என்றார். இதற்கிடையே, கட்டலோனியாவை தனி நாடாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அந்நாட்டு மன்னர் பிலிப் அவர்களும் நிராகரித்துள்ளார்.

இதேவேளை, கட்டலோனியா மாகாண அரசு தனது பிரிவினைவாதப் போக்கைக் கைவிடாவிட்டால் அந்தப் பிரதேசத்தின் சுயாட்சி அதிகாரத்தையே இரத்து செய்ய வேண்டி வரும் என்று ஸ்பெயின் பிரதமர் மரியானோ ரஜோய் முன்னதாக எச்சரித்திருந்தார். இதுகுறித்து அவர் கூறுகையில், தனி நாடு அறிவிப்பு மசோதாவைத் தாக்கல் செய்யும் திட்டத்தை கட்டலோனியா மாகாண அரசு உடனடியாகக் கைவிட வேண்டும். அரசியல் சாசனத்துக்கு எதிராக பிரதேச அரசு எடுக்கும் எந்த முடிவினாலும் ஒரு பயனும் கிடையாது. சட்டத்துக்குப் புறம்பான அறிவிப்புகள், மாகாணப் பேரவை நடவடிக்கைகள் இருக்குமானால் அதன் விளைவுகளைப் பிரிவினைவாதிகள் சந்தித்தே ஆக வேண்டும். தனி நாடு என்ற பேச்சுக்கே இடமில்லை. அத்துமீறினால், தற்போதுள்ள சுயாட்சி அதிகாரத்தை இரத்து செய்யவும் மத்திய அரசு தயங்காது. ஆனால் உரிய நேரத்தில் உரிய நடவடிக்கைகளை எடுப்போம் என்று எச்சரித்திருந்தார்.

ஆனால், கட்டலோனியா தனிநாடு கோரிக்கை தொடர்பான இறுதி முடிவை எடுக்க ஐந்து நாட்கள் அவகாசம் அளிப்பதாக தற்போது அவர் கட்டலோனியாவிற்கு அறிவித்துள்ளார். ஸ்பெய்ன் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய அந்நாட்டு பிரதமர் மரியானோ ரஜாய், கட்டலோனியா தனி நாடாகப் பிரிவதுகுறித்த முடிவை இன்னும் ஐந்து நாட்களில் உறுதியாகத் தெரியப்படுத்த வேண்டும். எதிர்வரும் 19ம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்குள் கட்டலோனியா தனது முடிவை ஸ்பெய்ன் மக்களுக்கு அறிவிக்க வேண்டும் எனக் கூறினார். கட்டலோனியா பிரியக்கூடாது என வலியுறுத்தி ஸ்பெய்ன் நாட்டின் ஒற்றுமைக்காகப் பல்லாயிரக்கணக்கான மக்கள் அமைதிப் பேரணி நடத்திவருகின்றனர். அதேவேளையில் கட்டலோனியா மக்கள், தனிநாடு கோரிக்கையுடன் போராட்டம் நடத்திவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலுக்காக...

விலகுவதற்கான ஏற்பாடுகளை செய்யும்படி வெளியுறவுத் துறைக்கு அறிவுறுத்தியிருப்பதாக பெஞ்சமின் நேதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.

இதுஇவ்வாறிருக்க, யுனெஸ்கோ அமைப்பின் புதிய தலைவராக பிரான்சின் முன்னாள் கலாசாரத் துறை அமைச்சர் Audrey Azoulay கடந்த 13ம் திகதி வெள்ளிக்கிழமை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பரிசில் நடைபெற்ற வாக்கெடுப்பில், யுனெஸ்கோ உறுப்பு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்று வாக்களித்தனர்.

இதில் அவர், தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட கட்டாரைச் சேர்ந்த Hamad bin Abdulaziz al-Kawari என்பவரைக் காட்டிலும் இரு வாக்குகள் (30 – 28) அதிகமாகப் பெற்று




வெற்றி பெற்றார். அடுத்த மாதம் யுனெஸ்கோ பொதுக் குழு கூடி இதை முறைப்படி அறிவிக்கும் எனக் கூறப்பட்டுள்ளது.

## வியக்கவைக்கும் பழஞ்சோற்...

தவிர, சிறு குடலுக்கு நன்மை செய்யும் கிருமிகள் ட்ரில்லியன் கணக்கில் இருக்கின்றன.இது நமது உணவுப்பாதையை ஆரோக்கியமாக வைத்திருக்கிறதாம்.

சோற்றில் இரவிலே தண்ணீர் ஊற்றி வைப்பதால் இலட்சக்கணக்கான நல்ல பக்டீரியாக்கள் உருவாகிறது. மறுநாள் இதை குடிப்பதால், உடல் சூட்டை தணிப்பதோடு குடல் புண், வயிற்று வலி போன்றவை குணமாகும். அதுவுமில்லாமல் இதில் இருக்கும், நார்ச்சத்து மலச்சிக்கல் இல்லாமல் காலைக் கடனை முடிக்க வழிவகுக்கின்றது.

நமது உணவு முறைகள் இப்போது மாறி விட்டன. நமது முன்னோர் சாப்பிட்ட பழைய சோறு, வெங்காயம் இவை இன்றளவும் அவர்களை திடகாத்திரமாக வைத்திருக்கிறது. துரித உணவு சாப்பிட்டு வரும் இன்றைய இளைய தலைமுறையினர், 30 வயதிலேயே சர்க்கரை, இதய நோய்களால் பாதிக்கப்படுவதை பார்க்க முடிகிறது. ஆகவே, பழைய சோறு சாப்பிடுவதை இனி வழக்கமாக்கிக் கொண்டால் ஆரோக்கியம் நம்மை தேடி வரும். பழைய சோறு என்றால் கேவலமாக நினைக்கும் நாம், அதிலுள்ள நன்மைகள் குறித்து அறிந்து கொண்டால் இனி பழைய சோறை மிக பெருமையாக காண்பீர்கள். இதனுடன் இரண்டு சிறிய வெங்காயம் சேர்த்து உண்டால், அபரிமிதமான நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கிறது. சிறிய வெங்காயம் உங்கள் உடலில் உள்ள அதிகப்படியான் கொழுப்பைக் குறைத்து மாரடைப்பை தடுக்கும் சக்தி அதற்கு உள்ளது. எனவே, இப்போதைய துரித உணவுகளைத் தவிர்த்துவிட்டு பழஞ்சோற்றுக்கு மாறுவோமா..?

## நெப்போலியனின் மர்ம...

அதனால் நெப்போலியனின் மரணத்துக்கு காரணம் விசமாக இருக்கலாம் என்று கண்டுபிடித்தார்கள். விசம் கலந்த காற்றை சுவாசித்ததால், நெப்போலியன் மரணம் அடைந்ததாக லக்ஸம்பேர்க் பல்கலைக்கழகத்தை சேர்ந்த ரொபர்ட் வென்னிங் அறிவித்தார். பின் நெப்போலியன் சிறை வைக்கப்பட்ட அறையை ஆய்வு செய்ததில் மேலும் இரண்டு ஆதாரங்கள் கிடைத்தன.

ஒன்று அங்கிருந்த ஓவியம். இரண்டு அந்த அறையின் சுவரை அலங்கரித்த சுவர்பேப்பர்கள். இவை இரண்டிலும் மெல்லக் கொல்லும் விசம் பூசப்பட்டிருந்தது. அந்த ஓவியத்தில் பாம்பின் விசத்தை ஒரு வண்ணமாக பயன்படுத்தி இருந்தனர். அந்த ஓவியத்தின் அருகிலேயே நெப்போலியன் இருந்ததால் விசம் கலந்த காற்றை தொடர்ந்து சுவாசித்து சுவாசித்து இறந்து விட்டார் என்று ஒரு தரப்பு ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். சுவர் பேப்பரை ஒட்டும் பசையில் விசத்தை கலந்திருந்ததால், பசி தாங்க முடியாத நெப்போலியன் அந்த சுவர் பேப்பரை கிழித்து தின்றதால் இறந்தார் என்று ஒரு தரப்பும் அறிவித்தது. இன்னும் முழுமையான தீர்வுக்கு வர முடியாமல் ஆராய்ச்சியாளர்கள் சரித்திரத்தை புரட்டிக் கொண்டே இருக்கிறார்கள்.

## *தன்னம்பிக்கைப் பால...*

எனினும் பாலம் கட்டும் தனது தன்நம்பிக்கையை அவர் இழக்கவில்லை. சைகை மொழியில் தன் மனைவியிடம் தகவல் தொடர்புகொண்டு, அவரது கணிப்புகளையும், கணக்குகளையும் மனைவி புரிந்துகொண்டு மீண்டும் பாலம் கட்டும் பணியைத் தொடங்கினார். பதினொரு வருடங்களில் 'ப்ரூக்ளின் பிரிட்ஜ் (Brooklyn Bridge)' என்ற பெயரில் பாலம் எழுந்து இன்றும் தன்னம்பிக்கையின் அடையாளமாக திகழ்கிறது. 1825 மீற்றர் நீளமுள்ள இப்பாலம் 1883ம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டபோது, இதுவே உலகின் மிகப்பெரிய தொங்குபாலமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. பாலம் திறக்கப்பட்ட முதல் நாளில் மட்டும் 1,800 வாகனங்களும் 150,300 மக்களும் இப்பாலத்தைக் கடந்தனர். ஆனால் இந்தப் பாலத்தைக் கட்டுவதற்காக அப்போது 15.5 மில்லியன் டொலர் செலவாகியது மட்டுமல்ல, ஜோன் ஒகஸ்டஸ் ரோப்ளிங் உட்பட 27 உயிர்களும் பலியானது என்பது குறிப்பிடத்தக்கது.

## கண்ணை மறைத்த....

மேலும் கோபமுற்ற இளைஞன், பெருமுயற்சி எடுத்து, கையை வீசி, அருகிலிருந்த கிளை ஒன்றை பலமாகப் பற்றிக் கொண்டான். மற்றும் பெரியவரைப் பார்த்து, "பெரியவரே! நான் கீழே வந்தால் உம்மைச் சும்மா விடமாட்டேன்.." என்று எச்சரித்தான். பெரியவரோ, அதற்கும் பதில் சொல்லாமல், மேலும் ஒரு சிறிய கல்லை எடுத்து அவன் மீது எறிந்தார்!

இளைஞனுக்கு கோபம் அதிகமாகிவிட்டது. அந்தக் கோபத்தில், மேலும் முயற்சி எடுத்து பெரிய கிளை மீது ஏறிவிட்டான்! இப்போது கீழே வருவது அவனுக்கு சுலபமாக இருந்தது! விடுவிடுவென கீழே இறங்கினான். முதியவரை நோக்கி வந்தான்! அவரை நன்றாகத் திட்டத் தொடங்கினான்!

"ஏன் அப்படிச் செய்தீர்?...,உம்மிடம் நான் உதவிதானே கேட்டேன்?" என்று கத்தினான் இளைஞன்!

பெரியவர் அமைதியாகச் சிரித்துக் கொண்டே, "தம்பி...,உனக்கு நான் உதவிதான் செய்தேன்!" என்றார். இளைஞனோ திருதிருவென விழித்தான்.

பெரியவரோ அவனை நோக்கி, "நான் உன்னை முதலில் பார்த்தபோது, நீ பயத்தால் உறைந்து போயிருந்தாய்!...,உன் மூளை வேலை செய்யவில்லை. நான் கல்லை விட்டு எறிந்ததும் உன் பயம் மறைய ஆரம்பித்தது! நீ என்னை எப்படிப் பிடிப்பது என்று சிந்திக்க ஆரம்பித்து விட்டாய்! யோசிக்க ஆரம்பித்து விட்டாய்! நீ கொண்டிருந்த பயத்தால் உன்னை உன்னாலேயே காப்பாற்றிக் கொள்ள முடியும் என்பது உன் அறிவுக்குப் புலப்படவில்லை! உன் பயம் உன் கண்ணை மறைத்துக் கொண்டிருந்தது! அதிலிருந்து உன்னை நான் திசை திருப்பினேன்..." பெரியவர் சொல்லி முடிக்க, இளைஞன் உண்மையை உணர்ந்து அவருக்கு நன்றி கூறிச் சென்றான்.

- அ.ராஜா ரகுமான்

**கபறினா இறைச்சிக்கடை**

தினமும் உடன் இறைச்சி வகைகளையும், விசேடமாக ஆட்டிறைச்சிப் பங்கையும் பெற்றுக்கொள்ள...



BOUCHERIE GABARINA

62, Rue Louis Blanc
75010 Paris
Mo : La Chapelle Ou Gare du Nord
Tel : 01 40 34 05 35
Fax : 01 40 34 09 76

207, rue fbg st Denis
75010 Paris
Tel : 01 46 07 46 35
Fax : 01 46 07 41 30

செல்லில் - உங்கள் அபிமான பேபியின் புதிய உதயம்



**அபி சலூன்**

தொடரந்து நிலையத்தில் இருந்து 2 நிமிட நடை தூரம்

11 avenue Maréchal Foch
77500 Chelles
07 82 31 73 94
07 51 28 81 34

**DEVI Textiles & Tailors**



சாரி பிளவுஸ் 30 நிமிடங்களில் தைத்துத் தரப்படும்

ஆண் பெண் இருபாலாருக்கும் அனைத்து விதமான ஆடைகளும் மற்றும் உங்கள் வசதிக்கு அமைவான தோல்பைகளும் உங்கள் எண்ணத்திற்கேற்ப வடிவமைத்துக் கொடுக்கப்படும்.

29, Bld de la Chapelle, 75010 Paris
M°: La Chapelle (ligne 2)
Tél: 09 51 01 85 59 - Suresh: 07 81 29 86 50

உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை

**ஈழமுரசு**

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள் ஈழமுரசில் வெளியிட வேண்டுமா?**

சகல பொதுச்சங்கங்கள் மற்றும் தமிழ்ச்சங்கங்களின் நிகழ்வுகளின் அறிவித்தல்கள் இலவசம்*

விளம்பரங்கள்,
அறிவித்தல்கள்,
துயர்பகிர்வுகள்,
சட்டரீதியான அறிவித்தல்கள்,
விற்பனை, வாடகை சிறு அறிவித்தல்கள்

பிரான்சில் நடக்கும் துயர்பகிர்வுகளின் அறிவித்தல்கள் இலவசம்*

இணையத்திலும்: www.eelamurazu.com

தொடர்புகளுக்கு:
mediacentre
BP 40
93141 Bondy PDC, France
Tel: 00 33 970 464 464
Port: 00 33 781 808 116

*நிபந்தனைக்குட்பட்டது

பாரிஸ் லா சப்பலில்



**AMBAAL STORE**

பல் பொருள் அங்காடி

Tél: 01 42 05 41 85
192, rue du Fbg.st.Denis 75010 Paris

**VICHNESH SHOP**

அனைத்து வகையான மளிகைப் பொருட்கள் மற்றும் அனைத்து நாடுகளுக்கான தொலை பேசி அட்டைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்



8 Esplanade de l europe
95100 Argenteuil
Tel: 01 39 81 35 60

ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான சிகையலங்கார நிலையம்.



COIFFURE VITHUSA
TÉL: 06 52 44 89 27
40, RUE HENRI BARBUSSE
93300 AUBERVILLERS
M° : Aubervilers 4 chemmins
Bus : 170,150,249,152

பிரெஞ்சு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்!

**திரு.சகாதேவன்**

SAGADEVAN PIERRE

எமது மொழிபெயர்ப்புக்கள் அனைத்து அரசு நிறுவனங்களிலும் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும். எம்மிடம் நேரடியாக வருபவர்களுக்கு சலுகையளிக்கப்படும்.

தொடர்பு கொள்ள
சகாதேவன் மொழிபெயர்ப்பு நிலையம்
(Leader Price கடைக்கு அருகாமையில்)
26, rue Philippe de Girard,75010 Paris
Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06
E.mail: saga_de_van@yahoo.fr

**S.P.Raju Jewellery**

பழைய நகைகளுக்கு புதிய நகைகள் வழங்குகிறோம்!!!!



199 rue du Fbg St Denis,
75010 Paris
Tél: 01 58 20 17 33

13 rue cail, 75010 Paris
Tél: 01 46 07 43 42

**சுவர்ண மஹால்**
**SWARNA MAHAL**



பழைய நகைகளைக் கொடுத்து அதற்கு பெறுமதியான புதிய நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்!
ஓடர் நகைகள் எதுவாயினும் ஒரு கிழமைத் தவணையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்!!
www.swarnamahal-france.com

122 Av Paul Vaillant Couturier 93120 La Courneuve
Tél - 01 48 36 40 75 Port - 06 50 17 51 91 / 06 21 23 87 25
Email: swarnamahal93120@gmail.com


Mohan
Jewellery Mart
பழைய நகைகளைக் கொடுத்து
புதிய நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்
VISA
Aurore
3/4 Fois sans Frais
(Piéce d'identité + Rib + C.B)
201,rue du fg. St. Denis 75010 Paris
Tel: 01 42 05 65 26 Fax: 09 50 31 01 82
Mo: La Chapelle / Gare du Nord


பிரசாத்தின்
OLYMPIC PRINTERS
Tous les services d'impression
Ria
பணப்பரிமாற்று சேவை
அழைப்பிதழ்கள்
விளம்பர பிரசுரங்கள்
அறிவித்தல், அஞ்சலி பிரசுரங்கள்
பிறந்தநாள் பனர்கள்
மெனு காட்
விசிட்டிங் காட் அனைத்தும்
அழகாக - மலிவாக - விரைவாக
அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள
அச்சுப்பதிப்பு வேலையில் நீண்டகாலம்
அனுபவம் பெற்றவர்கள்
T-SHIRTS PRINT
அச்சுப்பதிப்பு வேலைகள் அனைத்தையும் அதிவேகமாகப் பூர்த்தி செய்ய லாச்சப்பலில்
ஒலிம்பிக் அச்சகம்
EN FACE DE
31, RUE PHILIPPE DE GIRARD - 75010 PARIS
லீடர் பிறைஸ் எதிராக
LEADER PRICE
Métro : La chapelle ou Gare du Nord - Contact : 09 51 55 51 14 - 06 51 10 44 78


ஒரே தடவையில் தீர்த்துக் கொள்ளுங்கள்!
உணவகங்கள் - கடைகள் - தொழிற்சாலைகள் போன்றவற்றில்
STOP !
எலிகள் - சுண்டெலிகள்
கரப்பான் பூச்சிகள்
தொல்லைகொடுக்கும் பூச்சிகள்
அனைத்திற்கும் சிறந்தவல்லுனர்கள் மூலம்
ஒரே தடவையில்
பயன்பெற்றிட நாடுங்கள்
14 Rue Charles V,
75004 Paris.
DIAPHANECONCEPT
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
N° de certificat 10KX50000-4107
Tél.: 01 60 07 34 29
சுதா / விமல் : 06 34 18 80 04